# நிலவும் சுடும்



ராணி சீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவும் சுடும்

(சிறுகதைத்தொகுதி)

ராணி சீதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | - | நிலவும் சுடும் |
| இலக்கிய வகை | - | சிறுகதைத் தொகுப்பு |
| ஆசிரியர் | - | ராணி சீதரன் |
| முகவரி | - | 136, மத்திய வீதி, திருகோணமலை. |
| தொலைபேசி | - | 077 413 72 44 / 077 7243619 |
| பதிப்புரிமை | - | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | - | 10. 10. 2010 |
| எழுத்து | - | 12 புள்ளி |
| பக்கங்கள் | - | 154 |
| பிரதிகள் | - | 500 |
| அச்சுப் பதிப்பு | - | சேமமடு பதிப்பகம், யூ.ஜி. 50, பீப்பள்ஸ் பார்க் கொழும்பு - 11 தொ.பே:011-2472362,2331475 |
| வெளியீடு | - | யது வெளியீடு 2010 |
| விலை | - | 250.00 |

**I S B N** - 978-955-97102-4-0

| | | |
|---|---|---|
| Title | - | **Nilavum Sudum** |
| Author | - | Rani Seetharan |
| Edition | - | 10.10. 2010 |
| Price | - | 250.00 |


# சமர்ப்பணம்



**என் அன்புத் தங்கை ரசிந்தாவுக்கு...**

**என் மன வானில்**
**உலவிவரும் என்னுயிரே!**
**உன் எழில் வதனம்**
**என் கண்கள் சுமக்க**
**இனிய குரலென் செவிகளில்**
**இன்னிசையாய் ஒலிக்க**
**நீ எனக்குள் தேவதையாய்**
**வாழ்கின்றாய் எப்போதும்**
**அதற்கான வெளிப்படுத்தல்**
**இந்நூலாய் உலவுமடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகளின் வெளிப்பாடு...

வாழ்வே சாவாகிப்போன வரம்பு மீறிய துன்ப நிகழ்வுகளை உயிர்ச் சித்திரங்களாகத் தீட்டியிருக்கிறார் எழுத்தாளர் ராணி சீதரன். இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள 14 கதைகளில் பெரும்பாலான நிகழ்வுகள் இலங்கை மண்ணில் சொந்த நாடே (அன்னியமாகி, சகோதர இனங்களே பகையாகி) ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாகி, கண்கள் இரத்தக் குளமாகி, இருப்பதைவிட இறத்தலே மேல் என்று கணந்தோறும் கதறித் துடிக்கும் தமிழ்ப் பெண்களின் ஆழமான வலிகளின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளதோடு, மனதுக்கு இனிமையானவையும் துன்பத்தைத் தருவதாக இருப்பதால் இக் கதைத் தொகுதிக்கு 'நிலவும் சுடும்' என்ற பொருள் பொதிந்த தலைப்பினை ஆசிரியர் சூட்டியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

சிறுகதை என்பது ஒன்றை விபரிப்பது, ஒரு புள்ளியில் பேருருவம் காட்டுவது. கருத்துக் களமும், தொடக்கமும் முடிவும், தலைப்பும், மொழிநடையும் சிறந்திருந்தால் காலவெள்ளத்தில் அப்படைப்புகள் நிலைபெறும். எங்கே தொடங்கி எப்படி முடிக்க வேண்டும் என்பதும், எவற்றைக் கருப்பொருளாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதும், மையப் பொருளைப் புலப்படுத்தும் வகையில் தலைப்பினைச் சூட்ட வேண்டும் என்பதும், பாத்திரங்களின் இயல்பு களுக்கேற்ப மொழி நடையினைக் கையாள வேண்டும் என்பதிலும் இவர் மிகவும் நுட்பமாகக் கவனம் செலுத்தியுள்ளார். இக் கூறுகள் அனைத்திலும் இவரது முன்னைய சிறுகதைகளிலிருந்து வளர் நிலை காணப்படுவதனை என்னால் உணரமுடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கருகிடும் நினைவுகள்' என்ற சிறுகதையில் விசாரணை என்னும் பெயரில் பருவம் வந்த பெண்களை நள்ளிரவில் காவல் நிலையத்துக்கு அழைத்துச் செல்வதால் ஏற்படும் அவலத்தினை 'கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்ட குற்றவாளிகளைப் போல நால்வரும் விடுதியிலிருந்து அழைத்து வரப்பட்டபோது வேடிக்கை பார்த்து நின்ற பொதுமக்களின் அசிங்கப் பார்வைகள், வசவு மொழிகள், கூச்சல்கள் அத்தனையையும் சகித்துக் கொண்டு வாகனத்தில் ஏற்றப்பட்டபோது உடலிலிருந்து ஒரு துணிகூட இல்லாமல் கழன்றுவிட்டது போன்ற கூச்ச உணர்வால் கூனிக் குறுகிப்போன சாலினி' என விவரித்துச் செல்வது உணர்வுகளைப் புலப்படுத்தும் திறனில் ஆசிரியர் விஞ்சி நிற்பதனை விளக்குவதாக உள்ளது. ஒருவருக்கொருவர் உதவி வாழும் சிங்களப் பிள்ளைகளைப் பார்த்து தங்களுக்குள் பகைத்தும் பரிகசித்தும் வாழும் தமிழ்ப் பிள்ளைகளை ஒப்பிட்டு நோக்கி மிகுந்த வேதனைப்படுகின்றார் ஆசிரியர் என்பதற்கு கீழ்வரும் பகுதியினை எடுத்துக்காட்டலாம். 'எமக்கென்று சில தனித்துவப் பண்புகளும் கொள்கைகளும் கட்டாயம் தேவை. சிங்களப் பிள்ளைகளைப் பார்த்தாவது நாங்கள் பழக வேண்டாமா? எங்களிடையே தலைக்கனம் தான் மேலோங்கியுள்ளது.'

பள்ளியில், பேருந்து நிலையத்தில், பேருந்தில், வீடுகளில் நடைபெறும் நிகழ்வுகளையே ராணி சீதரன் கதைகளில் சித்திரித்திருப்பது அவர் தம் அனுபவ வட்டங்களே களமானது என்பதை உணர்த்திநிற்கின்றது.

வாட்டி எடுக்கும் பசித் துன்பத்தில் பாதைமாறிப் போன தாய்மார்களையும், பள்ளிச் சிறுமிகளையும் காட்டுகிறது 'இங்கேயும் ஒரு பொன்னகரம்' என்ற சிறுகதை. இசைவில்லாமல் சிதைக்கப் பட்டவர்கள் பறிபோனதை நினைத்துப் பரிதவிக்காமல் மனக் குமுறல்களோடு வாழ்ந்து தீரும் நடப்பியலைப் புலப்படுத்தி அந் நிலைப்பாட்டுக்கு ஆதரவுக்குரல் கொடுப்பதாக அமைந்துள்ளது 'ஊசல்' என்னும் கதை. இக்கதை ஆசிரியரின் முற்போக்குச் சிந்தனையினை வெளிப்படுத்துவதாக உள்ளது. பண்பாட்டுப் பழமைக்கு அதிர்ச்சி தந்த ஜெயகாந்தனின் அக்கினிப் பிரவேசத்தை விஞ்சி நிற்கிறது இக்கதையின் கருப்பொருள்.



மானுடச்சிறுமைக்கு மதங்கள் காரணமில்லை. மதவெறி பிடித்த மனிதர்கள் காரணம் என்பதை 'மீண்டும் வருமா?' என்ற கதை அருமையாக வெளிப்படுத்தியுள்ளது. தான் சொல்ல வந்த கருத்து வாசிப்பவர் மனதில் பதிய வேண்டும் என்ற உணர்வின் காரணமாக வெளிப்படையாகவே 'சிலை ஒன்று வந்த பின்னணியில் எத்தனையோ குழப்பங்களும் இழப்புகளும் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து முடிந்து விட்டன. எதற்குமே நான் பொறுப்பு அல்ல என்பது போல அப்படியே அதே நிஷ்ட்டை நிலையில் புத்தர் காட்சி அளித்தார். மேலே மலை உச்சியில் கோணேஸ்வரரின் கோபுரமும் மாற்றம் எதுவும் இன்றி அப்படியேதான் இருந்தது' என்று எழுதிச்செல்கின்றார் ஆசிரியர்.

மானுடப் பண்புகளை வளர்த்தெடுக்க வேண்டிய மதங்கள், மதம் பிடித்த மனிதர்களால் மானுடத்தை வதைப்பது வரலாறாகி வரும் நிலையில், எப்படியும் வாழ்ந்தாக வேண்டிய மனிதன் மதம் மாறுவதை 'மா(ற்)று' என்ற கதையில் ஒருமுறைக்கு இருமுறையாக, 'சும்மா போங்க ஐயா. பெற்ற பிள்ளைகளே ஆதரிக்க மறந்துபோகும் இந்தக் காலத்திலே முதியவர்களை பராமரிக்கும் முதியோர் இல்லம், வசதியற்ற மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்க விடுதி வசதி, வாழ வழியற்றோரை வழிப்படுத்தி ஊக்குவிக்கும் நிதியுதவி இவற்றையெல்லாம் உங்கட மதம் செய்கிறதா? சொல்லுங்கோ? அவர்கள் செய்கிறார்கள். அதுதான் எங்களுக்குத் தேவை. நீங்கள் சும்மா கோயில்களையும் கோபுரங்களையும் உயர உயர கட்டுங்கோ. மனிதன் சாப்பாடில்லாமல் சாகிறான். நீங்கள் கோயிலில் பாலாலும் பழத்தாலும் அபிஷேகம் செய்யுங்கோ. முதலில் மனிதனுக்கு எது தேவை என்பதை அறிந்து அதை செய்து கொடுங்கோ. பிறகு மற்றதைப் பற்றிச் சிந்திப்போம்' என்ற சிவலிங்கத்தின் கூற்றிலிருந்து நியாயப்படுத்தியுள்ளார் ஆசிரியர். இது ஆசிரியரின் சமுதாய நோக்கு ஆழமானது என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் தங்களுக்குள் உயர்வு தாழ்வு பேதம் பாராட்டிப் பிரிவினைகளை வளர்த்துச் சண்டையிட்டதன் பயனே இன்றைய கொடுமைகளுக்கெல்லாம் காரணமாக உள்ளது என்று ஆசிரியர் 'புரியாமலே' என்ற கதையில் கருத்துரைத்திருப்பது, இழப்பு நேரத்தில் இனக் குறைபாடுகளை எண்ணிப் பார்த்து வழிப்படுத்துவதாக உள்ளது.

வழிப்படுத்த வேண்டிய உறவு நிலையில் உள்ளவர்கள் பாலுறவு விழைவால் பாதைமாறி, இளைய தலைமுறையினரின் உணர்வுகளைச் சீரழிக்கும் கொடுமையை விபரித்திருப்பது 'விடிவு' என்ற சிறுகதை. பெண்கள் சமூகத்தில் இருக்கும் குறைபாடுகளையும் வெளிப்படுத்துவதில் தயக்கம் காட்டாதவர் ராணி சீதரன் என்பதனை இக்கதை புலப்படுத்து வதாக உள்ளது.

சித்தி உறவின் நெருக்கமான பாசப் பிணைப்பினையும், ஆத்மார்த்தமான அன்பின் வெளிப்பாட்டையும் 'அந்தநாள்' என்ற கதைவெளிப்படுத்துகிறது.

இறுதிக்கதையாகிய 'மின்னல்' இன ஒற்றுமையோடு இணைந்து வாழ்வதற்கான நம்பிக்கையை தருவதாக அமைந்துள்ளது.

இத் தொகுப்பில் அடங்கியுள்ள எல்லாக் கதைகளும் ஏதோ ஒரு வலியோடு ஊடாடிச் செல்கின்றன. ஆசிரியர் எதைச் சொல்ல வேண்டும் என்பதும் எப்படிச் சொல்ல வேண்டும் என்பதும் நன்கு தெரிந்துகொண்டு கதைகளை நகர்த்திச் செல்கின்றார்.

தேவைக்கு மீறிய வருணனைகள், விபரிப்புகளைக் கதைகளில் காணமுடியவில்லை. 'கிழவன் சொன்னபடியெல்லாம் செய்தாள். அவளது செயல்களில் பற்றற்ற ஞானியினது செயல்களைப் போல எதுவித விருப்பு வெறுப்புக்களையும் வெளிப்படுத்தாத கடமையுணர்வு மட்டுமே மேலோங்கியிருந்தது .........' என்பது போன்ற சுருக்கமான விவரணை வழிதவறிய விடயங்களை வளர்த்துச் செல்லக் கூடாது என்ற அக்கறையும் தமிழ்ப் பண்பாட்டு மரபினை மதிக்கும் கலைநயத்தில்



கைவந்தவர் என்பதையும் அவரது எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. ஆசிரியரின் கருப்பொருள் தேர்வும், புலப்பாட்டுத் திறனும் பாராட்டும் படியாக உள்ளன.

பாராட்டுகிறேன். இவர் தம் எழுத்துப்பணி சிறக்கவும், சேவைநலம் மெருகேறவும், சமுதாயப் பார்வை விரிவு பெறவும் உளமார வாழ்த்துகிறேன்.

**23 . 09 . 2010.**

**பழமுத்து வீரப்பன்**
பேராசிரியர் தலைவர்,
தமிழியல் துறை, புலமுதன்மையர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலை நகர் 608002,
தமிழ்நாடு, இந்தியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ராணி சீதரனது ஆக்கங்களைப் படிக்கும்பொழுது, சிறுகதை பற்றிய வரைவிலக்கணம் ஒன்று நினைவுக்கு வருகிறது.

*"சிலந்திவலை ஒன்றினைச்*
*சிதறாது, கிழியாது, நலுங்காது, நசியாது*
*குண்டூசி ஒன்றின் கூரால் தாங்கி*
*தக்க வைப்பதே சிறுகதை."*

சிறுகதையாக்கம் எத்துணை கடுமையானதும் எத்துணை நிதானமானதும் என்பதை மேற்கூறிய வரைவிலக்கணம் குவியப்படுத்துகிறது.

இத் தொகுப்பிலுள்ள சிறுகதையாக்கங்களைப் பார்க்கும் பொழுது, ஆசிரியரின் ஆக்க மலர்ச்சிக் கூர்மையும் நுண்சுவை கொண்ட மனவெழுச்சிகளின் மொழி வழியான வலைப்பின்னலும் நெடுங்கோட்டு இறுக்கத்துடன் நகர்கின்றன.

கதை வளர்ச்சியின் நெடுங்கோட்டுடன் நிகழும் அகலாங்கு ஒன்றிணைப்புக்கள் பாத்திரங்கள் மற்றும் சம்பவங்கள் வழியாக எடுத்துரைப்பின் மொழிவிசையோடு ஒன்றிணைகின்றன. ஆனாலும் அந்த விசையின் நகர்ச்சியில் நிகழும் ஏற்ற இறக்கங்கள் அகவயம் மற்றும் புறவயப்பாங்குகளின் மோதல்களைத் தணித்துவிடுகின்றன.

சிறுகதைகள் பொதுவாக 'மென்போக்கு' நிலையில் இருத்தல் ஆசிரியருக்குரிய தனித்துவமாகிறது. கற்பித்தல் உளவியல் தழுவிய



ஆசிரியரின் ஆற்றுப்படுத்தல் வாண்மை சார்ந்த அனுபவங்களின் நீட்சி என்றும் குறிப்பிடலாம்.

சிறுகதைகளுக்குரிய அழகியற் பரிமாணம் மென்போக்கின் வழியாகவும் உருவாக்கப்படலாம். கொதித்தெழும் வன்போக்குப் புரட்சியின் வழியாகவும் எட்டப்படலாம். இவற்றுள் ஒன்று உயர்ந்தது என்றும் மற்றையது தாழ்ந்தது என்றும் அடையாளப்படுத்த முடியாது. ஒவ்வொன்றும் தமக்கே உரிய அழகியற் பெறுமானங்களுடன் கலையாற்றல் கொள்ளும் வனப்புடன் புனையப்படலாம்.

அண்மைக் காலத்தய தீவிர பெண்ணியவாத சிறுகதையாசிரியர் களிடத்துக் காணப்படும் வன்போக்கு, அதற்கென உரிய கலைப் பெறுமானங்களைக் கொண்டிருக்கும். அவற்றிலிருந்து மாறுபடும் மாற்று உபாயங்களைக் கையாளும் நூலாசிரியர் மென்போக்கின் வழியான கருத்தியல் ஆழங்களுக்குள் கதைகளை இயக்கிச் செல்கின்றார். உளவியல், சமூகவியல், கற்பித்தலியல் முதலாம் அறிவுத் துறைகளின் நுழைவு நீட்சிகளையும் கதையாக்கங்களிலே கண்டுகொள்ள முடிகின்றது.

கையளிக்க வந்த கருத்தோடு முரண்படாது நிற்கும் மொழியாட்சியில் மேலும் சிக்கன வழிகளைப் பயன்படுத்தியிருக்கலாம் என்ற ஒரு முனைவும், மறுபுறம் விபரிப்புக்குரிய நெடுவழியைச் சுருக்கிவிட முடியாத எதிர் விசையும் எடுத்துரைப்பில் மீண்டெழும் பதிவுகளாகவுள்ளன.

சிதறியிருக்கும் சமூகப் பின்னலையும், நூலறுந்து நிற்கும் சமூக இடைவெளிகளையும், அவற்றினூடே தோய்ந்தும் மிதந்தும் வரும் மனவெழுச்சிகளையும் காட்டும் ஒரு பன்முக அரங்காகக் கதைகள் அமைந்துள்ளன.

நீண்டு செல்லும் சிறுகதையாக்க நெடுவழியில் ஆக்க நம்பிக்கையுடன் ஆசிரியர் நகர்ந்து செல்கிறார். அந்த நெடுவழியினூடே மேலும் ஆக்கங்கள் மலர எமது வாழ்த்துக்கள்.

**சபா ஜெயராசா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வாழ்க்கையில் ஒவ்வொரு உள்ளங்களும் ஏதோவொரு வலியோடு தான் வாழ்ந்து முடிக்கின்றன. அதைத் தாங்கும் வல்லமை மனித மனங்களைப் பொறுத்தது. என் பயணிப்பில் அனுபவித்த சில வலிகள், எனக்குள் ஏற்படுத்திய அதிர்வுகள் இத்தொகுப்பில் அடங்கியுள்ளன. இதில் எந்த விதமான சாடல்களோ சார்பு நிலையோ அற்ற வெறும் வலிகள் மட்டும் தான் நிதர்சனமானவை.

இவற்றை எமது சகோதர உள்ளங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அவர்களோடு ஒன்றாக இணைந்து வாழ்ந்திருக்கிறேன். உயிர் பற்றிய கவனமும், தவறான புரிந்துகொள்ளலும், யுத்தச் சூழலும்தான் எம்மைப்பற்றிய மாறுபட்ட விளக்கங்களை அவர்களிடையே ஏற்படுத்தியுள்ளன. இப்படியான சூழலில் நாம் வாழ்ந்துள்ளோம் என்ற விளக்கத்தைப் பெற்றுக்கொண்டு, எம்மை அப்படியே ஏற்று நல்ல புரிந்துணர்வோடு வாழ்வதற்கு 'நிலவும் சுடும்' என்ற இந்தத் தொகுப்பு வாசிப்பின் நிறைவாக, ஒரு மெல்லிய அதிர்வை யேனும் ஏற்படுத்தும் என்பது என் எதிர்பார்ப்பு.

இக் கதைகளில் சில தினக்குரல் பத்திரிகையிலும், ஞானம் சஞ்சிகையிலும், வானொலித் தேசிய சேவையில் 'பெண்ணின் குரல்' நிகழ்ச்சியிலும் வெளிவந்தவை.

எனது ஆக்கங்களை மிகவும் குறுகிய கால இடைவெளியில் வாசித்து ஆழமாகவும் அழகாகவும் தனக்கேயுரிய சிறப்போடு அணிந்துரை வழங்கிய அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் பழமுத்து வீரப்பன் எனது



நன்றிக்குரியவர். எனது படைப்புக்கள் பற்றிய கருத்துக்களை தனித்துவமாக அணுகி சிறந்த முறையில் அணிந்துரையை நல்கிய மைக்காக பேராசிரியர் சபா.ஜெயராசா அவர்களுக்கு நான் நன்றியறிதலுடையவளாகிறேன்.

நிதானமாகவும் பொறுப்புணர்வோடும் இக்கதைகளை கணனி வடிவமைப்புச் செய்து தந்து ஊக்கப்படுத்திய அன்புக் கணவர் செ.சீதரனை நன்றி என்னும் வார்த்தைக்குள்ளே கட்டிப்போட முடியவில்லை.

இந்நூல் சிறந்த முறையில் உருப்பெறுவதற்கு முழு மூச்சாகப் பணிபுரிந்து, மிகவும் சிறந்த முறையில் வடிவமைத்துத் தந்த சேமமடு பதிப்பகத்தாருக்கும் நூல் முழுமை பெறுவதற்கு ஆலோசனை வழங்கிய அகவிழி ஆசிரியர் தெ.மதுசூதனனுக்கும் இஸ்மத் பெகஸ்தி ஆகியோருக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

10-10-2010 **ராணி சீதரன்**

கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | ஊசல் | 01 |
| 02. | மா(ற்)று | 12 |
| 03. | விடிவு | 23 |
| 04. | மீண்டும் வருமா? | 33 |
| 05. | புரியாமலே | 46 |
| 06. | பொட்டு | 56 |
| 07. | இங்கேயும் ஒரு பொன்னகரம் | 68 |
| 08. | நிலவும் சுடும் | 79 |
| 09. | கருகிடும் நினைவுகள் | 94 |
| 10. | அந்த நாள் | 106 |
| 11. | தனிமை | 116 |
| 12. | மின்னல் | 127 |




# ஊசல்

ஈரலிப்பற்று இறுகி வைரம் பாய்ந்து கிடந்த வெறுந்தரையில் மண்வெட்டியால் ஓங்கி ஓங்கிக் கொத்தினான் சிவராசன். அது "ணங்" "ணங்" என்று தரையில் கொத்தி மண்ணைப் பிளக்கப் பிரயத்தனப்பட்டது. வெகு சிரமத்துடன் வெட்டிப் பிளந்த மண் கட்டிகளைத் தட்டிப் பரவியவன் இடையிடையே ஆசைக்குரியவளும், அன்பானவளுமான மல்லிகாவை மனக்கண் முன் நிறுத்தி, அவளின் சிணுங்கல்கள் குறும்புகளை எண்ணிப்பார்த்து களைப்பைப் போக்கிக் கொண்டான்.

நெற்றியில் முடிச்சுக் கட்டியிருந்த வியர்வைத் துளிகளைச் சுட்டுவிரலால் வழித்துக் கொண்டே மூச்சுவிடாமல் மண்ணை கொத்துவதும், சிறிது நேரத்தில் நிமிர்ந்து வெட்டிய தூரத்தை அளவு பார்ப்பதுமாக வேலையில் மூழ்கினான். அதிகாலை இளம் வெய்யில்தான் என்றாலும் 'சுரீர்' எனச் சுட்டெரித்தது. இதெல்லாம் மல்லிகா அருகில் இருந்தால் அற்பமாகிப் போய்விடும். எந்தக் களைப்புமே தெரியாமல் உற்சாகமும் சுறுசுறுப்பும் ஏற்படும்.

எந்த நேரமும் அவனின் வாய்க்குள் வெற்றிலை பாக்கு குதப்பியபடி இருக்கும். இரை மீட்கும் ஆடு மாடுகள் போல, வாய் வெற்றிலையை மெல்லும்போது கடைவாய் வழியே வெற்றிலைச் சாறுவழிய காவிப்பற்கள் தெரியும் படியாகச் சத்தமிட்டுச் சிரிப்பான். தலையில் நிறைய எண்ணெய் வைப்பான். சாரத்தை உயர்த்திக் கட்டிக்கொண்டு ஏதாவது சினிமாப் பாடலைப் பாடியபடி, ஊரை வலம் வரும் அவனுக்கு கள்ளத்தனமோ வஞ்சகமோ தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களை உணர்ந்து தானாக முன்னேற வேண்டும் என்ற உற்சாகமற்றவனாகச் சின்னப் பிள்ளைத் தனத்தோடு இருக்கும் அவனைப் பார்க்கும் எந்தப் பெண்ணுக்குமே அவன் மீது ஆசை ஏற்படுவதை விட அனுதாபம்தான் உண்டாகும்.

எல்லோருக்கும் எடுப்பார் கைப்பிள்ளை போல நடந்துகொள்ளும் அவன், யார் எதைக் கேட்டாலும் தட்டிக்கழிக்காமல் சந்தோஷத்தோடு செய்வதைத் தனது இலட்சியமாக கொண்டிருந்தான். தங்கம்மாவிற்கு பிள்ளையில்லாக் குறையைப் போக்குவதற்காக கடவுள் மனமிரங்கிக் கொடுத்த ஒரே பிள்ளை அவன். சந்தான பாக்கியத்தை இழந்துவிடக் கூடாது என்பதற்காக அவளும் எத்தனையோ கலியாணங்கள் பேசிப் பார்த்துவிட்டாள். யாரும் அவனைக் கணவனாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தைக் கொண்டிருக்கவில்லை

'தொழில் தான் இல்லாவிட்டாலும் சொத்துப்பத்தாக ஏதாவது இருந்தாலும் போறவள் கெட்டித்தனமாக இருந்தால் குடும்பத்தைக் கொண்டு நடத்துவாள். ஒன்றும் இல்லாதவனைக் கட்டிக் கொடுப்பதும் சரி. பாழும் கிணற்றில் தள்ளிவிடுவதும் சரி' இது பெண்களைப் பெற்றவர்களது கருத்து.

மல்லிகா ஏழைக் குடும்பத்தில் பிறந்த குறையைத் தவிர பெரிய அழகி என்று சொல்ல முடியாவிட்டாலும் சாதாரணமான அழகும், கெட்டித்தனமும் உள்ளவள்.

"மல்லிகா! சிவராசன் மாடு மாதிரிப் பாடுபடக்கூடியவன். கொஞ்சம் கெட்டித்தனக் குறைவே தவிர வேறு எந்தக் குறையும் சொல்ல முடியாது. நீ அவனைச் செய்தால் ஒரு மாதிரித் திருத்தி எடுத்துப் போடுவாய். என்ன பிள்ளை? ...... அழகும் ஆடம்பரமும் வாழ்க்கைக்கு உதவாது. குடி வெறி ஒண்டுமில்லை. உன்னையும் ராசாத்தி மாதிரி வைச்சிருப்பான். நல்லாயிருப்பாய். வேண்டாமெண்டு சொல்லாதே."





தாயும் தகப்பனும் மாறி மாறி அறிவுரை சொன்னபோது அவளால் தட்டிப்பேச முடியாமல் குடும்பநிலை தடுத்தது. 'எனக்குப் பின்னாலே நான் முந்தி நீ முந்தி என இரண்டு தங்கைமார் காத்துக் கொண்டிருக்க நான் வீம்பு பிடித்திருப்பதும் சரியில்லை. இதுதான் விதியென்றால் என்ன செய்ய முடியும்?' மனதைத் தேற்றிக்கொண்டு கலியாணத்திற்கு சம்மதித்துவிட்டாள். நெருங்கிய உறவுகளும் அயலவரும் சேர்ந்து பக்கத்திலுள்ள கோயிலில் மாலை மாற்றியதோடு சிவராசனும் மல்லிகாவும் குடும்ப பந்தத்தில் இணைந்துவிட்டார்கள்.

அன்று தொடக்கம் அவனின் ஒவ்வொரு செயற்பாட்டையும் உன்னிப்பாக கவனித்து அன்பும் ஆதரவுமாக கண்டித்து, அவனின் போக்கிலும் செயலிலும் நிறைய மாற்றத்தைக் கொண்டுவந்து விட்டாள்.

"இஞ்ச பாருங்கோ! எந்த நேரமும் வெத்திலை போடாதையுங்கோ. பல்லுகள் காவியேறிப் போச்சு. வயது போனவைதான் வெத்திலை போடுறது."

அவன் வெத்திலை போடுவதைக் குறைத்ததினால் பல்லில் இருந்த காவிகளும் மறைந்துவிட்டன.

"இதென்னப்பா? 'ரவுடி'யள் மாதிரிச் சாரத்தை உயர்த்திக் கட்டிக்கொண்டு. பணிச்சுவிடுங்கோ."

"தலை முழுகின மாதிரி நிறைய எண்ணெய் வைக்க வேண்டாம்."

தனக்குப் பிடித்த மாதிரியே அவனை இரண்டு வருடத்துக்குள் மாற்றிவிட்டாள். 'மல்லிகா சிவராசனை நல்ல வடிவாகவும் புத்திசாலி மனிதனாகவும் மாற்றிப்போட்டாள். இப்ப கண்டபடி தேவையில்லாமல் கதைக்கவோ சிரிக்கவோ மாட்டான். மனுசிக்கு பிடிக்காது என்று கெட்டித்தனமாகச் சொல்லுமளவிற்கு முன்னேறிவிட்டான்.' பெண்கள் எல்லோரும் அவனைப் பற்றி இப்படித்தான் பேசிக்கொண்டனர். மல்லிகா அவனைப் பார்த்து மகிழ்ச்சியடைவாள். அதனை விட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களின் வாயால் அவனைப் பற்றிச் சொல்வதைக் கேட்கும்போது இரட்டிப்பு மகிழ்வு ஏற்படும்.

"மல்லி இரண்டு வருடமாச்சு. எனக்கு மகன் பெத்துத் தரமாட்டியோ?"

வளைந்து நெளிந்து வெட்கப்பட்டுக் கொண்டு கேட்கும் அவனைத் தலையிலே செல்லமாக ஒரு குட்டுக் குட்டி,

"அதென்ன கேக்கக் கூச்சப்படுவது? நிமிர்ந்து பார்த்து ஆம்பிளையா, இலட்சணமா கேட்பது தானே. இன்னமும் உங்களை கொஞ்சம் மாத்த வேணும். பிறகு நீங்கள் காசு பணம் தேட வேணும். அப்பதான் நாங்க குழந்தையைப் பற்றி யோசிக்கலாம்."

மண்வெட்டியை இலாவகமாகப் பிடித்து ஓங்கி ஓங்கி மண்ணைக் கொத்தும்போது ஏறி இறங்கும் மார்பு, திரட்சி பொருந்திய புயங்கள், இறுக்கமும் உறுதியும் கொண்ட வைரம் பாய்ந்த உடல், அதிலிருந்து வழிந்து விழும் வியர்வைத் துளிகளை மண் மகள் ஏற்று நெகிழ்ந்து கொடுப்பதால் ஏற்படும் விரிசல் ஒவ்வொன்றையும் பார்த்து தனக்குள் பூரித்துப் போவாள் மல்லிகா.

தாய்மையின் பாசம் பொங்க தனது தொங்கல் சேலையை எடுத்து அவனது நெற்றியையும் முகத்தையும் மாறி மாறித் துடைப்பாள். சின்னக் குழந்தையாய், அந்த ஆதரவுக்காய் ஏங்கிக் காத்திருந்தவன் போல நிற்கும் கணவனைப் பார்த்து 'நீங்கதான் எனக்குப் பிள்ளை' எனச் சொல்வதைக் கேட்டுச் சிவராசன் உலகமே தனது காலடியில் இருப்பதாக மகிழ்வான்.

சிவராசன் அதிகாலையில் வயலுக்குப் போன பின்பு, வீடுவாசல் கூட்டித் துப்பரவாக்கி, உடுப்புக்களைக் கழுவிக், காலைச் சாப்பாடு செய்து சரியாகப் 10 மணிக்கு வயலுக்கு போவதற்கு மல்லிகா தயாராவது வழக்கம். 'யானைச் சோடா'ப் போத்தல் நிறைய கடுமை யான சாயத்திற்கு ஏற்றபடி சீனியும் கலந்த தேநீருடன், தினந்தோறும்





நாள் ஒன்றுக்கு மாற்றி மாற்றிப் பிட்டு, ரொட்டி, தோசை என காலைச் சாப்பாடும் செய்து கொள்ளுவாள்

கட்டடியில் அவள் செல்லமாக வளர்க்கும் இலட்சுமி இன்னமும் ஒரு மாதத்தில் கன்று தரப்போகும் நிறைவோடு சுத்திக் கொண்டு நிற்கும்.

காலையிலே சிவராசன் வயலுக்குப் போக முதல் இலட்சுமியின் முகத்தை தடவ, அது தலையை அசைக்கும். மெதுவாக அதன் வயிற்றைத் தடவுவான். அது பேசாமல் நிற்கும். மல்லிகாவைத் திரும்பி ஒரு பார்வை பார்ப்பான். கடை வாய்க்குள் அரும்பிக் கிடக்கும் கள்ளச் சிரிப்பை மறைத்துக் கொண்டு

"சரி நான் வாறன்."

இனியும் நின்றால் எதையாவது கேட்டுவிடுவேனோ? என்ற பயத்திலே போய்விடுவான். இலட்சுமிக்கு கிடைத்த பாக்கியம் தனது மல்லிகாவிற்கு கிடைக்கவில்லையே என்ற ஏக்கம் அவனது அடிமனதில் உறைந்து கிடந்தது.

'பிள்ளை மீது இவருக்கு இவ்வளவு ஆசையா? இப்போதைக்கு ஒரு குழந்தை எமக்கிடையே தேவைதானா?' என்ற அலட்சியத்தோடு அதுபற்றி சிந்திக்காமல் இருந்த மல்லிகாவையும் பிள்ளை ஆசை பிடித்துக் கொண்டது. இலட்சுமியின் நிறைந்த வயிற்றை தடவி,

"கவனமாக இரடி. உனக்குப் பச்சைப் புல்லுக் கொண்டு வாறன்."

சொல்லும்போது தன்னையுமறியாமல் அவளது அடிமனதிலும் ஒரு மெல்லிய இன்ப அதிர்வினை உணரத் தொடங்கினாள். இலட்சுமிக்கு புல் கொண்டு வருவதற்காக "யூரியா" உரப்பசளை "பாக்"கைச் சுருட்டி ஒரு பிரம்புக் கூடையில் சாப்பாடுகளோடு சேர்த்து பத்திரப்படுத்தினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மன் கோவிலைத் தாண்டிச் சற்று தூரம் வரை வளர்ந்து கிடக்கும் முள்மரங்களும், பனை வடலிகளும் கொண்ட பெருவெளியையும் கடந்து வந்தால் தான் அவர்களின் வயலும், அங்கே சிவராசன் கொத்திக்கொண்டு நிற்பதும் கண்ணுக்குத் தெரியும். மூன்று புறமும் கடலும், நடுவிலே அருள் பாலிக்கும் அம்மனும் மனதிற்கு ஆறுதலையும், அமைதியையும் அள்ளித்தருவது போன்ற அந்த புனித இடத்திலே, சிலவேளைகளில் மூர்க்கத் தனத்தோடு துள்ளி எழுந்து ஆர்ப்பரித்து விழும் கடல் அலைகளும், அவற்றின் இரைச்சலும் அவளைச் சற்றுத் தாமதிக்கச் சொல்லிப் பின்னோக்கி இழுக்கும்.

பூட்டிக் கிடக்கும் கோயிலின் முன்பாக ஒரு நிமிடமாவது மனதை நிறுத்தி தனது பல வேண்டுதல்களை அம்மன் முன்வைத்துச் செல்வாள்.

கோயிலுக்கும் வயலுக்கும் இடையிலே வரும் பெருவெளியில் இராணுவத்தினரின் காவல் அரண்கள் தென்படும். அங்கே யார் இருக்கிறார்கள், வருகிறார்கள், போகிறார்கள் என்ற விபரமறிவதில் அவள் ஈடுபடுவதில்லை. போகும் வழியில் யாராவது சிரிக்கும் போது மரியாதைக்காகப் பதிலுக்குச் சிரித்துவிட்டுச் செல்வாள்.

சூரியன் வானில் உயர உயர வெய்யில் நெருப்பாய் உடலைத் தகிக்கும். வியர்வை முத்துக்கள் அருவியைப் போல கோடு கட்டி முதுகு, தோள், நெஞ்சுப் பகுதிகளில் இருந்து உருண்டு திரண்டு விழும்.

வியர்வையைச் சால்வையினால் துடைத்துக் கொண்டே, தன் கருமத்திலேயே கண்ணாய் இருக்கும் சிவராசனைப் பார்த்தபடி மௌனமாக எதிரே நிற்கும் மல்லிகாவைத் தலையை நிமிர்த்தும் போதுதான் சிவராசன் கண்டு கொள்ளுவான்.

“கள்ளி எவ்வளவு நேரமாய் நிற்கிறாய்? உனக்கு நான் வேடிக்கையாகத் தெரியிறேனே? சரி சரி. பாவம் மனுசன் கொதிக்கிற வெய்யில்ல புழுவாய்த் துடிக்கிறான். சுடச்சுடத் தேத்தண்ணிய குடுத்து





களைப்பைப் போக்குவம் எண்ட நினைப்பில்லை. வந்து மரம்போல நிக்கிறா.”

அவன் செல்லமாக கடிந்து கொள்வான்.

“உங்கட பொறுமையைப் பாத்து வியந்து போனன். வாங்கோ! வந்து சாப்பிடுங்கோ. வெய்யில் உரக்க முதல் வீட்டை போக வேணும்.”

அவள் துரிதப்படுத்த, அவன் மண்வெட்டியைத் தூர வீசிவிட்டு, குழந்தையைப் போல ஓடி வந்தான்

“இந்த முறை வயல் வெளி முழுவதும் வெங்காயம் தான். பாரன் எப்படி விளைச்சலெண்டு. கடவுள் கண் திறக்க வேணும். என்ர ராசாத்திக்கு......”

அவன் கதையை முடிக்க முதல் அவள் வாயைப் பொத்தினாள்.

“இப்ப சாப்பிடுங்கோ. விளைஞ்ச பிறகு பார்க்கலாம்.”

“உனக்கு என்மேல நம்பிக்கை இல்லை. அதுதான் என்ர விருப்பங்களை சொல்ல விடுறாயில்லை.”

“சீ அப்படி ஏதுமில்ல. வெய்யில்ல சும்மா விளையாடிக் கொண்டு நிற்க முடியுமோ? கெதியா வாங்கோ போவம்.”

“மல்லி என்ன விளையாடுறியோ? நாளைக்கு பாத்திகட்ட வரச்சொன்னாச்சு. இவ்வளவும் கொத்தி முடிச்சால் தானே மற்ற வேலையள் செய்யலாம். நான் கொஞ்சம் பிந்தித்தான் வருவேன். நீ போ.”

அவன் தனது வேலையை கவனிக்கத் தொடங்கினான். அவள் வரம்பில் பசுமையாக வளர்ந்து கிடந்த அறுகம் புல்லை அறுத்து ‘பாக்’கில் திணித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுறுக்காய் வாங்கோ."

கட்டளையிட்டுவிட்டு அவள் போய்விட்டாள்.

'அம்மா தாயே! இந்த முறை நீ கண் திறந்தால் நல்ல அபிஷேகமும் பொங்கலும் வைப்பேன்.'

சிவராசன் மனதால் வேண்டிக்கொண்டான். கூடவே அடிமனதில் மறைந்து கிடந்த 'குழந்தைச் சத்தம் கேட்கும் பாக்கியத்தையும் தரவேண்டும்' என்ற வேண்டுதல் முதலாவது வேண்டுதலுக்குப் பின்னால் விரிந்து கொண்டது. அதற்காக கோயில் கொடியேறினால் பத்துநாளும் விரதம் இருப்பதாக தனக்குள்ளே நினைத்துக்கெண்டான்.

கொஞ்ச நாளாக மல்லிகாவின் போக்கிலே மாறுதல்கள் தென்பட்டன. ஊற்சாகமிழந்து சோர்ந்து படுத்திருப்பாள். சாப்படுவதில்லை.

"தலைப் பாரமாக இருக்கு"

வாட்டத்தோடு சொல்லுவாள்.

'அவளுக்கு பொல்லாத வருத்தம் ஏதோ வந்துவிட்டதோ? ஏன் இப்படி இருக்கிறாள்? அவளுக்கு ஒன்றென்றால் என்னால் தாங்க முடியுமா? நான் உயிர் வாழ்வேனா?'

சிவராசன் மனதைப் பலவாறு குழப்பிக்கொண்டான்.

அன்று அவள் மதிய வேளை வயலில் இருந்து வீட்டுக்கு வரும்போது, இடையில் நடந்த சம்பவம் அவளை நிலை குலையச் செய்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் கேள்விக் குறியாக்கி விட்டது. சிவராசன் ஆசைப்பட்டது போல ஒரு குழந்தையைப் பெற்றுக் கொடுப் பதற்கான சந்தர்ப்பம் வந்துவிட்டது என்பதை அவள் உடல் சார்ந்த மாறுதல்களினால் புரிந்துகொண்டாள். தலை சுற்றுவது போலவும், மயக்கம் வருவது போலவும், சாப்பாட்டில் விருப்பம் இல்லாமலும்





இருந்தபோது சிவராசனிடம் இன்று கட்டாயம் சொல்ல வேண்டும், அவனை சந்தோஷப்படுத்த வேண்டும் என்ற உற்சாகத்தோடு பலவித கற்பனைகளில் மூழ்கி விரைவாக நடந்து வந்துகொண்டிருந்தாள்.

நல்ல மது போதையில் நின்ற அவனைப் பலதடவை அவள் கண்டிருக்கிறாள். சீருடையுடன் நிற்கும்போது அவளைப் பார்க்கும் பார்வையில் அவனை ஒரு நல்ல மனிதனாக அவள் கருதவில்லை. வேறு பெண்களும் அவனைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை என்பது தெரியும். அவள் போகும்போதும் வரும்போதும் அவனைக் கண்டுவிட்டால் ஒருவித பயத்துடன், மிரண்டு மிரண்டு மிகவும் விரைவாக அவ்விடத்தைக் கடந்துபோவது வழக்கம். அன்று தொலை தூரம்வரை எந்த மனித நடமாட்டமும் கண்ணுக்கு தெரியவில்லை.

திடீரென ஒரு உருவம் தன் ஒரு கரத்தால் அவளது வாயைப் பொத்தியதோடு மறு கரத்தால் அவளைத் தரதரவென இழுத்துச் சென்றது. செய்வதறியாது திகைத்துச் செயலற்று, 'யாராவது இந்த நேரம் வரமாட்டார்களா?' என ஏங்கித், தீயில் இட்ட தளிராய்க் கருகிய அவள் முகத்தருகே குப்பென்று வீசியது சாராய நெடி. களைப்பினாலும், பயத்தினாலும் அவள் மயக்கமடைந்தாள். அதன் பின்னர் நடந்தவை எதுவும் நினைவிலில்லை. மயக்கம் தெளிவடைய மிக்க சோர்வுடன் உடலும் மனமும் எரிய நடைப்பிணமாக வீடு வந்தடைந்தாள்.

சிவராசன் அன்று வேளைக்கே வீட்டுக்கு வந்துவிட்டான். அவளின் தலைமாட்டில் இருந்து தலையைப் பிடிப்பதும் முகத்தைத் தடவுவதுமாக,

"ஏன் மல்லி? என்ன செய்யுது? ஆஸ்பத்திரிக்குப் போவமா?"

அடிக்கடி கேட்டுக்கொண்டிருந்தான்.

"வேண்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைத் தவிர அவள் எதுவுமே பேசவில்லை. 'செத்து விடுவோமா' என ஒரு கணம் எண்ணியபோதும் 'பாவம் இந்த அப்பாவி தனிச்சு தவிச்சு போய் விடுமே' என்ற பரிதாபம் மேலெழுந்து அவளது எண்ணத்தை மாற்றிவிடும்.

இரண்டு மூன்று நாட்கள் ஒரே படுக்கையாகக் கிடந்தவள், 'அவருக்காகவாவது வாழுவேன்' என மனதை மாற்றிக் கொண்டாள். 'நடந்தது என்னோடு மறைந்து போகட்டும். அவருக்கு இதைச் சொல்லி வீணான தொல்லைகளை விலைக்கு வாங்காமல் மறந்துவிடுவோம்' என முடிவெடுத்தாலும், மனதில் வன்மம் எங்கோ மூலையில் உறங்கிக் கொண்டுதான் இருந்தது.

சில வேளைகளில் அவளை அறியாமல் மூட்டாத தீயாய் கனன்று மேலெழுந்து எதை எதையோ செய்யத் தூண்டும். ஊமையாய் முடமாய் அதை ஒடுக்கி அடக்க அவள் பெரும்பாடுபடுவாள்.

காலப்போக்கில் மல்லிகா மறுபடியும் கலகலப்பையும் உற்சாகத்தையும் வரவழைத்துக் கொண்டாள்.

சிவராசன் அப்பாவாகப் போகும் மகிழ்ச்சிப் பெரு வெள்ளத்தில் நீந்தித் தன்னை மறந்தான். அவனது அந்த மகிழ்ச்சி ஒன்றுக்காக மல்லிகா தனக்குள்ளே சில மர்மங்களை புதைத்துக்கொண்டு சாதாரண மனுசியாக நடமாடினாள். இப்பொழுதெல்லாம் அவள் தனியாக வயலுக்குச் செல்வதில்லை. போகும்போது சிவராசனோடு போய், வரும்போதும் சேர்ந்தே வருவாள்.

அடுத்த தெருவில் இருக்கும் அவளின் சினேகிதி மாலதியை நீண்ட காலத்திற்குப் பிறகு அன்று சந்தித்தாள். கோயிலுக்குத் தனது குழந்தையைத் தூக்கிக் கொண்டு தாயுடன் வந்தவளின் அருகே போய் ஆசையோடு குழந்தையை வாங்கி முத்தமிட்டாள் மல்லிகா. திருமணம் செய்த பின்பு கணவன் வீட்டோடு போய்விட்டதால் தான் நீண்ட நாட்கள் சந்திக்க முடியவில்லை என்று சொன்ன மாலதி





'நேரமிருந்தால் வீட்டுப்பக்கம் வாவேன்' என சொல்லிவிட்டு விடைபெற்றுப் போனாள்.

சற்று நேரம் அமைதியாகக் கோயிலைக் கும்பிட்டுவிட்டு வீட்டை நோக்கி சிவராசனுடன் நடந்தாள். எதிரே அவன்...., மீண்டும் காணக்கூடாது என்று நினைத்த அவன், தூரத்தில் போய்க்கொண்டிருந்த மாலதியின் கையில் இருந்த குழந்தையைக் காட்டி, அவனுடன் சேர்ந்து நடந்து வந்துகொண்டிருந்தவனுக்கு 'மகே புத்தா' என்று சொல்லி சத்தமிட்டு சிரித்துக்கொண்டு வந்தான். மல்லிகாவின் கைகள் அவளையும் அறியாமல் அடிவயிற்றினை அழுத்தின. இரண்டு கைகளாலும் ஓங்கிக் குத்திக்கொள்ள வேண்டும் போல மனம் துடித்தது. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் துவண்டுபோன மல்லிகா சிவராசனின் தோள்மீது சாய்ந்துகொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா(ற்)று

பிள்ளையார் கோயிலுக்கு அருகிலே பக்தி மணம் கமழும் சூழலிலே அந்தப் பாடசாலை அமைந்திருந்ததனால் பாடசாலைக்கும் கோயிலுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது.

வெள்ளிக்கிழமைகளில் சைவப்பிள்ளைகள் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்வது அப்பாடசாலை வழக்கம். ஊர்ப் பெயருக்கும் பாடசாலையின் பெயருக்கும் இருக்கும் தொடர்பு அங்கு சைவப் பெருங்குடி மக்களே பெரும்பான்மையாக வாழ்கின்றார்கள் என்பதைப் பறைசாற்றியது.

அது என்ன பொருத்தமோ தெரியவில்லை பாடசாலைக்கு வந்த அதிபரும் கணேசலிங்கம் என்ற பெயரோடு அமைந்த ஒரு சைவப் பக்தராகவே பரிமளித்தார். காலைக்கூட்டம் முடிந்த கையோடு அதிபர் கணேசலிங்கம் ஆசிரியர்கள் மாணவர்களின் நடமாட்டத்தைக் கண்காணித்துக் கொண்டபடி நின்றார்.

இரண்டு கைகளும் பின்னால் இருந்தது. அதில் நிச்சயம் நீண்ட பிரம்பொன்று மறைந்திருக்கும். யாராவது இடக்கு முடக்காய் நடந்து விட்டால், அவர் பார்வையிலிருந்து தப்பவே முடியாது. அதிகாலை, மதியம் என்ற பேதமின்றி அவர்களின் முதுகைப் பிரம்பு பதம் பார்த்து விடும். அந்தப்பயம் காரணமாக மாணவர்கள் தங்கள் வகுப்புக்களுக்கு ஒழுங்காகப் போய்க்கொள்வார்கள். அதிபர், மாணவர்கள் ஆசிரியர்களைக் கண்காணிப்பது மட்டுமன்றி, அந்தப் பாடசாலையின் சுற்றுப்புறம் அமைந்திருக்கும் நேர்த்தியும், அதன் முன்னேற்றமும் தன்னால்





ஏற்பட்டதென்ற ஒரு தலைக்கனமான இறுமாப்பில் தன்னை மறந்து மகிழ்வதும் அந்த நேரத்தில் தான்.

அவர் பாடசாலையைப் பொறுப்பேற்கும் போது இரண்டு பழைய கட்டிடங்கள், அதுவும் வகுப்புக்களை நடத்த முடியாதபடி ஒழுங்கின்றி கிடந்தன. அவரது வரவின் பின்னர் அவை இருந்த இடத்தில் புதிய மாடிக்கட்டிடங்கள் கொண்ட வகுப்பறைகள், நூலகம், விளையாட்டு முற்றம், மனையியல் அறை, விஞ்ஞானகூடம் எனப் பாடசாலை தனது வசதிகளை விசாலித்துக் கொண்டது.

முன்பக்கத்திலே அழகிய பூச்செடிகளும் முந்திரிகைப் பந்தலுமாக பசுமை கொலுவிருக்க, பின்பக்கத்தில் விவசாயம் கற்கும் மாணவர்களினால் வைக்கப்பட்ட காய்கறித் தோட்டத்தில் கத்தரி மிளகாய் பூவும் பிஞ்சுமாக பொலிவு பெற்று கண்ணுக்கும் மனதிற்கும் குளிர்மையை ஏற்படுத்தியது. பாடசாலை இன்று நகரப் பாடசாலையின் தரத்திற்கு உயர்ந்திருப்பதற்கு தனது விடா முயற்சியும், அயராத உழைப்புமே காரணமாக அமைந்ததை எண்ணி அதிபர் பெருமிதம் அடைவார்.

"குட்மோர்னிங் சேர்."

தன்னை மறந்து சூழலை ரசித்தவாறு நின்ற அதிபர்

"குட்மோர்னிங் வாங்கோ!"

சிரித்தபடி வந்தவரை வரவேற்றார்.

"பள்ளிக்கூடத்தை பூங்காவனம் மாதிரி ஆக்குவதென்றே கங்கணம் கட்டுறியள் போல தெரியுது."

கல்வி முகாமைத்துவத்தைப் பார்வையிட வந்த உதவிக் கல்விப் பணிப்பாளர் மகேந்திரன், எங்கு அடித்தால் எப்படி விழும் என்ற நெளிவு சுழிவுகளை எல்லாம் தொழில் ரகசியமாக கற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருப்பவர். அவர் காலையில் வந்ததும் வராததுமாகத் தனது சாமர்த்தியத்தை காட்டத் தொடங்கினார்.

தனது திறமையை பெருமையை பாராட்டும் போது ஏற்படும் மகிழ்ச்சி அதிபரின் சிரிப்பிலும், முக மலர்ச்சியிலும் தெரிந்தது. பாடசாலையின் வளர்ச்சியில் அவர் நிறைவு கண்டாலும் அங்கு நிறைவேற்றப்படாத பெரும் குறை ஒன்று விரிசலை ஏற்படுத்தி அதிபருக்கு வெறுப்பூட்டிக் கொண்டிருந்தது. அதனால் உண்டாகும் ஆவேசத்தினால் உயர் அதிகாரிகளை சாடிக் கொள்வதன் மூலம் தனது ஆதங்கத்தைத் தணித்துக்கொள்ள முயலுவார்.

அலுவலகத்துக்குள் நுழைந்த அதிபர் கணேசலிங்கம், மகேந்திரனை அமரும்படி தனக்கு முன்னால் உள்ள கதிரையைக் காட்டினார். தனது மனப்பாரத்தை இறக்கி வைப்பதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவற விடக் கூடாது என்ற கவனத்தோடு வாசலில் நின்ற 'பியோ'னிடம் முதலாம் பாடத்திற்கான "பெல்"லை அடிக்க கட்டளை இட்டவர்.

"சேர்!. நீங்களும் ஒரு கல்வி அதிகாரி. நீங்களும் இதை அறிந்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன். இந்தப் பள்ளிக்கூடம் முன்பிருந்த நிலை உங்களுக்கு தெரியும்தானே?. இப்ப நான் வந்து எட்டு வருடம் ஆகுது. எப்படி பாடசாலையை வைத்திருக்கிறன் பாருங்க."

"ஓம்! ஓம்! எவ்வளவோ மாற்றமும் முன்னேற்றமும் தெரியுது தான்."

மகேந்திரன் அதிபரின் கருத்தை ஆமோதித்து ஏற்றுக் கொண்டார்.

"என்ன முன்னேற்றம் இருந்தென்ன? வாங்கோ சேர். வந்து பாருங்கோ."

அதிபர் எழுந்து முன்னால் நடக்கத் தொடங்கினார்.





'இதென்னடா தரும சங்கடம். இன்டைக்கு 'பாங்க்' அலுவல் பார்க்க வேண்டுமென்று நேரத்தோட பள்ளிக்கூடம் வந்து அலுவலை முடித்துக்கொண்டு வேளைக்கே போய்விட எண்ணி வந்த மகேந்திரனுக்கு, சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்த கதையாய் முடியுமோ என்ற பயம் உள்ளூர எழுந்ததும் தனது உதட்டைக் கடித்துக் கொண்டவாறு கதிரையை விட்டு எழுந்தார்.

"இது வசதிகளற்ற கிராமப்பாடசாலை. பிள்ளைகளிற்கு முக்கியமாக செய்து கொடுக்கவேண்டிய அடிப்படைத்தேவை இதுதான்".

அதிபர் மலசலகூடத்தைக் காட்டி முறையிட்டார். அது பாழடைந்து போய் தரையில் போடப்பட்ட சீமெந்துப்பூச்சு இடைக்கிடை வெடித்து வெளிக்கிளம்பிக் கிடந்த நிலை, நீண்ட காலமாய் பாவிக்கப்படுவதில்லை என்ற செய்தியைப் பறைசாற்றியது.

"விளையாட்டுப்போட்டி, கலைவிழா, பரிசளிப்பு விழா அடுக்கடுக்காய் வைத்து ஒவ்வொரு விழாவிலும் பிரதம விருந்தினராக வருகை தந்த கல்விச்செயலாளர், மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப்பணிப்பாளர், அனைவருக்கும் சொல்லியாச்சு. பார்த்தார்கள், போனார்கள் என்ற நிலைதான். ஒருவரும் கவனித்ததாக தெரியவில்லை. நகரப் பாடசாலைகளுக்குத்தான் எல்லா வசதிகளையும் செய்கிறார்கள். நல்ல கட்டிடங்களையே இடித்து இடித்து உயர உயர எதையோ எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். எனக்கு இதுதான் பிடிக்கிறதில்லை."

அதிபர் சற்று உணர்ச்சி வசப்பட்டிருந்தார். மகேந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. எதையாவது சொல்லவேண்டும் என்பதற்காக,

"கட்டாயம் இந்த அடிப்படை வசதிகளைச் செய்து தரத்தான் வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எல்லோரும் செய்து தரத்தான் வேண்டும் என்று சொல்கிறார்களே தவிர செய்து தந்தபாடில்லையே."

எறிந்த பந்தை இந்த ஆள் திருப்பி எனக்கே எறிகிறாரா? என்ற கேள்விக் குறியோடு,

"முந்திரிகை எப்படி நல்லா காய்க்கிறதா சேர்?"

கதையை வேறுபக்கம் திருப்பினார் மகேந்திரன்.

"ஓம் சேர். இருபது கிலோ பழம் மட்டில் எடுத்திருப்பம்."

'சரி கதை கந்தல்தான். இதிலும் ஆதி அந்தம் சொல்லி முடிக்க எவ்வளவு நேரம் ஆகுமோ?' என்ற எரிச்சலை வெளிக்காட்டாது, முந்திரிகைப் பந்தலைப் பார்த்தபடி,

"பரவாயில்லை. உங்களிடமே பழம் வாங்கலாம் போல. நல்ல மண். அதுதான் இவ்வளவு செழிப்பாக இருக்குது."

மகேந்திரன் சொன்ன பதில் அதிபருக்கு திருப்தி அளித்ததாகத் தெரியவில்லை.

"நல்ல கதை சொல்லுறியள். நான் எந்த நேரமும் பள்ளிக் கூடத்தில் தானே நிற்கிறன். இரவு எட்டு மணிக்குத்தான் வீட்டுக்குப் போறனான்."

அதிபர் தனது முயற்சியின் பயனால் கிடைத்தது என்பதை வெளிப்படுத்திவிடவேண்டும் என்பதில் ஆர்வமாயிருந்தார்.

"ஓம் பாடுபடாமல் பயன் கிடைக்குமோ? நீங்கள் நன்றாக பாடுபடுகிறீங்கள் என்பது பார்த்தாலே தெரியுது."

இந்தச் சொல்லிற்காகவே காத்திருந்தவர் போல, அதிபரின் முகத்தில் ஒரு பிரகாசம் மின்னலைப் போல பளிச்சென்று தோன்றியது.





"கவிதா இங்கே வாரும்."

அதிபர் பெயர் கூறி அழைத்த மாணவி அருகில் வந்து நின்றாள்.

"கன்ரீனில் ரீயும் வடையும் வாங்கிக் கொண்டு வாரும்."

மாணவி 'சரி' என்பது போல் தலையசைத்து விட்டுச் சென்றாள். பணிப்பாளர் மகேந்திரன் பார்வையிட வேண்டிய கோவைகளை ஒவ்வொன்றாக எடுத்து அவரின் முன்னே வைத்தார் அதிபர்.

மகேந்திரன் 'அப்பாடா' என்ற நிம்மதிப் பெருமூச்சோடு கோவைகளை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டார்.

மாணவி 'ரீ'யையும் வடையையும் கொண்ட 'ரே'யினை மேசையில் வைத்துவிட்டுப் போனாள்.

"சேர் 'ரீ' எடுங்கோ. ஆறிப்போய்விடும். சாப்பிடுங்கோ."

அதிபர் தனது பங்கை எடுத்துக்கொண்டார்.

"இப்ப வந்து போன மாணவி கவிதாவை பார்த்தனீங்களே சேர்?"

மகேந்திரன் தலையை திருப்பி அங்குமிங்கும் பார்த்துவிட்டு,

"இல்லையே. ஏன்?"

அவளைப் பற்றி ஏதோ சொல்லப்போகிறார் என்பதைப் புரிந்து கொண்டு ஆவலோடு பணிப்பாளர் அவரைப் பார்த்தார்.

"இவர்கள் குடும்பத்தில் தாய், தகப்பன், ஐந்து பிள்ளைகள் எல்லோருமே கத்தோலிக்க மதத்தில் சேர்ந்துவிட்டார்கள்."

"ஏன்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வடையை எடுத்துக் கடித்துக் கொண்டே கேட்டார் மகேந்திரன்.

"வாழ வசதி இல்லையாம். பிள்ளைகளை படிப்பிக்க முடியவில்லையாம். அதையெல்லாம் அவர்கள் செய்து தருகிறார்களாம்."

"இதென்ன அநியாயம்! உழைத்து சாப்பிடாமல் இப்படி எத்தனை காலத்துக்கு வாழ முடியும்?"

"யாருக்குத் தெரியும்!"

"உங்களுக்கு யார் இதைச் சொன்னவர்கள்?"

"எனக்கு எங்கே சொன்னார்கள்? தகப்பனே ஒரு கடிதம் கொடுத்து விட்டிருந்தார்."

"ரீச்சர்! அந்தக் கடிதம் உங்களிடம் தானே?"

சற்று தூரத்தில் பிள்ளைகளின் வசதிக் கட்டணம் தொடர்பான அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருந்த சந்திரராசா ரீச்சர்.

"ஓம் சேர். 'பைலி'ல் கட்டி வைத்திருக்கு."

அதிபரின் குறிப்பறிந்து எழுந்து கடிதத்தை எடுக்கப்போனார்.

"மனுசன் வரவர மனிதத்துவத்தையே இழந்துவிட்டான். தனக்கென்று கொள்கையில்லை. பற்றுதலில்லை. கண்டதே காட்சி கொண்டதே கோலமென்று வாழ்ந்துவிட்டு போக நினைக்கிறான். எங்கும் சுயநலம்தான் மேலோங்கி இருக்கு."

மகேந்திரன் பெருமூச்சு விட்டார். ரீச்சர் பணிப்பாளரிடம் கடிதத்தைக் கொடுத்தார்.





எனது குடும்பம் கத்தோலிக்க மதத்திற்கு மதம் மாறியுள்ளதால் தங்கள் பாடசாலையில் கல்வி பயிலும் எனது பிள்ளைகள் கத்தோலிக்க மதத்தை படிப்பதற்காக அச் சமயத்திற்குரிய பாடப் புத்தகங்களைக் கொடுத்துதவும்படி கேட்டுக்கொள்கிறேன் என எழுதப்பட்ட அக்கடிதத்தில் பிள்ளைகளின் பெயர்களும் வகுப்பு விபரங்களும் எழுதப்பட்டிருந்தது.

மதங்கள் அனைத்தும் ஒரு பாதையைப் பற்றித்தான் போதிக்கின்றன. அதற்காகப் பிறப்புரிமையாகத் தொடர்ந்து வந்த நம்பிக்கை, சிந்தனைகளை மாற்றி மனிதன் சந்தர்ப்பவாதியாக மாறுவதை ஒரு நாளும் ஏற்றுக்கொள்ள முடியாது என்பது பணிப்பாளரின் கருத்து.

"இது பெரிய அநியாயம்"

இரத்தினச் சுருக்கமாகப் பதிலளித்தார்.

"எங்கட பெரிய தலையள் நியாயம் எது? அநியாயம் எது? என்று யோசிக்குதுகளா? எங்களால் என்ன செய்ய முடியும்? சமய பாடத்தைதான் படிக்க வேண்டும். புத்தகம் மாற்றித் தரமுடியாது என்று சொல்லிப் பார்த்தன்."

"பிறகு...... என்ன நடந்தது?"

மகேந்திரன் ஆவலோடு அதிபரின் முகத்தைப் பார்த்தார்.

"பிள்ளைகள் தகப்பனைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். ஐயா! உங்கள் பெயரே சிவலிங்கம். ஏன் ஐயா மதம் மாறினீர்கள்? எண்டு அந்தாளிட்டைக் கேட்க, வசதியாய் வாழ முடியவில்லை. வாழும்வரை மனிதன் நிம்மதியாக வாழ்ந்து சாகவிடுங்கோ. மதமும் மண்ணாங்கட்டியும். இவ்வளவு காலமும் உங்கட மதத்தைக் கட்டிப் பிடிச்சுகொண்டு இருந்து பெரிதாய் என்னத்தை சாதிச்சுப்போட்டம். சும்மா போங்க ஐயா. பெற்ற பிள்ளைகளே ஆதரிக்க மறந்துபோகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் காலத்திலே முதியவர்களை பராமரிக்கும் முதியோர் இல்லம், வசதியற்ற மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்க விடுதிவசதி, வாழ வழியற்றோரை வழிப்படுத்தி ஊக்குவிக்கும் நிதியுதவி இவற்றையெல்லாம் உங்கட மதம் செய்கிறதா? சொல்லுங்கோ? அவர்கள் செய்கிறார்கள். அதுதான் எங்களுக்குத் தேவை. நீங்கள் சும்மா கோயில்களையும் கோபுரங்களையும் உயர உயர கட்டுங்கோ. மனிசன் சாப்பாடில்லாமல் சாகிறான். நீங்கள் கோயிலில் பாலாலும் பழத்தாலும் அபிசேகம் செய்யுங்கோ. முதலில் மனிதனுக்கு எது தேவை என்பதை அறிந்து அதை செய்து கொடுங்கோ. பிறகு மற்றதைப் பற்றிச் சிந்திப்போம் இப்படி உணர்ச்சி வசப்பட்ட சிவலிங்கத்தின் பேச்சை மறுதலித்துப் பேசுவதற்கு என்னால் முடியவில்லை. மௌனமாக கேட்கத்தான் முடிந்தது."

மகேந்திரனுக்கு இதற்கு என்ன பதில் சொல்வதென்று தெரியவில்லை. அவரவர் வாழ்க்கைப் பிரச்சினை என்று நழுவிக் கொள்வதா பசி வந்தால் பத்தும் பறந்துவிடும் எனத் தேற்றிக் கொள்வதா எனத் தெரியாமல் யோசித்தார்.

"நான் கொஞ்சம் நெருங்கினால் மனித உரிமையென்று போகிறார்கள். நான் தகப்பனுடன் முரண்பட்டதால் மனித உரிமைக் குழுவிலிருந்து என்னை விசாரிக்க வந்துவிட்டார்கள்.

"ஏன் ஐயா நாட்டில் புரட்சியைக் கிளப்புகிறீர்கள் உங்களின் பணியை நீங்கள் சரியாய் செய்தால் போதும். நியாயம் அநியாயம் பற்றி விசாரிக்கத் தேவையில்லை" என்று அவர்கள் என்னை எச்சரித்துவிட்டு போனார்கள். என்னோடு சேர்ந்து குரல் கொடுக்க யாரும் வரவில்லை. பிறகு ஏன் நான் மோதிக்கொள்ள வேண்டும்? நடப்பது நடக்கட்டும் என பேசாமல் இருக்கிறன்."

அதிபரின் மனச்சோர்வை போக்குவதற்குரிய ஆலோசனை எதனையும் பணிப்பாளரால் சொல்லமுடியவில்லை. அந்தப் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணலாம்? என்பது பற்றி இருவரும்





தீவிரமாகச் சிந்திக்கிறார்கள் என்பது அங்கு நிலவிய மௌனத்தின் மூலம் வெளிப்பட்டது. இந்த மண்ணிற்கேயுரிய மகத்துவத்தை இக் கிராமமும் மக்களும் இழந்துவிடும் நாள் அதிக தூரத்தில் இல்லை என்ற பயம் அதிபரைப் பாதித்திருந்தது.

சாப்பிட்ட கையோடு ஒரு குட்டித்தூக்கம் போட்டு எழுந்து பின்னேரம் 'ரீ'யைக் குடித்துவிட்டு பாடசாலைக்குப் போனால், இரவு ஏழு மணிக்குப் பிறகுதான் மீண்டும் வீட்டில் அதிபரைக் காணலாம்.

அன்று பின்னேரம் குட்டித்தூக்கம் கலைந்து எழுந்து, பெரிதாகக் கொட்டாவி விட்டு, பின்பக்கமாக கைகளைப் பிணைத்து, பிடரியை அணைத்துச் சோம்பல் முறித்தபடி பின்னேரம் பாடசாலையில் செய்ய வேண்டிய பணிகளை அடுக்கடுகாக மனதில் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

'சேர்! சேர்!!'

ஒரு கூட்டம் வீட்டு வாசலில் வந்து நின்றது. வந்தவர்களை உள்ளே பிரவேசிக்க இடமளிக்காது நாய் உக்கிரமாகக் குலைத்தது.

"பிளயர்! உள்ளே போடா."

நாயை விரட்டி விட்டு வந்தவர்களை உள்ளே வரும்படி வரவேற்றார். கோயில் கும்பாவிஷேகத்திற்காக நிதி சேகரிக்க கோயில் தர்மகர்த்தாவின் தலைமையில் வந்த குழுவினரைக் கண்டதும் கணேசலிங்கத்தின் உள்ளம் குமுறியது.

போனமாதம் நிதிசேகரிக்க வந்தபோது பெயர்ப்பட்டியலில் ஒவ்வொருவரும் ஆகக்குறைந்த தொகையாக 500 ரூபாயும் கூடிய தொகையாக 2000 ரூபாயும் எழுதியிருந்தார்கள். 'நானும் எந்த வகையிலும் குறைந்துவிடவில்லை' என்பதுபோல் 2000 ரூபாவைப் பெருமிதத்தோடு எழுதிய பின்புதான், இந்தத் தொகை அடுத்தமாதச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலவில் எங்கே போய் இடிக்குமோ? என்று யோசித்துவிட்டு, வந்த பின்பு பார்ப்போம் என்று இருந்துவிட்டார்.

அந்தத் தொகையை அறவிடத்தான் இப்பொழுது வந்திருக்கிறார்கள்.

"தாங்கோ ஐயா பெயர்ப்பட்டியலை."

அவசரமாக வாங்கிய கணேசலிங்கம் தனது பெயரைப் பார்த்து, அதனைப் பேனையால் குறுக்காகக் கோடு கீறி வெட்டிக் கொண்டிருந்தபோது,

"இதென்ன 'சேர்' ஏன் பேரை வெட்டுறியள்? என்ன நடந்தது?"

தர்மகர்த்தா வியப்புடன் கேட்டார்.

"என்ன நடக்கவேணும்? நீங்கள் கோயில்களையும் கோபுரங்களையும் கட்டி கும்பாபிசேகமும், சங்காபிசேகமும் செய்யுங்கோ. கண்ணால் காணாத தெய்வத்துக்காக கால்தேய நடந்து எதை எதையோ செய்யுங்கோ. கண்முன்னால் மனிதன் வாழ முடியவில்லை என்று வழி மாறிப்போகின்றான். பேசாமல் இருங்கோ. நாளைக்கு உங்கட கோயில்களை கும்பிட ஆளில்லாமல் கோயில்களும் கோபுரங்களும்தான் மிஞ்சிக் கிடக்கப் போகின்றன. உரியதை உரிய நேரத்தில் செய்யாவிட்டால் உள்ளதையும் இழந்து ஒன்றுமில்லாமல்தான் நிற்க வேண்டும். பள்ளிக்கூடத்துக்கு வந்து பாருங்கோ. சிவலிங்கம், சண்முகலிங்கம், கணேசலிங்கம் எண்டு எல்லா லிங்கங்களும் வாழ வழி இல்லையெண்டு குடும்பத்தோட மதம் மாறுகினம். பிறகு யாருக்கு ஐயா இந்தக் கோயிலும் கோபுரமும்?"

அதிபரின் ஆவேசமான பேச்சைக்கேட்டு வந்தவர்கள் மௌனமாக திரும்பினார்கள்.

✍



# விடிவு

சுவாமி சங்கரானந்தர் வாழ்க்கையின் தாற்பரியங்களையும் தத்துவங்களையும் பற்றி அருமையாக விளக்கிக் கொண்டிருந்தார். இடையிடையே தனது கருத்துக்களுக்கு வலுச் சேர்ப்பதற்காகக் கதைகளையும் உதாரணங்களையும் நகைச்சுவையாகச் சொன்னது சிந்திக்கக்கூடியதாக இருந்தது.

இப்பொழுதெல்லாம் ஆத்மீகம் வயது போனவர்களுக்கென்று ஒதுக்கிவிட முடியாதபடி இளந் தலைமுறையினரும் ஒவ்வொரு அமைப்புக்களினுடாக மனஅதைிக்கும், உடல் ஆரோக்கியத்துற்குமான வழிகளைத் தேடித் திரிகிறார்கள் என்பது சந்தோஷத்திற்குரிய விடயமாக இருந்தது.

காவியுடை, கழுத்தில் உருத்திராட்சங்காய், நெற்றியில் சந்தன குங்குமம், தலைமுடியும் தாடியும் தனியொரு களையை ஏற்படுத்த, அவரது தேகம் மின்னலை போல் பிரகாசமும், வாளிப்பும் கொண்டு விளங்கியது.

"எனக்கு வயது முப்பது. உங்களால் சொல்ல முடியுமா? இதுவரை ஒரு நோய் என்னை அணுகியதில்லை. நான் ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருப்பதற்கு எனது பழக்க வழக்கங்களே காரணம்."

சுவாமியாரின் பேச்சு என்னையும் வசீகரித்துவிட்டது என்பதற்கு அடையாளமாக நான் நிமிர்ந்து உட்காருகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனக்கட்டுப்பாடு உணவுமுறை தியானம் போன்றவற்றால் நமது உடல் உள்ளம் இரண்டும் அழகு பெறுகின்றது. மனஅடக்கம் என்பது எமது புலன்களைக் கட்டுப்படுத்தும் மாபெரும் வல்லமை கொண்டது. அதனால் நாம் தினமும் தியானப் பயிற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் ஞாபக சக்தியை வலுவடையச் செய்து, படிப்பிலும் முன்னேற முடியும். நாம் ஒரு இலட்சியத்தை நோக்கி பயணிக்க வேண்டும். அதற்கு புலனடக்கம் அவசியமானது. அதன் மூலம் உயர்ந்த நிலையை அடையலாம்."

சுவாமியார் தனது பேச்சை தொடர்ந்து கொண்டிருந்தார்.

நான் பத்தாம் ஆண்டு படிக்கும் மாணவன். ஆனால் வயதுக்கும் அறிவுக்கும் தொடர்பில்லாத அனுபவத்தைப் பெற்றுக்கொண்டு அதனால் ஏற்பட்ட பாதிப்புக்களினால் கூனிக் குறுகிப் போய் நிற்கும் என்னை நல் வழிப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு சமய பாட ஆசிரியர்தான் எனக்கு புத்திமதி சொல்லுவார்.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் தான் அவர்களை கெட்டவர்களாக்குகின்றது. அறநெறிப் பாடசாலையின் ஆதரவில் இந்தியாவிலிருந்து வந்த சுவாமிஜி ஒருவர் மாணவர்களுக்கு மனக் கட்டுப்பாடு பற்றியும், ஞாபகசக்தியை பெருக்குவது எப்படி என்பது பற்றியும் மூன்று நாட்கள் கருத்துரை வழங்க இருக்கிறார். நீங்களும் போங்கோ."

எல்லோருக்கும் பொதுவான அறிவித்தலைக் கொடுத்த பின்பு,

"குணாளன் நீர் கட்டாயம் போக வேண்டும். நான் அங்கு வந்து பார்ப்பன்."

ஆசிரியர் அழுத்தமாகச் சொன்ன காரணத்தினால்தான், விருப்பமில்லாமல் இந்த இடத்திற்கு வருவதற்கு சம்மதித்தேன். ஆனால் வந்தது எவ்வளவோ பயன்தரும் போல எனக்கு தோன்றியது.





"சின்ன வயதிலேயே நாம் சில பழக்க வழக்கங்களைப் பழகிக்கொள்ள வேண்டும். தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்பார்கள். உண்மைதான். பெரியவர்கள் கெட்டுப்போகாதே கெட்டுப் போகாதே எனச் சொல்வார்களே தவிர, கெட்டுப்போனால் என்ன நடக்கும் என்பதை சொல்லிக் கொடுப்பதில்லை. பிள்ளைகள் எல்லாவற்றையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். அதற்காக பிஞ்சிலே பழுக்கக் கூடாது. அந்தந்தப் பருவத்தில் தான் அதை அதைச் செய்ய வேண்டும். தமிழ் திரைப்படங்களில் முக்கியமான கட்டங்களில் கதவை அடைப்பது, விளக்கை அணைப்பது........ இவற்றினைப் பார்க்கும் போது அதன் பின்னால் என்ன நடக்கும் என்ற விசாரணைகளில் தான் மனம் ஆவலுறும் ........."

சுவாமியார் கூறியதும் சபையில் சிரிப்பொலி எழும்பியது. அவர் தொடர்ந்தார்.

"இந்து மதம் நான்கு தர்மங்களை வகுத்துத் தந்திருக்கிறது. பிரமச்சரிய பருவத்தில் எல்லா வித்தைகளையும் பயில வேண்டும். கிருகஸ்தனாகும்போது மனைவியோடு சேர்ந்து இல்லற இன்பங்களை அனுபவிக்க வேண்டும். அதற்காக பிரமச்சரியத்தில், அதாவது கல்வி கற்கும் பருவத்தில் கணவனாகவோ மனைவியாகவோ இருந்து பாடசாலைக்கு போய்படிக்க முடியாது. வாழ்க்கை முழுவதும் கல்வி தொடருகிறது. ஆனால் வாழ்நாள் முழுவதும் இல்லற இன்பத்தை அனுபவிக்க முயற்சிக்க கூடாது. அந்தப் பருவத்தில் அதைச்செய்ய வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு. 'விந்துவிட்டாயோ நொந்து கெட்டாயோ' என்றொரு பழமொழி உண்டு. ஆண்மை இழந்து, முதுமை விரைவில் வந்து நோயாளிகளாக எம்மை மாற்றி விடாமல் ஆரோக்கியமாக வாழ பழகிக் கொள்ள வேண்டும். ..............."

சுவாமியார் சொல்லிக்கொண்டே போக எனக்கு எதையோ இழந்துவிட்டது போன்ற பயம் என்னைப் பிடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா அம்மாவிற்கு அடுக்கடுக்காக நான்கு பிள்ளைகள். எனக்குப் பிறகு ஒரு தம்பியும் இரண்டு தங்கைகளும். நான்தான் குடும்பத்தில் மூத்தபிள்ளை.

சின்ன ஓலை வீடு. வரிசையாக அம்மாவிற்கு அருகில் படுத்திருப்போம். எனக்கு அம்மாவின் அருகில் படுத்தால்தான் நித்திரை வரும். சில வேளைகளில் அம்மாவை கட்டிப்பிடித்துக் கொண்டு படுப்பேன். நித்திரையிலும் அம்மா கையளவு தூரத்தில் தட்டுப்பட வேண்டும்.

ஒருநாள் ஒரு பயங்கரக்கனவு. என்னை எதுவோ துரத்தி வருவது போலவும் நான் பாதாளத்தில் விழுந்து விட்டது போலவும் ..... அதிர்ச்சியிலிருந்து மீளாது, திடுக்கிட்டு எழும்பி இருந்து, அம்மாவை தேடினேன். அம்மா அருகில் இல்லை. பயமும் அதிர்ச்சியும் சேர்ந்து புதிய குழப்பமும் உருவாகியது. 'அம்மா இந்த நடு இராத்திரியில் எங்கு போயிருப்பாள்?' எண்ணங்கள் மோதியபோது பயம் உண்டாகியது.

வானத்து நிலவுக்கீற்றுக்கள் கூரையின் ஓலைகளின் இடையே புகுந்து வீட்டிற்குள்ளும் மெதுவாக விளையாடத் தொடங்கும்போது, இருளின் கனதி குறைந்து அருகில் இருப்பவரை காட்டும். அம்மா சற்று தூரத்தில் தங்கைகளோடு படுத்திருப்பது தெரிந்தது. நித்திரை கண்களை தழுவ மறுத்தபோது எண்ண அலைகள் தொடர்ந்து வந்து என்னை தாக்கியது.

காலத்தின் ஓட்டத்தில் எனது சிந்தனைகள் வித்தியாசமாக மாறத்தொடங்கின.

நரேனும் குமாரும் நல்ல நெருக்கமான எனது கூட்டாளிகள். அவர்களுடன் பழகியபோதுதான் தெரிந்தது என்னை விட நிறைந்த அனுபவசாலிகளாயும், சகலகலா வல்லவர்களாகவும் அவர்கள் இருக்கிறார்கள் என்பது.





"இன்னமும் ஒரு வருடம் சோதினைக்கு இருக்குது. ஆனால் படிக்கிற மாதிரித் தெரியேல்ல. படிப்பது போதாது."

வீட்டில் அம்மா முணுமுணுக்கத் தொடங்கினாள்.

அவளுக்குப் படிப்பதாகப் பொய்ச்சாட்டு சொல்லி நரேனுடனும் குமாருடனும் காணச்சகிக்காத காட்சிகளையெல்லாம் களவுகளவாக பார்த்து மகிழ்ந்தோம். நரேனுக்கு காதல் அனுபவமும் இருப்பதினால், அவன் அடிக்கடி எங்களை விட்டுத் தொலைந்து விடுவான்.

குமாரும் படிக்கத் தொடங்கிவிட்டான் போல தெரிந்தது.

'குடும்பத்தில் மூத்தபிள்ளை நான் முன்மாதிரியாக இருந்தால்தான் மற்றவர்களும் என்னைப் பார்த்து பின்பற்றுவார்கள். விளையாட்டை விட்டுப்போட்டு படிச்சு எல்லாப் பாடத்திலும் கூட 'மார்க்ஸ்' வாங்க வேண்டும்.'

முடிவெடுத்தேன்.

எனது கஷ்ட காலம். அம்மா அன்று மாமி வீட்டுக்கு என்னை அனுப்பியிருக்காவிட்டால் நான் நிச்சயம் இப்படி மாறியிருக்க மாட்டேன். மாமா வேலை அலுவலுக்காக வெளியூர் போய்விட்டார்.

மாமி என்று சொல்வதற்கு, அவளுக்கு அவ்வளவு பெரிய வயதில்லை. இருபத்தைந்து வயதிற்குள் தான் இருக்கும். ஆண்டுக்கொன்றாய் இரண்டு பிள்ளைகள். கடைசிப்பிள்ளைக்கு இரண்டு வயது.

"சதீசுக்கு சரியான காய்ச்சலும் சளியுமாம். மாமி பாவம், தனிய வச்சு கொண்டு இரவில் ஏதாவது ஒன்றென்றால்? போய் உதவியாக இருந்துவிட்டு விடியவெள்ளன வா."

அம்மா அனுப்பிவிட்டாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் இருவரும் நன்றாக உறங்கிவிட்டார்கள். மாமி இரவு உடையில் கவர்ச்சியாக தெரிந்தாள். என்னையும் மீறி என் கண் பார்வை அவள் அங்கங்களை அளவெடுக்கத் தொடங்கிவிடாமல் எச்சரிக்கையாகி கூச்சப்பட்டவனாய் ஒதுங்கிக் கொள்ள முயற்சித்தேன். அவளிடம் அப்படி எந்த மாற்றமும் ஏற்பட்டதாக தெரியவில்லை.

மாமி இரவுச்சாப்பாட்டை என்னுடன் சேர்ந்து சாப்பிட்டாள். சமையலறையில் பாத்திரங்களைக் கழுவியபடி, அதனைச் சுத்தப்படுத்துவதற்கு என்னை உதவி செய்யச் சொன்னாள். நீண்ட நேரம் ஏதேதோ பேசியபடியே இருந்தாள்.

இரவு நேரத்தனிமை, மாமியின் நெருக்கம் எல்லாம் என் மனதில் வித்தியாசமான கற்பனைகளைத் தோன்றச் செய்தன. முன்னர் கண்டிருந்த விகாரமான காட்சிகள் எனது உணர்வலைகளை மென்மேலும் தூண்டியதனால் என்னை எதுவோ நிலைகுலையச் செய்வதுபோல உணர்ந்தேன். அதிலிருந்து மீள்வதற்காக,

“மாமி நான் படுக்கட்டுமா? எனக்கு நித்திரை வருகிறது. நீங்கள் எத்தனை மணிக்கு நித்திரை கொள்வீங்கள்?”

“நான் படுக்க பதினொரு மணியும் ஆகும். படுத்தா நித்திரையும் வாறேல்ல. இப்ப ஒன்பது மணி தானே”

மாமி தனக்கு நித்திரை கொள்வதில் சம்மதமில்லை என்பதை மறைமுகமாகச் சொல்லிவிட்டாள்.

அந்த இரவுப் பொழுதில் அவளின் பார்வை போதையேற்றுவதைப் போல இருக்க நான் தடுமாறினேன். அவளின் ஸ்பரிசம் என்மீது பட்டபோது, அதில் தாய்மையின் அரவணைப்புத் தெரியவில்லை. இரத்தநாளங்களில் சூடேறிவிட்டதைப் போலவும், தசைப் பொதிகளினூடாக இன்பக்கிளர்ச்சி என்னை வசீகரிப்பதாகவும் உணர்ந்தேன். அன்றைய இரவு வாழ்க்கையில் மறக்க முடியாத புதிய அனுபவத்தை ஏற்படுத்தியது.





வாழ்க்கையின் இன்பங்களையெல்லாம் முழுமையாக அனுபவித்த மகிழ்ச்சியில் என்னை மறந்தேன். தொடர்ச்சியாக மூன்று இரவுகள். மாமியும் நானும் சொர்க்கத்தில் இருந்து மீண்டது போன்ற திருப்தியை ஏற்படுத்தியது. காற்று நிறைந்த பலூன் மேலே ......மேலே....... வானத்தில் பறப்பதுபோல நானும் இன்ப உணர்வுகளால் இழுக்கப்பட்டு மேலே பறப்பதும். திடீரெனக் காற்று இறங்கிய பலூனாய் சோர்ந்து துவண்டு போவதுமாய் ........ இது மனித வாழ்வின் இன்ப ரகசியம் என வியந்தேன்.

மாமா வந்த பின்பு மாமியைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும் என்ற ஆசையில் ஆவலோடு ஒருமுறை போனபோது, அவள் அந்நியத்தனமாய் ஒதுங்கிக்கொண்டாள். எம் இருவரிடையே எதுவித அந்தரங்கமுமே இல்லாத மாதிரி இவளால் மாறிக்கொள்ள முடிந்த போது, என்னால் ஏன் அது முடியவில்லை? அவளும் அந்த அனுபவங்களும் என்னைப் பாதித்ததை யாருக்கு சொல்ல முடியும்? இன்ப அவஸ்தைகளாய் அவற்றை எனக்குள்ளே பத்திரப்படுத்திக் கொண்டேன்.

கனவிலும் நினைவிலும் திரும்ப திரும்ப அதுவே என்னை துரத்தி துன்புறுத்துவதையும் தவிர்க்க முடியவில்லை.

ஆண்டு இறுதிப்பரீட்சை தமிழ்ப் பாடத்தில் வந்த கட்டுரைத் தலைப்புகளில் ஒன்று, உமது வாழ்வில் மறக்கமுடியாத சம்பவம் பற்றி 300 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை எழுதும்படி கேட்கப்பட்டிருந்தது.

மனதில் அடக்கி வைத்திருந்த மறக்கப்பட முடியாத சம்பவங்களை இங்கு வெளியிட முடியுமா? கூடாதா? என்ற ஆராய்ச்சியிலோ, சிந்தனையிலோ மனம் ஈடுபடவில்லை. என்னையும் அறியாமலே கடல் அலையாய்ப் பெருக்கெடுத்து வந்த எண்ணங்கள் எழுத்துருவம் பெற்று ஒரு கட்டுரையாக அமைந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பி வாசிக்க நேரம் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் மனமாற்றம் பெற்று அதை 'ரீச்ச'ரிடம் கொடுக்காமல் விட்டிருப்பேனோ தெரியாது.

'ரீச்சர்' 'நேரம் சரி தாரும்' என்று அவசரப்படுத்தியதால் விடைத்தாள் கைமாறியது. பின் விளைவுகள் பற்றி சிந்திக்காத நான் பாடத்தில் அதிக புள்ளிகள் கிடைக்கும் என்ற ஆவலில் காத்திருந்தேன்.

தமிழ் ரீச்சர் மோகனா திருமணமாகாத அழகிய இளம் பெண். அவள் வகுப்பிற்கு வந்தபோது மாணவர்கள் எல்லோரும் புள்ளிகளுக்காக சுற்றிவளைத்துக் கொண்டார்கள். அவள் கண்கள் என்னைத் தேடிக் கண்டுகொண்டன. என்னை அவள் பார்த்த பார்வை ...... கேவலமான அசிங்கப் பிறவியைப் பார்ப்பதுபோல அவளது முகத்தில் அருவருப்பு உணர்வு அப்பிக்கிடந்தது,

சற்று நேரத்தின் பின் சமய 'ரீச்சர்' வகுப்பிற்குள் வந்து என்னை தனிமையாக அழைத்து சென்றார். அவர் கொஞ்சம் வயது போன ஆசிரியர் என்பதால் மோகனா 'ரீச்சர்' சமய பாட சாந்தி 'ரீச்ச'ரிடம் விசாரணைக்கான பொறுப்பை ஒப்படைத்திருக்க வேண்டும்.

"குணாளன் நீர் ஒரு நல்ல பிள்ளை. உம்மை யாரோ தவறான வழியில் வழி நடத்தியிருக்கிறார்கள். அனுபவச் சிதறல்களாய் உமது கட்டுரையை எழுதியிருக்கிறீர். என்ன நடந்தது? நான் உமது அம்மா என நினைத்துக் கொண்டு சொல்லும்."

'ரீச்சர்' எவ்வளவோ அறிவுரைகள் சொல்லிக் கேள்விகளைக் கேட்டுவிட்டார். நான் எதற்குமே வாய் திறக்கவில்லை.

"இல்லை."

"அப்படி ஒன்றுமே இல்லை."

இவற்றை மட்டும் திரும்பத் திரும்பச் சொன்னேன்.





"அதிபரிடம் உமது கட்டுரை இருக்கிறது. அவர் அப்பா அம்மாவை அழைத்துச் சொல்லப் போவதாகவும் 'சேர்டிபிக்கட்' தந்து வீட்டுக்கு அனுப்பப் போவதாகவும் சொன்னார். நீர் உண்மையைச் சொன்னால் தான் என்னால் உமக்கு ஏதாவது உதவி செய்ய முடியும்."

வேறு வழியில்லாமல், மாமிவீட்டில் நடந்தவற்றை சொன்னேன். அவர் அதை ஒரு சந்தர்ப்ப வசத்தினால் ஏற்பட்ட நிகழ்வாகவும், அதற்கு முழுக்காரணம் மாமிதான் எனவும், என்னைச் சமாதானப் படுத்தினார்.

"இனிமேல் இப்படியான செயல்களில் ஈடுபடவேண்டாம், அங்கே போகக் கூடாது."

கடுமையாக எச்சரித்தார்.

எனக்கு மாமியை நினைத்தால் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. என்னை சாக்கடையில் விழுத்திவிட்டு, எதுவுமே தெரியாத அப்பாவி மாதிரி, பத்தினி வேடம் போடும் இவளைப் போல எத்தனை பேர் தலைமறைவாக இருக்கிறார்களோ தெரியாது. இவர்களின் முகத்திரையைக் கிழித்து சமூகத்தின் முன் நிறுத்தி நாலு கேள்வி கேட்க மனம் துடித்தது.

அதிபரின் விசாரணையின் பின் அம்மா வகுப்புக்கு வந்தார். அவவிடம் என்ன சொல்லப்பட்டதோ தெரியாது. முகத்தில் சோகம் தெரிந்தது கண்களில் நீர் முட்டிக் கிடந்தது.

வகுப்பில் எல்லோருமே வித்தியாசமாக என்னைப் பார்க்கத் தொடங்கினார்கள். என்னோடு பேசுவதையும் தவிர்த்துக்கொண்டு ஒதுங்கினார்கள். பெண்பிள்ளைகள் பாம்பைப் பார்த்து பயந்து ஓடுவது போல என்னைப் பார்த்துப் பயந்து ஓடினார்கள். எல்லாம் மாமி என்ற மாயப்பிசாசு தந்ததுன்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அவளைக் கொலை செய்து விடுவோமா?'

மனம் துடித்தது.

தாழ்வுச்சிக்கலால் குற்றவாளியாகி தலைகுனிந்து நின்ற என்னைச் சமய பாட 'ரீச்சர்'தான் உற்சாகப்படுத்தி வாழ்வில் நம்பிக்கை ஊட்டினார்.

இன்று இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை, என்னை மூடியிருந்த மாயத்திரையை விலக்கி வெளிச்ச உலகிற்குக் கொண்டுவந்து விட்டதுபோல இருந்தது: அத்துடன், சுவாமியாரின் போதனைகளை உன்னிப்பாக கேட்டபோது 'இனி ஒரு பயமும் எனக்கு இல்லை. நான் நேர்வழியில் நடப்பேன்' என்ற நம்பிக்கை மனதில் அரும்பி மலர்ந்தது.



# மீண்டும் வருமா?

போக்குவரத்துகள் சுமூகமாக நடந்த சமாதான காலப்பகுதி அது. திருகோணமலை 'பஸ்' நிலையம் வழமை போல சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கியது.

"கிண்ணியா! கிண்ணியா! நிலாவெளி! நிலாவெளி! ஓமந்தை! ஓமந்தை! ......."

ஒவ்வொரு திசையிலிருந்தும் வாகனங்களுக்கு ஆள் சேர்ப்பதற்காக கூவி அழைப்போரின் குரல் ஒலி சுருதி பிசகாமல் மாறி மாறி ஒலித்துக்கொண்டிருந்தது.

பாதை ஓரத்திலிருந்த கல் ஒன்றில் இருந்தபடி 'பாலன்' சற்று தூரத்தில் தெரிந்த தனது சாம்ராச்சியத்தை ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

காலங் காலமாக 'பஸ்' நிலையம் ஏழைகளுக்கும் இரந்துண்டு வாழுவோருக்கும் புகலிடமாக இருந்தபோது அதை தனக்கும் உரிமையானதாகச் சொந்தம் கொண்டாடிய பாலனுக்கு, அதனை இழந்தது துன்பத்தை தருவதாகத் தான் இருந்தது.

நகரத்தில் எத்தனையோ கட்டிடங்கள் புதிது புதிதாக எழும்பிவிட்டன. நல்ல நிலையில் இருக்கும் பாடசாலைக் கட்டிடங்களும், மாடிகள் கட்டுவதற்காக இருந்த இடம் தெரியாமல் இடிக்கப்பட்டுப் புதிதாக மாடிகள் எழுப்பப்பட்டுவிட்டன. ஆனால் அந்த 'பஸ்'தரிப்பிடத்தில் உள்ள உடைந்த நிலையில் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு பழைய கட்டிடங்களிலும் எந்தவொரு புண்ணியவானின் பார்வையும் பட்டுவிடாத வரைக்கும் பாலன் போன்றவர்கள் நிம்மதியாக உண்டு உறங்கிப் பொழுதைப் போக்கினார்கள்.

பதினைந்து வருடங்களாக சொந்த வீட்டைப்போல சுகம் தந்த அந்தக் கட்டிடம், அவனுக்குள் சொத்துரிமை போன்ற இறுக்கத்தை உண்டாக்கியது. அதில் நின்றுகொண்டு முன்பக்கத்தைப் பார்த்தால் மணிக்கூட்டுக்கோபுரம், தேங்காய்க்கடை, சாராயக்கடை, பொதுச் சந்தை. எதிர்ப்பக்கத்தைப் பார்த்தால் பரந்துவிரிந்த கடல். அதில் ஆடி அசைந்து செல்லும் வள்ளங்கள். சற்று கண்ணை நிமிர்த்தினால் மலை உச்சியில் அழகாக கொலுவிருந்து அருளாட்சி செய்யும் கோணேசர். அண்மித்து தெரியும் 'ஆட்டோ'த் தரிப்பிடம். அதில் காலையிலும் மாலையிலும் மொத்தமாகவும் சில்லறையாகவும் நடக்கும் மீன் வியாபாரம். இப்படியே அந்த இடம் எந்நேரமும் இயக்கம் பெற்றபடி புதுப்பொலிவோடு விளங்கும்.

இவையெல்லாம் பழக்கப்பட்டுப்போன அந்த இடத்திலே, துக்கம் வந்தாலும் சரி சந்தோசம் வந்தாலும் சரி, நாள்தோறும் அதிகாலையில் எழும்பியதும் கைகளைக் கூப்பி கோணேசரைக் கும்பிட்டு விட்டுத்தான் பாலன் தனது மற்றைய வேலைகளைத் தொடங்குவான். அவரும் அவனுக்கு எந்தக் குறையும் வைத்ததில்லை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு எங்கிருந்தோ வந்து சேர்ந்தவள் 'காத்தி'. அது அவன் அவளுக்கு வைத்த செல்லப்பெயர். பத்து வயதிருக்கும். அதற்கேற்ற மூளை வளர்ச்சியில்லாதவள்.

"காத்தி! துப்பரவாய் இருக்கவேணும். சட்டையை ஒதுக்கியிருந்து பழகவேணும்"

இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லிக் கொடுத்தான். தன்னுடைய கையில் ஒப்படைக்கப்பட்ட பொருளைப்போல அவளைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கும் பொறுப்பைத் தானே எடுத்துக்கொண்டான்.





"என்னைத் தவிர ஒரு ஆம்பிளையளோடயும் கதைக்கக் கூடாது. சிரிக்கக் கூடாது. மேலில கைபோட விடக்கூடாது. காவாலிப் பெடியள் தொல்லைப்படுத்தினால் எனக்குச் சொல்ல வேணும் சரியே?"

அவன் புத்திமதி சொல்ல தலையை அசைத்து சரி என்பது போல சிரித்தபடி கேட்பாள்.

பாலனின் வாட்ட சாட்டமான உடம்பைப் பார்த்துவிட்டு அவனுக்கு யாரும் இரக்கம் காட்டுவதில்லை. மீன் வாடியிலோ, சந்தையடியிலோ எடுபிடி வேலை செய்து கையில் கிடைக்கும் காசில் தானும் காத்தியும் எதையாவது வாங்கிச் சாப்பிட்டு வாழ்கையைக் கழித்தார்கள்.

காத்தியின் தோற்றமும், அவளின் வளர்ச்சி குறைந்த செயலும் பார்ப்புவர்களிடம் அனுதாபத்தை ஏற்படுத்துவதால் ஐந்தோ பத்தோ கிடைக்கும். அதையும் பாலனே வாங்கி பத்திரப்படுத்தி வைத்திருந்து, அவளுக்குத் தேவையானதை வாங்கிக் கொடுப்பான். இருவரும் இணைபிரியாமல் சேர்ந்தே திரிவார்கள்.

காத்தியின் பராமரிப்பாளனாகவும், பாதுகாவலனாகவும் தானே பொறுப்பினை எடுத்துக்கொண்ட பாலன், தன் உணர்வுகளுக்கு ஈடு கொடுப்பவளாகவும் அவளை மாற்றிக் கொண்டான். நான் உனக்கு எல்லாமுமாய் இருக்கிறேன். என்னுடன் பழகுவது மாதிரி யாரிடமும் நீ பழகக் கூடாது எனக் கடுமையாக எச்சரித்து, பயம் காட்டி வைத்திருந்தான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சன நடமாட்டம் குறைவாக இருந்தது. சாப்பாடு வாங்குவதற்கு காசும் இருக்கவில்லை.

"கடற்கரைப் பக்கம் போனால் ஐந்தோ பத்தோ கிடைக்கும். காற்றும் வாங்கின மாதிரி இருக்கும். வா காத்தி போவம்".

அவன் அவளை அழைத்தான்.

"எனக்கு தலை இடிக்குது நான் வரல்ல. நீ போ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோம்பலாக இருந்தால் அப்படித்தான் சொல்லுவாள்.

மாலை நேரம் நல்ல காற்றும், அமைதியான சூழலும் அவளைத் தாலாட்டியது போல உறங்க வைத்தது. பொழுதும் இருண்டுவிட்டது.

தூக்கத்தில் கிடந்தவளை யாரோ தட்டி எழுப்புவது போல இருக்கவே கண்ணைத்திறந்து பார்த்தாள்.

"யார் பாலையாவே?"

மாலை இருட்டில் யாரெனத் தெரியவில்லை. கண்களைக் கசக்கினாள்.

"காத்தி நான் சில்வா. சத்தம் போடாதே!."

மெதுவான குரலில் இரகசியம் பேசுவது போலச் சொன்னான். நீண்ட நேரமாக பாலனும் வரவில்லை என்பதைக் கவனித்துக் கொண்டிருந்தவன், இரவாகிவிட்டதால் பூனை போல் மெதுவாக அவளருகே வந்து நின்றான்.

"சில்வா! என்னடா வேணும்? இங்க நிண்டால் நல்ல அடி வாங்குவாய். கெதியாய் போ. பாலையா! ..... பாலையா!! ....."

அவள் சத்தமிட்டு அழைத்தாள்.

"சத்தம் போடாதே. பாலையா இல்லை. இந்தா உனக்கு காசு தாறன்."

"எனக்கு காசு வேண்டாம் நீ போடா."

அவள் ஆவேசமாய்க் கத்திய சத்தம் தூரத்தில் வந்த பாலனுக்கு கேட்டிருக்க வேண்டும். அவனும் சத்தமிட்டுக் கொண்டே ஓடி வந்தான். சில்வா கம்பி வேலிமேலால் பாய்ந்து விழுந்து வாடிக்குள் ஓடிவிட்டான்.





"பாலையா எங்க நீ போனாய்? வாடியில வேலை செய்யுற சில்வா என்னை தட்டி எழுப்பினவன். நான் நல்ல நித்திரையாகிக் கிடந்து திடுக்கிட்டு எழும்பிவிட்டன். எனக்கு காசு தந்தவன் நான் வாங்கேல்லை."

அப்பாவித்தனமாகச் சொன்னாள். இருண்டு கொஞ்ச நேரமாகவில்லை. அதற்குள் வந்துவிட்டான். 'இவளை இனிமேல் கண்ணும் கருத்துமாக பார்க்க வேண்டும். என்ன செய்திருப்பான்' என்ற பயம் பாலனைச் சற்று பயமுறுத்தியது.

"பாலையா! சில்வா இங்க மட்டும் தான் தொட்டவன்"

அவனின் கையைப்பிடித்து தனது இடுப்புப் பகுதியில் வைத்து காத்தி சொன்னபோது, 'இப்படி உலகம் தெரியாமல் இருக்கிறாளே. சில்வா கூட இவளைவிட மிஞ்சிப் போனால் மூன்று வயது அதிகமானவனாய் தான் இருப்பான். அதற்குள் அவனுக்குக் குறுக்கால போன ஆசை வந்து அலைகிறான். பார்' தனக்குள்ளே முணு முணுத்தவன், எச்சரிக்கையாக இருக்கவேண்டிய தேவையை உணர்ந்தான்.

இப்பொழுதெல்லாம் நகரத்தில் அடிக்கடி 'ஹர்த்தால்', ஆர்ப்பாட்டம், ஊர்வலம், துக்கதினம் என்று தினம் தினம் ஏதோ ஒன்று தொடருவதால் நகரத்தில் சனநடமாட்டமும் வாகனப் போக்குவரத்தும் குறைந்துவிடும். அவ்வேளைகளின்போது அவர்களின் வயிற்றுப்பாடும் அதோகதிதான்.

அன்று மூன்றாவது நாளாக தொடர்ந்து 'ஹர்த்தால்'. கடைகள் எல்லாம் பூட்டப்பட்டு வாகனப்போக்குவரத்து எதுவும் நடக்கவில்லை.

பசி வயிற்றில் கொழுந்துவிட்டு நெருப்பாய் எரிய அதைத் தணிக்க முடியாமல் தவித்தாள் காத்தி. கண் பார்வை மங்கி தலை பாரமாய் கனக்க, புரண்டு புரண்டு படுத்தபோது நித்திரைகூட வர மறுத்தது. உடல் எதற்கும் இடம் கொடுக்கமாட்டேன் என முரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்க தண்ணீரைக் குடித்து பசியை அடக்க முயற்சித்தும், அது பலன் தராமல் போகவே எழும்புவதும் இருப்பதும் படுப்பதுமாக ஏதேதோ முயற்சிகளில் ஈடுபட்டாள். தூரத்தில் படுத்தபடி அவளைக் கவனித்துக் கொண்டிருந்த பாலனுக்கு பரிதாபமாக இருந்தது.

"பசிக்குதா புள்ள?"

ஆதரவாகக் கேட்டான்.

"பசிக்குதோ? பாலையா. பசி பொறுக்க முடியல்ல. தண்ணி குடிச்சாலும் அடங்குதில்ல. தலையைச் சுத்துது."

அவளது கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென விழுந்ததைப் பார்த்ததும் அவனால் சகிக்க முடியவில்லை.

"சரி பேசாமல் படுத்திரு. நான் எங்காவது போய் உனக்கு சாப்பாடு கொண்டு வாறன்."

அவன் மெதுவாக எழும்பி நடந்தான்.

பசிக்களைப்பு, அமைதியான சூழல் இரண்டும் சேர்ந்து அவளை நல்ல உறக்கத்தில் ஆழ்த்தியது. நீண்ட நேரமாக உறங்கிப்போனவள் எழுந்து பார்த்தபோது இருட்டியிருந்தது. 'பாலையா இவ்வளவு நேரமும் எங்கே போயிருப்பான்?' என யோசித்தபடி எழுந்திருந்தாள்.

"காத்தி! காத்தி!! ஏன் தனியா இருக்கிறாய்? பாலையா எங்கே?"

அங்கும் இங்கும் பார்த்துவிட்டு சில்வா அவளருகே வந்தான்.

"இந்தா புள்ள சாப்பாடு ஒனக்கும் பாலையாக்கும்."

அவன் சொன்னதுதான் தாமதம். எங்கிருந்துதான் உற்சாகம் வந்ததோ தெரியாது. முகத்திலே புதுவித மலர்ச்சியோடு இரண்டு கைகளாலும் 'பார்ச'லை வாங்கினாள்.





அவன் அவளருகில் மிக நெருக்கமாக அமர்ந்தான்.

"சத்தம் போடுவியா? நான் உனக்கு சாப்பாடு கொண்டுவந்து தந்தேனே. நீ நல்ல பிள்ள. இனிமேலும் ஒனக்கு பசியென்டா சாப்பாடு தருவன். சத்தம் போட மாட்டாய் தானே?"

அவளிடமிருந்து எதுவித பதிலுமில்லை. மௌனத்தை சம்மதமாக கருதிக்கொண்டான் சில்வா.

பசியின் கொடுமையை அனுபவித்த அவளால் சாப்பாட்டை இழந்துவிட மனம் இடம் கொடுக்கவில்லை. இவன் போனதும் பாலையா வர வேண்டும். இருவருமாகச் சாப்பாட்டைப் பகிர்ந்து சாப்பிட வேண்டும் என்பதிலேயே அவளது கவனம் இருந்தது.

சில்வாவுக்கு காத்தியின் பசி சாதகமாக அமைந்துவிட்டது.

"காத்தி! நாளைக்கும் ஒனக்கு சாப்பாடு கொண்டு வருவன். நான் போறன் புள்ள. வாடியில ஒருத்தரும் இல்ல."

அவன் சொல்லிக்கொண்டு விரைவாகப் போய்விட்டான்.

பசி முந்திக்கொள்ள பாலையா வரும் வரை காத்திருக்கும் பொறுமை விடை பெற்றது. நீண்ட நாட்கள் சோற்றைக் காணாதவள் போல வேக வேகமாகச் சாப்பிட்டாள். களைப்பு தலையிடி எல்லாம் குறைவது போல உணர்ந்தாள். கருவாட்டுக் குழம்பும் சோறும் அமுதமாக இருந்தது. நன்றாகச் சாப்பிட்டுவிட்டுத் திரும்பவும் படுத்தாள்.

"காத்தி! காத்தி!! நித்திரையா? எழும்பு காத்தி இந்தா உனக்குச் சாப்பாடு கொண்டு வந்திருக்கிறன். எங்கெல்லாமோ அலைஞ்சு கடைசியில ஒரு வீட்டில வேலை செய்து குடுத்துத் தான் வாங்கினன்."

"நான் பசியில சாப்பிட்டுவிட்டன். இந்தா உங்களுக்கு சாப்பாடு இருக்கு சாப்பிடுங்க."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இவளுக்காக நான் போகாத இடமெல்லாம் அலைந்து சாப்பாடு கொண்டுவர, இவள் யாரிடமோ வாங்கி சாப்பிட்டிருக்கிறாள். ஏதோ நடந்திருக்கிறது ......... யார் சில்வா வந்திருப்பானோ?' மனம் பலவித கேள்விகளை எழுப்பியது.

"பாலையா சில்வா வந்தவன். அவன்தான் சாப்பாடு தந்தவன். நாளைக்கும் தருவதாய் சொன்னான். அவன்........ அவன்......" அவள் முடிக்கவில்லை. கைகள் துருதுருத்தன.

அவளது உச்சி மயிரைப் பிடித்து அவளை தூக்கி இருத்தினான்.

"தூ! தூ!! துப்புக்கெட்டவளே."

அவளின் முகத்தில் காறித்துப்பினான்.

"சாப்பாட்டுக்காக மானங்கெட்டவளே! பசி பெரிசா? சாப்பாடு இல்லாட்டி நீ செத்துப்போவியா? இதைவிட சாகலாமே. எத்தனை தரம் புத்தி சொல்லியிருப்பன்."

வார்த்தைகள் அனலாய் சுட்டெரித்தபோது அடித்தது கூட அவளுக்கு வலிக்கவில்லை.

"பசி பாலையா. அவன் சாப்பாட்டைக் கொண்டு போயிடுவான் என்ட பயத்தில்தான் அப்படி ........... . இனிமேல் செய்யமாட்டன்."

"நீ எக்கேடு கெட்டாலும் எனக்கென்ன?"

திரும்பவும் அவளின் கன்னத்தை அவன் கைகள் பதம் பார்த்தன.

"நீ என்னோட பேசவேண்டாம். நீ எப்படி போனாலும் பரவாயில்லை."





அவன் கட்டடத்தின் மறு மூலைக்குச் சென்று துண்டை விரித்துப் படுத்துவிட்டான். சாப்பாட்டுக்காக அலைந்து, அது கிடைத்தும், கடைசியில் அவன் பட்டினியாய் கிடந்தான்.

காத்தி நீண்ட நேரமாக அழுதிருக்க வேண்டும். நித்திரையாகும் போது அவளின் விம்மலும், மூக்கைச் சீறி அழும் சத்தமும் கேட்டது.

'இவளை விட்டுப்பிடித்தால் தான் திருந்துவாள். நல்லாய் அழட்டும்.'

மனம் கறுவிக்கொள்ள அவளைக் கவனிக்காமல் படுத்திருந்தவன், பசிக்களைப்பினால் அயர்ந்து உறங்கிவிட்டான்.

விடிந்து எழுந்து பார்த்த அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. எதிரே பெரியதொரு புத்தர் சிலை!

இது திடீரென எவ்வாறு முளைத்தது? எதுவித சத்தமும், தடயமும் இல்லாமல் இரவோடு இரவாக எப்படி கொண்டு வந்தார்களோ தெரியாது. பெரிய மர்மமான செயலாய் இருந்தது.

காத்தி இருந்த இடத்தில் அவளையும் காணவில்லை. காத்தி எங்கோ தலைமறைவாகிவிட்டிருந்தது அதைவிட அதிர்ச்சியாய் இருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அவள் இருப்பதற்கான தடயங்கள் எதுவும் தெரியவில்லை. அடிமனதில் இனம்புரியாத வேதனை ஒட்டிக்கொண்டது. அவளின் உடைகள் பொதிந்து வைக்கப்பட்ட உரப்பசளை 'பாக்' அப்படியே கிடந்தது. அவள் மட்டும் எங்கே போயிருப்பாள்?

என்ன இருந்தாலும் புத்தி போதாதவளை நான் இப்படிச் செய்திருக்கக் கூடாது. அவள் அழும்போதாவது ஆறுதல் சொல்லியிருக்கலாம். என்னை விட்டால் அவளுக்கு யார் இருக்கிறார்கள்? தனது தவறுதான் காத்தி போனதற்கு காரணம் என்ற சுய மதிப்பீட்டில் மனம் ஈடுபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குத் தெரிந்த இடங்களிலெல்லாம் தேடியும் பலன் பூச்சியம்.

மறுநாள், வழமைபோல சன நடமாட்டம், வாகனப் போக்குவரத்து, கடைத்திறப்பு என நகரம் இயல்பு நிலைக்கு வந்து களைகட்டத் தொடங்கிவிட்டது. போவோர் வருவோருக்கெல்லாம் புத்தர் சிலை வேடிக்கைப் பொருளாகிவிட்டது. முன்னால் இருந்த ஆட்டோ தரிப்பிடம் மணிக்கூட்டுக் கோபுரத்தின் அருகில் மாற்றப்பட்டிருந்தது.

'ஒரு வேளை காத்தி சில்வாவைத் தேடிப் போயிருப்பாளோ?'

பார்ப்பதற்காக 'வாடி'ப் பக்கமாகப் போனான். அங்கும் அவள் காணப்படவில்லை.

"அரச போகத்தை துறந்து போதி மரத்தடியில் ஞானம் பெற போயிருந்தவரைக் கொண்டுவந்து மது, மாமிசம், குப்பைகளுக்கு நடுவில் இருத்தி இம்சை படுத்துகிறார்கள். கடவுளைக்கூட கைப்பொம்மையாக்கும் காலம்."

ஆட்டோ சாரதிகள் இருவர் கேலியாகத் தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர்.

நிமிர்ந்து பார்த்தான். கண்ணாடிப் பெட்டிக்குள் முதல் இருந்த சிறிய புத்தரின் பின்னால் பெரிய புத்தர்.

'இருவரும் வேறு வேறா?'

ஒரு கணம் சிந்தித்தான்.

'எப்படியாவது இருந்துவிட்டுப் போகட்டும். இந்தப் பெரியசாமி

வந்து என்னுடைய சந்தோசத்தையே கெடுத்துப் போட்டார். இவர் பெரிய ஆளாயிருப்பார் போல.'





மௌனமாகச் சிலையை வெறித்துப் பார்த்தான்.

'இவர் இந்த இடத்திற்கு வந்தது ஊருக்கு அவ்வளவு நல்லதாகத் தெரியவில்லை.'

திரும்பவும் தனது இருப்பிடத்தை வந்து பார்த்தான். நேற்றைய சாப்பாட்டுப் 'பார்ச'லை நாய்களும் காகங்களும் பங்கு போட்டுத் தின்றன. அன்றும் அவன் ஒன்றுமே சாப்பிடவில்லை. பைத்தியம் போல அலைந்தான். கால்போன போக்கிலே அங்கிருந்து நடந்தான்.

'காத்தி! நீ எனக்கு துணையாயும் ஆறுதலாயும் இருந்தாய். உன்பிரிவில் தான் அந்த அருமை தெரிகிறது. நான் கோபத்தில் உன்னை அடிச்சிருக்கக் கூடாது. பேசியது பிழை திரும்பி வரமாட்டியா? புத்தியிலாத பூச்சி. உன்னை அடித்ததும் என் தப்புத்தான். நான் தான் முட்டாள்.'

அவனால் அழுகையை அடக்கமுடியவில்லை. அழுதழுது தேடினான். எங்குமே காணவில்லை.

பாலன் ஒரு கிழமையாக அந்த 'பஸ்'நிலையத்ததை விட்டு எங்கோ தொலைதூரத்திற்குப் போனான். அந்த இடத்தை விட்டு வந்ததால் காத்தியின் பிரிவும், அதனால் ஏற்பட்ட வருத்தமும் குறைந்திருந்தது.

'திரும்பி வந்து என்னைத் தேடுகிறாளோ? இன்னும் ஒரு தடவை அங்கே போய் பார்த்து வந்தால் நல்லது'

ஆவலுடன் பழைய இடத்திற்கு மீண்டும் வந்தான்.

அந்தப் பழைய கட்டிடத்தில் 'கும்புறுப்பிட்டி' என அழிந்தும் அழியாமலும் தெரிந்த எழுத்துக்களை மறைத்து இராணுவத்தினரின் படுக்கை விரிப்புகள் காயப்போடப்பட்டிருந்தன. ஒவ்வொருவராக பயணிகள் செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருந்த தடுப்புச்சுவர்கள், பாலனைப் போன்றவர்களின் படுக்கையறைகளாக முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தன. அவற்றின் அடையாளமே தெரியாதபடி இராணுவ சீருடைகள் தொங்கிய வண்ணம் இருந்தன.

பயணிகள் அந்த பக்கம் போகவில்லை. 'பஸ்'கள் அடுத்த கட்டிடத்தின் முன்பாக வந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு போய்விடுகின்றன.

பெரிய புத்தர் சிலையோடு சேர்ந்த பாலையா இருந்த கட்டிடம், கம்பி வேலியால் அடைக்கப்பட்டு, அவனது சாம்ராச்சியத்தில் இராணுவத்தினரின் குடியிருப்பு விஸ்தரிக்கப்பட்டிருந்தது.

'இந்த பெரியசாமி ரொம்ப பொல்லாதவர் போல. வந்த அன்றே எனது சந்தோசத்தைப் பறித்து விட்டார். இன்னமும் என்ன நடக்குமோ?'

அவன் பெருமூச்சு விட்டான்.

நிம்மதியாய் இருக்க ஒரு புகலிடமாய் அமைந்த அந்த இடம் பறிபோனது, அவனுக்கு ஏதோ ஒரு பெரிய சொத்தை இழந்த துன்பத்தை ஏற்படுத்தியது.

'பெரியசாமி பிச்சைக்காரரின் வாழ்கையோடும் விளையாடத் தொடங்கிவிட்டார். இனி அந்த இடத்தில் நின்றால் கூட சந்தேகப்படுவார்கள். எல்லாவற்றையும் மறப்பதற்கு இங்கிருந்து போய்விடுவது தான் ஒரேவழி' என நினைத்தான். 'யாரைத்தேடி வந்தேனோ அவளும் இல்லை. இருந்த இடமும் இல்லையென்று போனபின்பு இங்கே ஏன் இருக்க வேண்டும்' எனத் தன்னைத் தானே கேட்டு கொண்டு கால்போன போக்கில் போய்விட்டான்.

நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன. பழைய நினைவுகள் அந்த இடம் பற்றிய உணர்வுகள் உந்தித்தள்ள மீண்டும் ஒருமுறை தனது சொத்தாக கருதியிருந்த அதே இடத்திற்கு வந்தான்.

இந்த நான்கு வருடங்களிலும் எவ்வளவு மாற்றங்கள் நடந்திருக்கின்றன. முன்னால் இருந்த பொதுச்சந்தை மாடிக்





கட்டிடங்களோடு புதுப்பொலிவு பெற்றிருந்தது. பஸ் தரிப்பிடங்கள் கூட மாடிக்கட்டிடங்களோடுதான் களைகட்டிக்கிடந்தது. அந்தப் பழைய கட்டிடங்களைக் காணவில்லை. அவனும் காத்தியும் அன்பாக, ஆசையாக, இன்பமாக வாழ்ந்த அந்தக் கட்டிடத்தின் தடயமே இல்லாமல் புதிய கட்டிடம் ஒன்று அவ்விடத்தில் அமைந்திருந்தது.

நான் நினைத்தால் எதையும் செய்வேன் என்ற இறுமாப்புடன் புத்தர் சிலை கம்பீரமாகத் தோன்றுவது போல உணர்ந்தான்.

'கையில் எடுத்த கல்லால் ஓங்கி எறிவோமா?'

மன விகாரத்தால் ஆத்திரம் மேலெழுந்தது.

சிலை ஒன்று வந்த பின்னணியில் எத்தனையோ குழப்பங்களும் இழப்புகளும் ஒன்றின் பின் ஒன்றாக நடந்து முடிந்து விட்டன. எதற்குமே நான் பொறுப்பு அல்ல என்பது போல அப்படியே அதே நிஷ்டை நிலையில் புத்தர் காட்சி அளித்தார். மேலே மலை உச்சியில் கோணேசரின் கோபுரமும் மாற்றம் எதுவும் இன்றி அப்படியேதான் இருந்தது.

அழகிய கடல். ஓங்கி உயர்ந்த மலை. அருள் புரியும் கோணேசர். இத்தனை அழகையும் அள்ளி வழங்கும் இயற்கையைக் கண்டு ரசிக்கும்போது பசி கூடப் பறந்துவிடும். சில வேளைகளில் நித்திரை வராத போது நிலாக் காலங்களில் காத்தியும் அவனும் சொர்க்கத்தில் இருக்கும் பிரமையில் குதூகலித்த நினைவுகள் மனதைக் கசக்கிப் பிழிந்தன.

எல்லாமே போய்விட்டதே என்ற வெறுமையில் அவன் ஆழ்ந்தான். இடையில் நிகழ்ந்த இத்தனை மாற்றங்களுக்கும் காரணம் என்ன என பாலன் சிந்தித்த போது கண்களில் கண்ணீர் நிரம்பி அவனின் பார்வையை மறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாமலே

காலநேரம் தெரியாமல் வரும் பிரசவ வலியைப் போல அடிக்கடி வந்து துன்புறுத்தும் மழையை மனதுக்குள் சபித்துக் கொண்டவளாய், அவசர அவசரமாய் வீட்டை விட்டுப் புறப்பட்டாள் சுவேதா. அதிகாலையில் எழும்பி காலைச் சாப்பாடு மதியச் சாப்பாடு என ஒவ்வென்றையும் இரவே திட்டமிட்டதன்படி செய்வதற்கு இயந்திரக் கதியில் இயங்கிக்கொண்டிருந்த அவள் இடையிடையே கடைசி மகனை,

"எழும்பு! அருளன் எழும்பு!! பள்ளிக்கூடம் போக வேண்டும்."

பல்லவியைப் பாடித் தட்டி எழுப்புவதையும் தனது பணியில் முக்கியமானதாகக் கருதிக்கொள்வாள். எழும்புவதுபோல அசையும் அவனைத் தூக்கி இருத்திவிட்டுக் 'குசினி'க்குள்ளே போய் அடுப்பில் இருப்பதைப் பார்த்துவிட்டுத் திரும்பி வருவதற்கிடையில் எழும்பிய சுவடே தெரியாமல் குறட்டைவிடும் அவனை எழுப்புவதே பெரும் பாடாயிருக்கும்.

'இவனுக்கு எங்கிருந்துதான் இந்த நித்திரை வருகிறதோ தெரியாது. இனி எழுப்பி விட்டால் போதும். ரீச்சர் அது சொன்னவ. இது சொன்னவ. நான் நேத்தே சொன்னனான். அதை வாங்கித் தரவில்லை. காசு வேணும் ............ '

பிரச்சனைகளை அடுக்கிக்கொண்டே போவான். அவளும் அலுக்காமல் சலிக்காமல் அவற்றுக்கான தீர்வுகளை ஒவ்வொன்றாகச் சொன்னபடியே அங்குமிங்குமாகச் சுழன்று கொண்டு வேலைகளை





முடித்துக்கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் எல்லோரையும் அனுப்பிவிட்டு 'அப்பாடா!' என்று குளிக்கச் செல்வாள்.

நேரத்தைப் பார்த்துப் பார்த்து மீதப்படுத்தி அன்றைய கடமைகளிலிருந்து மீளும்போது புனர் ஜென்மம் எடுத்து வந்தது போல் அந்தக் கணங்களின் துன்புறுத்தலிலிருந்து விடுபடுவாள்.

ஆறுதல், அமைதி, நிம்மதி இருந்தால்தானே அலுவலகத்தில் போய் மற்றைய கடமைகளை ஒழுங்காக செய்யமுடியும். அதற்காக மனதை பக்குவப்படுத்துவதற்காகவோ என்னவோ குளித்துவிட்டு சுடச்சுட ஆவி பறக்கும் தேநீர்க் கோப்பையோடு கதிரையில் வந்து இருந்து கொண்டு ஆறுதலாக தேநீரைக் குடித்த பின்பு வேலைக்குப் புறப்படுவாள்.

"இன்று மழையும் விடாமல் பெய்கிறதே. எப்படி போவது?"

சிந்தனையில் மனம் சென்றதால் மேசையில் வைத்த தேநீர் கவனிப்பாரற்ற நிலையில் ஆறிக்கிடக்க, அவள் அதை குடிக்க மறுத்து வீட்டை விட்டுப் பாதித்தூரம் வந்த பின்பு ஏதோ முக்கியமான ஒன்றைத் தவறவிட்டு வந்ததுபோல மனது உறுத்திக்கொள்ள அதனை நினைவுபடுத்துவதில் முனைந்தபோதுதான் தேநீரை மேசையில் குடிக்காமல் வைத்துவிட்டு வந்தது ஞாபகம் வந்தது.

கால் வைக்கவே இடமில்லாத நெரிசலுடன் பயணிகளைச் சுமந்து வந்த 'பஸ்' ஒரு குலுக்கலுடன் அந்தத் தரிப்பிடத்தில் நின்றது.

மழையில் நனைந்த ஈரச் சேலை காலை ஒட்டிக்கொள்ளவும், ஈரக்குடையில் இருந்து வழிந்த மழைநீரோடு, சிரமப்பட்டவாறு தன் உடலைப் பயணிகளுக்கிடையில் புகுத்திக் கொண்டு அப்படியும் இப்படியும் திரும்ப முடியாத மூச்சுத்திணறலுடன் நின்றாள் சுவேதா.

இப்பொழுதெல்லாம் சகோதர இனத்தவர்களுக்கு எங்களைக் கண்டாலே வெறுப்போ அருவருப்போ என்று சொல்லமுடியாத ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏளனப் பார்வை. முன்பிருந்த ஒரு மரியாதையும் நட்புறவும் கலந்த உறவு ரீதியான சுமூகமான நிலையிலிருந்து ஏன் மாறினார்கள் என்று சொல்ல முடியவில்லை. தொடர்ந்து நடக்கும் யுத்தமா.......? யுத்தமென்றால் இவர்களுக்கென்ன? இழப்புக்கள் எங்களுக்குத்தானே. வெளிநாடுகளில் ஆதரவு அதிகரித்து விட்டது. அப்படியொரு நிலை தங்களுக்கு இல்லையென்ற பொறாமையா? தீக்குளிப்பு, உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம் ....... இவை கூட எமக்காக நடக்கக்கூடாதென்று நினைக்கிறார்களா? ஏதோ ஒரு காரணம் இல்லாமல் இல்லை.

பிள்ளைகளின் படிப்பு, பாதுகாப்பு, வசதி என்பவற்றைக் கருத்தில் கொண்டு பெரும்பாலான தமிழர்கள் கொழும்பில் குடியேறி விட்டார்கள். வெளி நாடுகளிலிருந்து வருமானம் வரும்வரைக்கும் அவர்களின் ஆடம்பர வாழ்விலும் எதுவும் குறைந்துவிடப் போவதில்லை. அதற்காக எல்லோருக்கும் அந்த வருமானம் இருக்கிறதென்றும் சொல்லமுடியாது.

சுவேதா நீண்ட காலம் கொழும்பில் வாழ்ந்து பழகிவிட்டதால், இப்பொழுது போக்குவரத்துகளில் ஏற்படும் சிரமங்கள் முற்காலத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் அதிகம் என்றே எண்ணினாள். அதனால்தான் இன்று பல பெண்களின் நெற்றியில் பொட்டும் இல்லாமல் போலிவாழ்க்கை வாழ நினைக்கிறார்கள்.

காந்த சக்தி இருப்பதுபோல, அது என்ன காரணமோ தெரியாது. பொட்டு வைத்து போனாலே சகோதர இனத்தவர்கள், பாம்பைப் பார்த்து பயம் கொள்வது போல ஒதுங்கிக் கொள்ளும் நிலையை அவள் அவதானித்திருக்கின்றாள். யுத்தம் இழப்புகள் என அன்றாடம் வரும் செய்திகளுடன் மேலதிகமாக இதுவும் சேர்ந்து கொழும்பு வாழ்க்கையை அச்சுறுத்தியது.

ஓடும் பஸ்ஸிலே தொங்கிக் கொண்டுபோய், யார் தவறி விழுந்து செத்துப் போனாலும் பரவாயில்லை. கூடிய அளவில் சனத்தை அடைத்துக்கொண்டு பணத்தைப் பெற்றுக்கொள்ளும் ஆசையில்,





"அத்துலட்ட யண்ட. அக்கே! அத்துலட்ட யண்ட. யண்ட." ("உள்ளே போங்க, அக்கா! உள்ளே போங்கள் போங்கள்.")

நடத்துனரின் கட்டளை காதில் விழுந்தபோது, நாக்கை பிடுங்குவது போல நாலு கேள்வி கேட்டு விட்டு இறங்கி விடலாமா? எனத் துருதுருத்த வாயை அடக்கிக்கொண்டு நகர்ந்து செல்ல இடம் இருக்கிறதா என அங்கும் இங்கும் பார்வையைச் செலுத்திய போது, முன்னால் நின்ற பெண் தனது பின்பக்கத்தினால் பலம் கொண்ட மட்டும் இடித்துத் தள்ளியதினால் நிலைகுலைந்த சுவேதாவைப் பார்த்த நடத்துனருக்குப் பரிதாபம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

"ஒக்கம யண்டனே ஓன. செனக வடிவுணொத் அங்கே வதினவானே. ஏக்கட அயி தள்ளுக்கறன்னே?" ("எல்லோரும் தான் போக வேண்டும். நெரிசல் அதிகம் என்றால் மேலில் முட்டுப்படும். அதற்கேன் இடித்துத் தள்ளுகிறீர்கள்?")

அவன் அந்தப் பெண்ணுக்குத்தான் சிங்களத்தில் சொல்லுகிறான் என்பதைச் சுவேதா புரிந்து கொண்டாள்.

"மல்லி மெயாகே பாக் அத்துலே மொணவதோ தியனவா. அங்கட்ட வதினவா". ("தம்பி இவவுடைய பாக்குக்குள் என்னவோ இருக்கிறது. எனக்கு இடிக்கிறது".)

இப்படி ஒரு பழியை துணிந்து போட்டுவிட்டாளே. இதற்குப் பிறகு எதைச் சொன்னாலும் எமது பக்கம் உயர முடியுமா? இப்படிப் பழிச் சொற்களால் பறிமுதலாகிப் போனவற்றை அளவிட்டுப் பார்த்தால் அழுகை தான் வரும். வீராவேசம் வந்தவளாய்,

"நாங்கள் சாகவா போகிறம். வாழத்தானே போகிறம். 'பாக்'கில தண்ணிப் போத்தல், சாப்பாடு, 'மொபைல் போன்' தான் இருக்குது. வேணுமென்டால் பாருங்கோ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நெரிசலுக்குள்ளும் அதைத் திறந்து காட்டிவிட வேண்டுமென்று அவள் எத்தனிப்பதைக் கண்ட நடத்துனர் 'வேண்டாம்' என்பது போல் கையை அசைத்து சைகை செய்தான்.

இறங்கிப்போகும் போது கூட தம்மவருக்கே இருப்பிடத்தினைக் கொடுத்து விட்டுப் போக வேண்டும் என்ற முற்போக்கான சிந்தனையுடன் தூர நிற்பவர்களை தட்டி வரும்படி அழைத்து இருக்க வைத்துத் தாம் எழும்பிப்போகும் சகோதர இனத்தவரின் செயல்கள் அன்றாடம் மனதில் துயரத்தை மூட்டும் வடுக்களாய் பதிந்து போயின.

இப்படியான சந்தர்ப்பங்களில்தான் மனம் புண்பட்டு வெதும்பும்.

'எமக்கென்று பதியப்படுத்திய இருப்புக்கள் எதுவுமற்ற சூனிய வாழ்க்கையில் புதைந்து விட்டோமே! இதற்கு முடிவில்லையா?'

கேள்விக்குறி பெரிதாக, மிகப் பெரிதாக விரிந்து கழுத்தில் போட்ட சுருக்காக வலியைக் கொடுக்கும்.

எத்தனை பிரச்சனைகளை தலைக்குள் போட்டு ஓடும் 'பஸ்'ஸிலும் ஒரு கணத்தையேனும் வீணாக்காமல் அவற்றை நிரற்படுத்தித் தீர்வுகாணத் தவிக்கும் அவசரமான ஒவ்வொரு நாளின் முகிழ்ப்பிலும் அருவருப்பானதும் அசிங்கத் தனமானதுமான உரசல்கள், அதற்காகவே 'பஸ்' பயணத்தை வைத்துக் கொள்வது போன்ற சில ஆண்களின் கேவலமான ஆசைகளை மனதிற்குள் கடிந்து கொள்ளும் போது சுவேதாவுக்குத் தன்னைத் தானே வெறுப்புக் கொள்ளும்படியான தாழ்வுச்சிக்கல்கள் ஏற்படும்.

சற்று நேரத்துக்கு முன்பு இடித்து தள்ளிய பெண் இறங்கி விட்டதால் அந்த இடத்தில் நின்றால் வசதியாயிருக்கும் என எண்ணியபடி சற்று நகர்ந்து ஒதுங்கி நின்று கொண்டாள். நிறைமாத கர்ப்பிணிப் பெண்ணொருத்தியுடன் சேர்ந்து அதிகமாகப் பெண்களே நின்று கொண்டிருந்தார்கள். தாய்மை என்பது புனிதமானது. இதற்கு இனம் மதம் என்ற பேதமில்லை. மனதில் தானாக ஏற்படும் ஒரு





மரியாதை காரணமாக பெண்களைவிட ஆண்கள்தான் கருணையோடு நடந்து கொள்வார்கள்.

இப்பொழுது காலம் மாறிவிட்டது. 'நீ எங்கேயாவது, எப்படியாவது நில். பக்கத்தில் நின்றாலும், நான் உன்னைக் காணவில்லை' என்பது போன்ற பாவனையில் யன்னலூடாகத் தொலை தூரத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டு மௌனமாக இருந்து விடுகிறார்கள். வர வர மனிதாபிமானம் செத்துக்கொண்டு போகிறதே. இவற்றை சொல்லிக் கொடுத்து செய்விக்க முடியுமா?

சுவேதா சமுதாயத்தின் மீது வெறுப்புணர்வு கொண்டாள்.

சற்று தூரத்தில் நின்ற அந்தப் பெண்ணைப் பார்த்தாள். பஸ்ஸின் குலுக்கலிலும், சடுதியான நிறுத்தலிலும், சமநிலை இழந்து தடுமாறிய அக் கர்ப்பிணிப்பெண், பஸ் கட்டணத்தை 'ஹன்ட் பாக்'கில் இருந்து எடுத்துக்கொடுக்க முடியாமல் தள்ளாடியபடி யாரோ ஒருவர் இறங்கு வதற்கு எழுந்தபோது அந்த இடத்தில் அமர்ந்துகொள்ளச் சென்றாள்.

வேலைத் தலங்களுக்குப் போவதற்காக இடையிடையே பயணிகள் இறங்கிக்கொண்டதால் சன நெரிசல் குறைந்திருந்தது. மழை ஓய்ந்துவிட்டது. சேலையும் சற்று உலர்ந்து போயிருந்தது. இறங்க வேண்டிய இடம் அண்மித்தமையினால் சுவேதா இறங்குவதற்கு தயாரானாள். திடீரென 'பஸ்' தரிப்பிடம் இல்லாத இடத்தில் நின்றுவிட்டது. உள்ளே பெரும் பரபரப்பு ஆரவாரம். எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"காகேத கியலா தன்னே நா. அத்துலே பலண்ட." (யாருடையது எவருடையது என்று தெரியவில்லை! உள்ளே பாருங்கள்.)

பதட்டமடைந்த குரல்கள் பலவாறு ஒலித்தன. ஒவ்வொருவர் முகத்திலும் பயப்பீதி காணப்பட்டது. அவர்களின் அந்த நிலைக்குக் காரணம் பஸ் சாரதியின் இருக்கையின் பின்னால் இருந்த 'கைப்பை' ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதெல்லாம் போக்குவரத்துகளில் 'பார்சல்'கள், பயணப் பைகள் என்பன மரண பீதியினை ஏற்படுத்தும் விவகாரங்களாக மாறிவிட்டன. அதற்குள் என்ன இருக்கிறதென்று சல்லடை போட்டு தேடினார்கள். தண்ணீப் போத்தல், குடை, மருந்து எடுத்த துண்டுகள், சாப்பாட்டுப் பெட்டி இவை தான் கிடந்தன. துருவித் துருவித் தேடியும் வேறு எதுவித துப்பும் கிடைக்கவில்லை.

"மே பாக்கெக்க காகேத?" (இந்த பாக் யாருடையது?)

அனல் பறக்கும் பார்வையுடன் ஆவேசமாக சத்தமிட்டுக் கத்தினான் சாரதி. அந்தக் கர்ப்பிணிப் பெண் எழுந்து வந்து,

"இது என்ர 'பாக்'. களைப்பாய் இருந்தபடியால் கீழே விழுந்ததை கவனிக்காமல் மறந்து இங்கு வந்து இருந்து விட்டேன்."

தமிழில் சொன்னது, அவர்களுக்கு புரிந்தும் புரியாமலும் சிறிதாவது விளங்கியிருக்க வேண்டும்.

"அயி மெச்சர வெலா நிக்கங் ஹிற்றியே? கோ அய்டின்றியெக்க பென்னண்ட". ("ஏன் இவ்வளவு நேரமும் பேசாமலிருந்தாய்? எங்கே அடையாள அட்டையைக் காட்டு")

சாரதி, நடத்துனர், பயணிகள், வழிப்போக்கர்கள் எல்லோரும் அவளைச் சுற்றி வளைத்து மிரட்டினர். அவளோ தனக்குத் தெரிந்த சிங்களத்தில் ஓரிரு வார்த்தைகள் சொல்லி விளக்க முனைந்தும் முடியவில்லை. ஏதோ ஒரு குற்றவாளியைக் கையும் களவுமாக பிடித்துவிட்டது போன்ற பெருமிதம் அவர்களுக்கு.

சுவேதா அவளுக்காகப் பரிந்து பேச நினைத்தாலும் கால நேரம் பிழையாக இருக்கும்போது 'இருவரும்தான் சேர்ந்து ஏதோ செய்ய நினைத்திருக்கிறார்கள்' என முடிச்சுப் போட்டுவிட்டால் அவள் பாடும் அதோகதிதான் ஆகும். அதனால் துடிக்கும் உணர்வுகளை அடக்கிக்கொண்டு அங்கு நடப்பதை அவதானித்தாள்.





பயணிகள் எல்லோரும் அவளை அந்த இடத்தில் இறக்கி விடுவதாக முடிவெடுத்தார்கள். அவள் இறங்க வேண்டிய இடம் இன்னமும் வரவில்லை என்பதைச் சொன்னபோதும், அவர்கள் வற்புறுத்தி அவளை இறக்கிவிட்ட பின்பே 'பஸ்' நகரத் தொடங்கியது.

என்னால் செய்ய முடிந்த உதவி இதுதான் என்பது போல சுவேதாவும் அவளுடன் இறங்கிக் கொண்டாள். அந்த 'பஸ்'ஸில் இருந்த பயணிகளுள் யாரோ ஒருவன் சொன்ன வார்த்தை அவளின் இதயத்தில் வேலாய்ப் பாய்ந்து வலிக்கத் தொடங்கியது.

"இப்படியான நேரங்களில் ஏன் தனியாக போகிறீங்க?. உங்களுக்கு சிங்களமும் தெரியாது. இனிமேல் நாங்களும் கொஞ்சம் கவனமாகத் தான் இருக்க வேணும்."

"அவர் வேலைக்குப் போய்விட்டார். 'டொக்ட'ரைப் பார்ப்பதற்குத் தான் வந்தேன்."

அந்த பெண் பரிதாபமாக பதில் சொன்னாள். அவள் முகமெல்லாம் வியர்த்து நீர் முத்துக்களாய் அரும்பிக் கிடந்தது. அவளோடு உரையாடியதில், அப்பெண் சுவேதாவின் பக்கத்து ஊர் விசுவநாத பிள்ளையின் பேத்தி என்பதை அறிந்து கொண்டாள்.

விசுவநாதபிள்ளை 'சாதித்திமிர்' படைத்த பணக்காரன். அவள் சின்னப்பிள்ளையாக இருந்த காலத்தில் அவர்களின் வீட்டிற்கு அம்மாவோடு போயிருக்கின்றாள். அந்த மனுசனின் செல்வாக்கிற்கு பலர் எடுபிடிகளாக இருந்து வேலை செய்தார்கள். தோட்டம் பார்க்க, கிணறு இறைக்க, ஓலை வெட்ட பலர் வேலைக்கென்று வருவார்கள்.

அப்படி அவர்களிடம் வேலைக்குப் போகிறவர்களை எல்லாம் 'கந்தா வாடா!', 'சரவணா ஏனடா நேற்று வரேல்லை?' என அதட்டும் போது ஐம்புலன்களையும் அடக்கித் தோளில் உள்ள சால்வைத் துண்டை கையில் எடுத்து வைத்துக் கொண்டு 'சண்டிக்கட்டை' அவிழ்த்துச் 'சார'த்தைப் பதித்து உடுத்தியபடி அடிமைகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல வளைந்து நெளிந்து 'ஓம் நயினார்', 'செய்யிறன் நயினார்' எனப் பயபக்தியோடு சொல்லும் மனிதர்களைப் பார்த்துச் சுவேதாவும் மிரண்டு போனதுண்டு. விசுவநாதன் இருக்கும் பக்கத்திற்குப் போகப் பயந்து நடுங்கி ஒதுங்கியதையும் அதற்காகவோ என்னவோ அவர் அவளது தூரத்து உறவினராக இருந்தும் கூட உறவுகொண்டாட விரும்பாததையும் எண்ணிப் பார்த்தாள்.

எடுப்பான தோற்றமும், மிடுக்கான நடையும், மீசை முறுக்குமாக ஒரு காலத்தில் அந்தக் கிராமத்தை ஆட்டிப் படைத்த விசுவநாதனின் பேத்தி, இன்று மொழி தெரியாமல் மற்றவர்களால் கேலிப்பொருளாக அவமதிக்கப்பட்டு, 'பஸ்'ஸால் இறக்கி விடப்பட்டதை அந்த மனுசன் இருந்து பார்த்திருந்தால் எப்படியிருக்கும், என்று சிந்தித்த சுவேதாவிற்கு ஏதோ ஒரு உண்மை மின்னல் கீற்றாகத் தோன்றி மறைந்தது.

'எங்கட ஆக்கள் தமக்குள் தாமே பிரிவினைகளை வளர்த்து, வேலிச் சண்டை, கோயில் சண்டை, வெட்டுக்குத்து, இரத்தம், கோடு, வழக்கு என்றெல்லாம் எவ்வளவைச் செய்தார்கள்? இப்ப உயர்வு தாழ்வு என்ற பேதமின்றி எல்லோருமே கொடுமைகளை அனுபவிக்கின்றோம். வெறித்தனமான போக்குகளால் எம் ஒற்றுமை குலைந்து நாம் சிதறிச் சின்னாபின்னமாய் அலையும் நிலை ஏன் வர வேண்டும்? சொந்த நாட்டிலேயே சுதந்திரம் இல்லாமல் பண்பாடுகளையும் கலாச்சாரங்களையும் மூடி மறைத்து வாழும் நிலை எதற்காக வந்தது? சமத்துவம் சகோதரத்துவம் மறந்து, அதிகாரமும் ஆதிக்க வெறியும் கொண்டு அலைந்த எமது முன்னோர் செய்த பழிபாவங்கள் தான் இப்படிச் சூழ்ந்து வந்து வருத்துகின்றன.'

புத்தர் போதி மரத்தின் கீழ் பெற்ற ஞானத்தைப்போன்ற ஒன்றினை 'பஸ்' பயணம் அவளுக்கு ஏற்படுத்தியது.

"எனக்கு வேலைக்குப் போக நேரம் போய்விட்டது. உங்களால் தனியப் போக ஏலுமா? இல்லாட்டி நானும் துணைக்கு வரவேணுமா?"





அந்தப் பெண்ணிடம் கேட்டாள்.

"இல்லை நான் தனியப் போவன். நீங்கள் போங்கோ."

விடை பெற்றுக்கொண்ட அந்தப் பெண்மீது அவளுக்கு அனுதாபம் ஏற்பட்டது. எவ்வளவு செல்வச் செழிப்பாக வாழ்ந்த குடும்பம். இன்று சீருமில்லை சிறப்புமில்லை. அதுவும் அவளைப் பார்த்து அந்த 'பஸ்'ஸில் இருந்த பயணிகளுள் யாரோ ஒருவன் சொன்ன வார்த்தைகள் காதுக்குள் இரும்பைக் காய்ச்சி ஊற்றியதைப் போன்று வருத்தியது. அது அவளுக்குச் சொன்ன வார்த்தை அல்ல தாய்மை நிலை அடைந்த ஒவ்வொரு தமிழிச்சிக்கும் சொன்ன சொல்லாக நினைத்தாள்.

"லமயாத போம்பத கவ்த தன்னே. இக்மன்ட பஸ்செக்கென் பகின்ட கியன்ட. நத்தம் பஸ்செக்க யண்ட தென்னே நா." (குண்டா குழந்தையா யாருக்குத் தெரியும். விரைவாக பஸ்ஸை விட்டு இறங்கச் சொல்லுங்கள். இல்லாவிட்டால் பஸ்ஸை எடுக்க விட மாட்டோம்.)

கூக்குரலிட்டுச் சொன்னது மட்டுமல்லாமல், சொன்னதன்படியே செய்து முடித்த அவர்கள் சாதனை வீரர்கள்தான். அந்தப் பெண்ணுக்கு இந்த வார்த்தைகள் புரிந்திருந்தால் நிச்சயம் வருந்தியிருப்பாள்.

'சில சந்தர்ப்பங்களில் புரிதல்களில்லாத மௌனம் கூட உணர்சிகளை அடக்கிக்கொள்ளச் சிறந்த மருந்தாகி விடுகின்றது.'

உலகிலே தாய்மைக்கு நிகராக எதனையுமே சொல்ல முடியாத புனிதமான அந்த பந்தம் கூடக் கேலிக்குரியதாக மாறிவிட்டதற்காக வருந்திய சுவேதா, மனதைத் தேற்றிக்கொண்டு அந்தப் பெண்ணைப் பார்த்தாள். 'தொல்லை வேண்டாம் நடையிலே போய்விடுவதே நல்லது' என அவள் தொலைதுாரத்தில் நடந்து மறைந்து கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொட்டு

ஓடுகின்ற பஸ்ஸின் வேகத்தை விட ஆர்த்தியின் மன வேகம் அதிகம் என்று சொல்ல வேண்டும். எந்த நாளும் ஓரே 'கதி'யைத் தனக்கென வகுத்துக்கெண்ட 155 ஆம் இலக்க 'பஸ்' மீது ஆத்திரம் என்றால் அவளுக்கு அளவிட முடியாதது. ஆனாலும் அதை விட்டாலும் அதோகதி தான்.

அதிகாலையில் நித்திரைச் சுகத்தில் திளைக்கத் தவிக்கும் உடலை உசுப்பி நிஜ உலகில் பிரவேசிக்க வைத்து இயந்திரமான இயக்கங்களினால் வயிற்றுப்பசிக்கு வழிசெய்து கணவன் பிள்ளைகள் எனத் தனித்தனியாக ஒவ்வொருவரையும் கவனித்து முடிக்கும்போது, தன்னைப் பற்றிய தேடலையே மறந்தவளாய் வீட்டைவிட்டுப் புறப்படும் ஆர்த்திக்கு பஸ் பயணம் கையையும் காலையும் கட்டிப்போட்டு விட்டதைப் போன்ற சோர்வை ஏற்படுத்தும்.

எவ்வளவுதான் முயன்று நேரத்தோடு வீட்டிலிருந்து தரிப்பிடத் திற்கு வந்தாலும், 'பஸ்' சிலவேளைகளில் சந்தர்ப்பம் பார்த்துச் சதி செய்வதைப்போல த்னது இயல்பான வேகத்திலிருந்தும் விலகித் தாமதமாக வந்து அவளைச் சிவப்புக் கோட்டுக்கு கீழே வரவுவைக்கச் செய்துவிடும் சாமர்த்தியமும் அதற்கு உண்டு.

சிலவேளைகளில் தானே சாரதியின் இருக்கையில் போய் இருந்து அதனை விரைவாகச் செலுத்துவோமா? என்றுகூட அவளுக்கு தோன்றுவதுண்டு.





இன்று வழமைக்கு மாறாக மனம் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. நேரமுள் 7.20 ஐக் காட்டியது. இன்னும் பத்து நிமிடங்கள் இருக்கின்றன. பாடசாலைக்குச் சென்றுவிடலாம் என திருப்திப்பட்டுக் கொண்டாள்.

வழமையாகப் பயணத்தின்போது மனம் சிந்தனைகளில் மூழ்கும். இன்றோ பெரிய குற்றத்தினைச் செய்துவிட்டுத் தண்டனைக்காக வருந்தும் குற்றவாளியைப் போன்று மனம் விசாரணையில் ஈடுபட்டது.

'நானும் சூழ்நிலைக் கைதியாகிப் போனேனா? இப்படிச் செய்தது சரியா? இன்று வெள்ளிக்கிழமை அதுவுமாய்....? காலநேரம் பார்த்து நடக்கப் பழக வேணும் என்று அவரும் சொன்னவர் தானே. அப்படியென்றால் நான்செய்தது சரிதான்.'

அவள் தன்னைத் தானே சமாதானப்படுத்த முயன்று தோற்றுப் போனவளாய் முன் இருக்கையில் தாயின் தோளில் இருந்து கொண்டு அவளைப் பார்த்துக் கையைத் தட்டிச் சிரிக்கும் குழந்தை மீது கவனத்தை செலுத்தினாள்.

குழந்தையின் சிரிப்புக் காலையில் பூத்த அழகான பூப்போல மனதை வருடியது. துருதுருத்த கண்கள். இரண்டு பக்கமும் இரண்டு றோஜாப் பூக்களாய், உப்பிக்கிடந்த கன்னங்களுடன் பொக்கை வாயைத் திறந்து கள்ளமற்றுச் சிரித்த குழந்தையிடம் தாய்மை உணர்வு பொங்கக் கையை நீட்டினாள்.

பிஞ்சுக் கைகளை நீட்டி அவளின் கையைப்பிடித்துக் கொள்ள எடுத்த முயற்சி தோற்றுப்போனதால் குழந்தையின் சிரிப்பு மறைந்து ஏமாற்றமும் அழுகைக்கான ஆயத்தமும் தென்பட ஆர்த்தி குழந்தையின் கைக்குள் தன் விரல்களைக் கொடுத்துப் பற்றிக் கொள்ளச் செய்தாள். குழந்தை மீண்டும் மகிழ்ச்சியில் திணறி உடலை அசைத்து முன்னே அவளை நோக்கித் துள்ளிப்பாய எத்தனித்து ஆரவாரிக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அய் புத்தே? அனே நிக்கங் இன்டகோ" (ஏன் மகனே? சும்மா இருங்கோவேன்.)

தாய் அன்பு பொங்கக் குழந்தையை அணைத்து தன் கன்னத்தோடு சேர்த்து முத்தம் கொடுத்தாள். அந்தக் குழந்தையின் நெற்றியில் சின்னதாக இருந்த கறுப்புப் பொட்டு ஆர்த்தியின் கண்களில் பட்டதும் பொறிதட்டியது போல மீண்டும் மனக்குரங்கு எங்கோ தாவத்தொடங்கியது.

ஆர்த்திக்குப் பத்து வயது பிந்திப் பிறந்தவள் தங்கை மது. அவளின் நெற்றியில் சின்னப் பருவத்தில் பெரிய அளவில் வட்டவடிவாக கரிப்பொட்டு இருக்கும். கன்னத்திலும் சிறிய வடிவில் வைத்துவிட்டது போல ஒரு சின்னப் பொட்டு காணப்பட அதற்கான விளக்கத்தை அம்மம்மாவிடம் தான் கேட்டு அறிந்திருந்தாள் ஆர்த்தி.

அம்மம்மா அளவான சிரட்டைகள் நான்கை அழகாகச் சீவிச் செப்பனிட்டு வைத்திருந்ததைக் கண்ட ஆர்த்தி ஆசையாக எடுத்து வைத்து விளையாடியபோது, அம்மம்மா அவளை ஓட ஓட விரட்டிப் பறித்து அவை வெடித்து விட்டதா எனத் திருப்பித் திருப்பிப் பார்த்தாள்.

"ஏன் பிள்ளை எடுத்தாய்? தேவைக்குத் தானே செய்திருக்கிறேன்."

"என்ன தேவை?"

"இனிக் குறுக்கு விசாரணை தொடங்கிவிட்டாய் ........"

அவளின் வினாக்களுக்கு விடை சொல்வதில் அம்மம்மாவுக்கு நிகராக அம்மாவைக் கூட சொல்ல முடியாது என்பது ஆர்த்திக்குத் தெரியும்.

"அம்மா உனக்கு ஒரு சின்னப் பாப்பா விளையாட கொண்டு வருவா. அது சட்டை போட்டு பொட்டு வைச்சு அழகாய் இருக்க வேணும் தானே. அதுதான் அம்மம்மா பொட்டுக் காய்ச்சி வைக்கப் போறன்."





"ஏன் காய்ச்ச வேணும்? கடையில பொட்டு வாங்கலாம் தானே?"

"வாங்கலாம்தான் ஆனால் அதை சின்னப் பிள்ளைக்கு வைச்சால் ஒத்துவராது. புண் வந்திடும்."

அம்மம்மா ஒரு தவமாய் நினைத்துப் பொட்டுக் காய்ச்சும் வேலையைச் செய்து முடிக்கும் வரையும் அவளது பக்கத்திலே இருந்து ஆர்த்தி கவனமாக அவதானித்தாள்.

சவ்வரிசி கறுப்பாகும் வரை வறுத்து, தண்ணீர் விட்டுக் காய்ச்சி, துணியில் வடித்து, சிரட்டைகளில் ஊற்றி, வெய்யிலில் காயவைத்துப் பக்குவப்படுத்துவது வரை அதைக் கண்ணும் கருத்துமாய் செய்து முடித்தாள்.

"ஆர்த்தி இங்க பார். அம்மம்மா செய்த பொட்டு. இதை எடுத்து விளையாடிவிடாதே."

பொட்டுச் சிரட்டைகள் கருமைக்கு மினுக்கம் கொடுத்தது போல பள பளப்பாக இருந்தன.

மது பிறந்த பின்பு அம்மம்மா தான் குளிக்க வார்ப்பார். ஆர்த்தி அருகில் இருந்து வேடிக்கை பார்ப்பாள். ஈரம் துவட்ட துவாய் கொடுப்பது, சாம்பிராணிபோட நெருப்பு எடுத்துக்கொடுப்பது போன்ற சின்னச் சின்ன உதவிகளை மன விருப்பத்தோடு செய்வாள்.

குறிப்பிட்ட காலத்திற்குப் பின்புதான் அம்மம்மா கரிப்பொட்டுச் சிரட்டையில் தண்ணீர் விட்டு பொட்டை உரைத்து மதுவிற்கு வைத்தாள். அதற்கு முன்பு பாக்குவெட்டியின் கைப்பிடியில் எண்ணெய் பூசி விளக்குச் சுடரில் பிடித்து, அந்த மையை விரலால் எடுத்து, குழந்தையின் இமைகளில் கீறிவிட்டு, பின் பொட்டாகவும் வைத்தது ஆர்த்திக்குப் பிடிக்கவில்லை.

ஒருநாள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்தாங்கோ அம்மம்மா நீங்கள் காய்ச்சின பொட்டு. இதை வையுங்கோ."

பொட்டுச் சிரட்டையை எடுத்துக்கொடுத்துவிட்டு அந்த மையைக் கையினால் அழித்தபோது, அது பிள்ளையின் முகமெல்லாம் அப்பி விட, கோபத்தில் அம்மம்மா அவளின் முதுகில் அடித்த அடி, இப்போதும் வலிப்பது போல் ஆர்த்திக்கு நினைவில் இருக்கிறது.

"ஏன் கறுப்புப் பொட்டு வைக்கிறது? கன்னத்தில் மிச்சப் பொட்டையா வைக்கிறியள்? ஏன் வேற நிறத்தில் பொட்டு வைக்கக் கூடாதே?"

பொட்டு பற்றி கேள்வி மேல் கேள்வி கேட்டாள் ஆர்த்தி.

"சத்தம் போடாமல் இரு பாப்பம்."

தாய் அவளை அதட்டினாள்.

"ஏன் பிள்ளையை வெருட்டுகிறாய்? அறிவுள்ள கேள்விகளைத் தானே கேட்கிறாள். பதில் சொன்னால் குறைந்து விடுமா? நீ கேள் பிள்ள."

அம்மம்மா அவளுக்காக பரிந்துரைத்தாள்.

"ஆர்த்தி சின்னப் பிள்ளைகள் கறுப்புப் பொட்டு வைப்பினம். வளர்ந்தவர்கள் சிவப்பு நிற சாந்துப்பொட்டும் வைக்கிறார்கள். கலியாணம் செய்தவர்கள் தான் குங்குமப்பொட்டு வைக்க முடியும். கன்னத்தில் பொட்டு வைக்கிறது நாவூறு, கண்ணூறு படாமல் இருக்க."

"நாவூறு ..... கண்ணூறு ..... அது என்ன?"

"ஆராவது சின்னப் பிள்ளையளைப் பாத்து இது நல்ல வடிவான பிள்ளை, குண்டுப்பிள்ளை என்று சொன்னால் கண்திருஷ்டி





பட்டுவிடும். அதால வருத்தம் வரும். கறுப்புப் பொட்டு இருந்தால் அந்தத் திருஷ்டி பொட்டிலே பட்டு இல்லாமல் போய்விடும்."

அம்மம்மா சொன்ன காரணம் அவளுக்கு அப்போது சரியாக இருந்தது. அறிவு வந்தபோது அது அர்த்தமற்றது போல் தோன்றியது.

சிலவற்றை அர்த்தமற்றுச் செய்தாலும், ஆழமான நம்பிக்கைகள் மூலம் அவை அர்த்தப்படுத்தப்படுவதனால் தான் அவள் இன்றும் குழம்ப வேண்டிய நிலை ஏற்பட்டதை உணர்ந்தாள்.

ஆர்த்தி ஆத்மீக ஈடுபாடு கொண்டவள். வீட்டுக்கு அருகில் இருக்கும் முருகன் கோயிலின் மூலம் அது முளைவிட்டு வளர்ந்தது. கோயிலில் நடைபெற்ற "மங்கல வாழ்வு" பற்றிய கதாப்பிரசங்கம் தான் பொட்டு வைப்பதன் தாற்பரியத்தை அவளுக்குப் புரிய வைத்தது.

'திலகம்' என்றால் பொட்டு. அச்சொல் 'சிறந்தது' என்ற பொருளையும் தருகிறது. இரண்டு புருவங்களுக்கும் இடைப்பட்ட பகுதி இருக்கிறதே அது ஒரு மர்மஸ்தானம். நினைவு, அறிவு, சக்தி என்பவற்றுக்கு உறைவிடமாக இருக்கும் இந்தப் பகுதியான நெற்றிப்பொட்டு மனிதர்களது ஆறாவது புலனாகக் கருதப்படுகிறது. அந்த இடத்தைப் பொட்டுவைத்துப் பாதுகாக்க வேண்டும் என்பதை உணர்ந்தவர்கள் தமிழர்.

அதனால் தான் குளிர்மை தரும் சந்தனத்தையும், ஆரோக்கியம் தரும் மஞ்சளால் செய்த குங்குமத்தையும் நெற்றிப் பொட்டில் பொட்டாக வைக்கப் பயன்படுத்துகிறோம். இந்த இடம் குளிர்மைப் படுத்தப்பட வேண்டும் என்பது மருத்துவ முறையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும்.

பிரசங்கியாரின் கருத்து அவளின் அம்மம்மா சவ்வரிசியில் பொட்டுக் காய்ச்சியதற்கான காரணத்தை நியாயப்படுத்தியது. நெற்றிப் பொட்டில் தான் ஒருவரை வசியப்படுத்தக்கூடிய சக்தி இருக்கிறது. அதனால்தான் பெண்கள் அந்த இடத்தைப் பொட்டிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கிறார்கள் என ஏதோ ஒரு புத்தகத்தில் வாசித்த ஞாபகம் அவளுக்கிருந்தது.

பொட்டு பற்றிய விளக்கங்களை பெறுவதற்கு முன்பே ஆர்த்திக்கு பொட்டுவைப்பதில் அலாதிப்பிரியம் இருந்தது. ஐயரிடம் சந்தனம் குங்குமம் வாங்கி சந்தனத்தின் நடுவே சிறிதாகக் குங்குமம் வைத்துக்கொள்ளும்போது தனது முகம் தனித்துவமான பிரகாசத்தோடு விளங்குவதாக நினைத்துப் பூரிப்படைவாள்.

ஒருமுறை அம்மம்மா கோயில் சந்தனத்தை கொடுத்தபோது கண்ணாடி முன்னால் நின்று அதை வைத்துவிட்டு, நடுவில் குங்குமம் வைப்பதற்கு அம்மாவின் புதுக்குங்குமப்பெட்டியை திறந்து கொஞ்சம் எடுத்த பின்பு சரியாக மூடியை மூடாமல் வைத்துவிட்டாள்.

நீண்ட நாட்களின் பின் அதை அம்மா எடுத்து வந்து நிறம் மாறிக் கறுப்பாகி சக்குப்பிடித்துப் போனதற்கான காரணம் ஏதோ கெட்ட சகுனம் என்று அதனைப் பார்த்துக் கவலைப்பட்டபோது அவளுக்குச் சிரிப்புதான் வந்தது.

இன்னுமொருநாள், வெள்ளிக்கிழமை அம்மா கோயிலுக்கு வெளிக்கிட்டபோது குங்குமப் பெட்டி கைதவறிக் கீழே விழுந்து கொட்டுப்பட, அம்மா அழுதழுது அதை அள்ளி எடுத்தது கண்ணில் ஒற்றி தாலியிலும் நெற்றியிலும் வைத்துக் கொண்டபோது அவளைப் பார்க்க பாவம் போல இருந்தது.

அன்று இரவு அப்பா தலைவலி என்று படுத்திருக்க காலில் சில்லுப் பூட்டியவள் போல அப்பாவின் அறையும் குசினியுமாக மாறி மாறிப் போவதும் வருவதுமாய் அம்மா பட்ட வேதனையும் அவதியும் அவளுக்குள்ளும் சில நம்பிக்கைகளை தூவிவிட்டதைக் காலப் போக்கில் அவள் உணர்ந்துகொண்டாள்.

திருமணத்தின்போது அவளின் கணவன் அவளது நெற்றியிலும் தாலியிலும் வைத்த குங்குமம் இன்று வரை தினமும் வைக்கப்பட்டு





அத்தாலிக்கும் அவனுக்குக் கொடுக்கும் மரியாதைக்கு சமமான பக்தியை அவளிடம் ஏற்படுத்தியிருந்தது.

"ஆர்த்தி! ஏன்டி உனக்கு மட்டும் மூன்று பொட்டு போட விருப்பமில்லையே?"

அவளின் கணவன் கேலியாக கேட்டான்.

"மூன்று பொட்டா?"

"ஓம் பொம்பிளயளப் பார். நெத்தியிலும், உச்சியிலும், கழுத்துக் குழியிலும் மூன்று இடத்தில் பொட்டு. அது மூன்று பொட்டு தானே."

"அதேன் நீங்க மற்றப் பொம்பிளையளைப் பாக்கப் போனீங்க? உங்களுக்கு அது பிடிக்குமா?"

அவள் ஆச்சரியமாய்க் கேட்டாள்.

"சீச்சி. கண்ணில பட்டுது. அதுதான் கேட்டன். குங்குமம் ஒரு குறியீடு. திருமணமானவள் என்பதை காட்ட அதை மூன்று இடத்தில வைச்சு பறைசாற்ற வேணுமா?"

அவனது கருத்தில் அவளுக்கும் ஈடுபாடு இருந்தது. கொழும்புக்கு வந்த பெண்களில் பலர் பொட்டு வைத்து தங்களைத் தமிழர் என இனங்காட்டிக் கொள்வதை விரும்பாத நிலை உருவாகிக் கொண்டு வருவதனால் ஆர்த்தியோடு படிப்பிக்கும் ஆசிரியைகளில் சிலர் பாடசாலைக்கு வந்த பின்பே ஒட்டுப்பொட்டை எடுத்து வைத்துக் கொள்கிறார்கள்.

போக்குவரத்தில் ஏற்படும் அவஸ்தைகளும், விசாரணைகளும், நாட்டுச் சூழ்நிலையும் ஏனோதானோ என நாமும் வாழ்ந்துவிட்டுப் போக வேண்டும் என்பதையே போதிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கங்க வெடிக்குது. வீட்டை விட்டு வெளிக்கிட்டால் வந்து சேரும் வரை நிச்சயமற்றதாகிப்போன வாழ்க்கையில எங்களுக்கு பொட்டும் பிறையும் தேவையே? ஆர்த்தி தூர இடத்தில் இருந்து வாறீர். பொட்டைப் போடாமல் வாரும்."

சுகந்தி ரீச்சர் சொன்ன ஆலோசனை ஆர்த்திக்கு பொருத்தமாகப் படவில்லை.

பஸ்ஸில் ஏறினால் இறங்குவதற்கு வசதியாக ஆர்த்தி சாரதியின் பின்னால் உள்ள இருக்கையில் அல்லது எதிர்ப் பக்கத்தில் உள்ள இருக்கையில் இருப்பது வழக்கம். அன்று அவள் எதிர்ப் பக்கத்தில் இருந்தாள். முதல் நாள் பெண் ஒருவரினால் பஸ்ஸில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் ஏற்பட்ட உயிரிழப்புகளின் காரணமாகவோ என்னவோ சாரதிக்கு பயம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

அவளை ஒரு மாதிரியாக திரும்பித் திரும்பிப் பார்த்தான். 'நான் என்ன வெடிகுண்டா? என்னைப் பார்த்து ஏன் இவன் மிரளுகின்றான்' என நினைத்துக் கொண்டு அவளும் அவனைப் பார்த்தாள்.

பயணிகளிடம் காசு வாங்குவதிலும், எவ்வளவு கூடுதலாகப் பயணிகளை உள்ளெடுக்க முடியுமோ அவ்வளவிற்கு அதிகமானவர் களை ஏற்றிக்கொள்ளும் ஆவலிலும் அங்கும் இங்கும் பார்வையைச் செலுத்தியபடி நின்ற 'கொண்டக்ட'ரிடம் சாரதி காதுக்குள் ஏதோ அவளைப் பற்றித்தான் முணுமுணுத்திருக்கிறான். அவனது பார்வையும் இவளில் பதிந்தது.

விரல்களுக்கிடையில் மடித்து வைத்திருந்த தாள் காசுகளைத் தட்டி எண்ணிக் கொண்டு அவளருகில் வந்து நின்று 'எங்கே?' என்பது போல தலையை அசைத்துக் காசுக்காகக் கையை நீட்டுகிறான்.

"ஆமர் ஸ்றீற்."





சொல்லியபடி உரிய பணத்தை அவனிடம் கொடுக்க வாங்கிக்கொண்டு சென்று, மற்றவர்களிடமும் காசை வாங்கிக் கணக்குப் பார்த்தவன் மீண்டும் அவளருகே வந்து நிற்கிறான். அவள் இறங்க வேண்டிய இடமான சந்தி இன்னும் சற்று தொலைவில் உள்ளது. அவனோ அதற்கு முதலே,

"ஆமர் ஸ்றீற் பயின்ட, பயின்ட" (ஆமர் ஸ்றீற் இறங்கு, இறங்கு)

அவளைப் பார்த்து சற்று அழுத்தமாகச் சொன்னான். 'களவாயப் பயணம் செய்பவனைப் பிடிப்பது போல இவன் ஏன் இப்படி நடந்து கொள்கிறான். உரிய இடம் வந்தால் இறங்குவேன் தானே' என மனம் கறுவிக் கொண்டாலும்,

"ஹந்தியே பயினவா மல்லி" (சந்தியில் இறங்கிறேன் தம்பி)

மரியாதையும் பணிவுமாகச் சொல்லி விட்டு சந்தி வந்ததும் பஸ்ஸிலிருந்து இறங்கினாலும் மனம் அமைதியற்றுத் தவித்தது மட்டுமல்லாமல், அந்த நிகழ்வு பெரும் தாக்கத்தையும் அவளுக்குள் ஏற்படுத்தியிருந்தது.

"எங்கள ஒரு மாதிரிப் பார்க்கிறார்கள் அற்ப பிராணி போல கூனிக்குறுகி வரவேண்டி இருக்கு. வேலைக்குப் போய் வாறத நினைச்சாலே பயமாய் இருக்கப்பா."

அவள் கணவனிடம் சொன்னபோது, அவன் அவள் பக்கமே பிழை இருப்பது போல சுட்டிக்காட்டினான்.

"நீங்களும் அதுதானே! நாட்டுநிலை, காலநேரம் அறிந்தே நடக்கிறியள். பெரிய குங்குமப் பொட்டையும் வைச்சுக்கொண்டு திரியிறியள். சிங்களம் கதைக்கத் தெரியாது. சில பொம்பிளையளைப் பார்த்தால் சிரிப்புத்தான் வரும். சிங்களத்தில் கேள்வி கேட்டால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழில் சத்தமாய்ச் பதில் சொன்னால் அது சிங்களமாய் மாறிவிடும் என்ற நினைப்பு. அவை படும் பாட்டை பாக்க வேண்டுமே.''

வெறுப்பும் கேலியும் கலந்து அவன் தனது கருத்தை வெளிப்படுத்தினான்.

“நீங்கள் என்ன சொல்லுறியள்? நாங்கள் பொட்டுப் போடுவது பிழையோ?”

“அடி விசரி. இன்றைய காலம் போறபோக்கில பிழையும் சரியும் விசாரிக்கிற நேரமே இது. ஏதோ போனமாம் வந்தமாம் என்டு இருக்கிறதை விட்டுப்போட்டு, பொட்டும் பிறையும் தேவையெண்டால் இப்படித்தான் வாங்கிக் கட்டவேணும்.''

கணவன் எதையும் திடீரெனச் சொல்லமாட்டார். அதன் நன்மை தீமைகளை அறிந்தே சொல்லுவார் என்பதால் இனிமேல் பொட்டு வைக்காமல் போவதென முடிவெடுத்தாள் ஆர்த்தி.

அடிக்கடி தொலைக்காட்சியில் ஒலிபரப்பப்படும் வெடிப்புச் சம்பவங்கள் பயணிகளின் மனதில் பயப்பீதியை ஏற்படுத்தியதால் முகங்களில் துன்பரேகைகள் கேள்விக் குறிகளாய் பிரதிபலித்தன. அறிவு தெரிந்த நாள் முதல் ஆர்த்தி நெற்றியில் பொட்டு வைக்காமல் எங்குமே போனதில்லை. இன்று வெள்ளிக்கிழமை முதன்முதலாய் நெற்றியில் பொட்டு வைக்காமல் வெளிக்கிட்டது அவள் மனதைச் சங்கடப்படுத்தி விட்டது.

ஆர்த்தியின் கைவிரல்களைப் பிடித்து சிரித்து மகிழ்ந்த குழந்தை கையை உதறி விளையாட முற்பட்டபோது கை இருக்கையின் மேல் பகுதியிலுள்ள கம்பியில் அடிபட்டிருக்க வேண்டும். வலியினால் குழந்தை அழத் தொடங்கியது.

ஆர்த்தி சிந்தனையிலிருந்து விடுபட்டு நேரத்தைப் பார்த்தாள். மணி 7:30 ஐ தாண்டியிருந்தது. இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதா





என வெளியே பார்த்தபோதுதான் இறங்க வேண்டிய இடத்தில் பஸ் நின்றிருப்பது தெரிந்தது.

அவள் கனவுலகில் இருந்ததும் மீண்டு அவசரமாக இறங்க முற்பட்டபோது, ‘பஸ்’ புறப்பட்டு சற்றுதூரம் முன்னே வந்து விட்டதையும் உணர்ந்தாள்.

இனி பஸ் நிற்காது. அடுத்த தரிப்பிடத்தில் இறங்கி திரும்ப நடந்து வேர்த்து விறுவிறுத்துப் பாடசாலைக்குள் போவதை எண்ணிப் பெருமூச்சு விட்டவாறு இறங்க வேண்டிய இடத்தில் இறங்காது, அதற்கடுத்த இடத்தில் இறங்கியபோது மனம் சோர்ந்து போனது.

‘எந்தச் சந்தர்ப்பத்திலும் எமக்கென்றிருக்கும் கொள்கைகள் நம்பிக்கைகளை இழந்துவிடக்கூடாது. பொட்டை வைக்காமல் விடுவதால் மட்டும் நான் இன்னொரு பிரிவைச் சார்ந்துவிட முடியுமா? சுயங்களை இழப்பதனாலும் நிம்மதி இன்றி தவிக்கும் நிலை ஏற்பட வாய்ப்புகள் உள்ளன என்பதற்கு இன்றைய நிகழ்வு நல்லதொரு பாடம். நான் நானாக இருந்து வாழ்ந்து மடிய வேண்டும்.’

மனம் ஏதோ ஒரு உற்சாகத்தை வரவழைத்துக் கொள்ள “ஹான்ட் பாக்”கில் இருந்த “ஸ்ரிக்கர்” பொட்டில் ஒன்றை எடுத்து கைமதிப்பின்படி நெற்றிப் பொட்டில் வைத்துக் கொண்டாள்.

இன்று என்னதான் அவசரப்பட்டாலும் சிவப்புக் கோட்டுக்குக் கீழேதான் கையெழுத்துப் போட வேண்டும். தன்னைத் தானே தேற்றிக்கொண்டு பாடசாலை நோக்கி அமைதியாக நடந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கேயும் ஒரு பொன்னகரம்

'டாண்...' 'டாண்...' என இடைவேளைக்கான மணி ஒலிக்கத் தொடங்கியது தான் தாமதம் முகத்தில் மலர்ச்சியும் உடம்பில் ஒருவித தென்பும், உற்சாகமும் எங்கிருந்து வந்ததென்று சொல்ல முடியாதபடி மாணவர்கள் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்கினார்கள்.

'எழும்பாதே', 'சத்தம் போடாதே', 'புத்தகத்தை எடு' என்று சதா கட்டளைகளைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களின் பிடியிலிருந்து சற்று நேரம் விடுதலை பெற்ற உணர்வோடு எல்லோரும் வகுப்பறையை விட்டு இடிபட்டுக் கொண்டு ஓடினார்கள்.

சாருமதி மட்டும் அமைதியாக வகுப்பிலே இருந்தாள். அவளுக்கு எழும்பி நடக்கக்கூட உடம்பிலே பலம் இல்லாத மாதிரி சோர்வாக இருந்தது. பசி ஒருபுறம் வயிற்றைக் கிள்ளியது. காலையில் இருந்து வெறும் தண்ணீர் கூடக் குடிக்கவில்லை. பட்டினியால் வயிற்றுக்குள் ஏதோ கடா முடா என முட்டி மோதிக்கொள்ளும் சத்தம் கேட்டது. அடிக்கடி கொட்டாவி வேறு வந்துதொலைத்தது.

தொடர்ந்து நான்கு நாட்களாக சவர்க்காரமே பட்டறியாத அவளின் சீருடை திட்டுத்திட்டாக அழுக்கும், காவியும் படிந்து கிடந்தது. கிழிந்து சுருண்டு போன நிலையில் மூலையில் கிடந்த காலுறையை விரித்து உதறிப் போட்டுக்கொண்டு வந்ததால் அதிலிருந்து வந்த துர்நாற்றம் அவளுக்கே சகிக்க முடியாமல் துன்புறுத்தியது.





"சாருமதி நீ ஏன் வெளியே போகவில்லை? ஒன்றும் சாப்பிடவில்லை, பசி. அப்படித்தானே?"

வசந்தி ரீச்சர் அவளை நன்றாக அவதானித்து வைத்திருந்தமையால் அடிக்கடி விசாரித்துக் கொள்வாள். பக்கத்து வகுப்பறையில் இருந்து சாருமதியின் வகுப்பாசிரியர் கலா சாப்பாட்டுப் பார்சலுடன் வந்தார்.

"வசந்தி, சாப்பிடுவோமா?"

சாப்பிடுவதற்குத் தயாரானவள் சாருமதியின் பக்கம் பார்வையைத் திருப்பி,

"இவள் ஏன் வெளியே போகவில்லை? ஓடு... ஓடு..."

குரலில் கடுமை தொனிக்க விரட்டினார். கலா ரீச்சரின் பார்வையில் அவளைப் பார்த்ததனால் ஏற்பட்ட அருவருப்புத் தெரிந்தது.

"உடுப்பையும் ஆளையும் பார், சுத்தமே இல்லை, பக்கத்தில் வந்தாலே மூக்கைப் பொத்த வேண்டியிருக்கு."

"கலா அவளைப் பேசாதே. பாவம், என்ன செய்வது? அன்றாடங் காய்ச்சியள் மாதிரி வீட்டு நிலை. பசி பட்டினியோடு இதையும் என்ன செய்ய?"

சொல்லிக்கொண்டு பார்சலைப் பிரித்து ஒரு தோசையையும் சம்பலையும் எடுத்து சாருமதியிடம் நீட்டினார்.

"இந்தா, சாப்பிட்டுவிட்டு ஓடிப் போ."

அந்தக் கிராமத்தின் நடுவே மூன்று கட்டிடங்களைக் கொண்டு அமைந்த பாடசாலையில் ஆரம்ப வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை உள்ளது. சுற்றிவர உள்ள வீடுகளில் இருந்து தான் மாணவர்கள் வருவார்கள். கல்வியறிவு படைத்த சமூகம் என்றோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதி படைத்தவர்கள் என்றோ சொல்லமுடியாத சாதாரண கூலித் தொழில் செய்பவர்கள் தான் அங்கு பெரும்பான்மையாக வசித்தார்கள். நகர சபையில் கூலித் தொழில் செய்பவர்களும் அங்கிருந்து தான் செல்வார்கள். வேலை கிடைத்துக் கையில் காசும் இருந்தால் குபேர வாழ்க்கை. இல்லாவிட்டால் தெருப்பிச்சைக்காரனிலும் கேவலமான நிலை.

நாங்கள் தான் தொலைந்து போய்விட்டோம், எதிர்காலச் சந்ததிகளான பிள்ளைகளையாவது நல்லமாதிரி உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் ஒரு துளியளவு கூட வளர்ந்தவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

நான்கு சுவருக்குள் நடக்கும் சகல விடயங்களும் குழந்தைகள் தொடக்கம் பெரியவர் வரைக்கும் அத்துப்படி. வகுப்பில் சண்டை வந்தால் ஒவ்வொருவரும் தகப்பனை விட தாயைத்தான் இழுப்பார்கள். இரவு அப்பா ஒன்று பகல் அப்பா ஒன்றாகக் கலாசாரச் சீரழிவுகள் தாராளமாக நடக்கும். அடி பிடி என்று வந்தால் செந்தமிழ் பேசுவது போல தூசண வார்த்தைகள் சரளமாக ஒலிக்கும்.

பாடசாலை நேரம் தவிர்ந்த விடுமுறைக் காலங்களில் பின்னேர நேரங்களில் வகுப்பறைகளைக் கூட தமது வசதிக்கேற்றபடி மாற்றிக்கொள்வதற்கான தடயங்கள் அங்கே கிடக்கும். பாடசாலைக்கு வந்தால், சினிமாக் கதை கேட்பது போல தினம் ஒரு புதினம், வித வித வழக்கு, தீர்த்து வைப்பதிலேயே அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் பொழுது சரியாகிப் போகும்.

அறிவை வளர்த்து அரச உத்தியோகம் பார்க்க வேண்டும் என்ற ஆசையில், பாடசாலைக்குப் பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்களைவிட தமக்குத் தொல்லை தராமல் இருப்பதற்காக பிள்ளைகளைப் பாடசாலைக்கு விரட்டுபவர்களே அதிகம்.





பிள்ளைகளின் ஆரோக்கியம், சுத்தம், படிப்பு, ஒழுக்கம் என்பவற்றில் அவர்களின் கவனம் பூச்சியம் என்று தான் சொல்ல வேண்டும். ஆனால் அவர்கள் மாத்திரம் வெளியில் போகும்போது மகாராணியைப் போலவும், அரச குமாரர்களைப் போலவும் நினைத்துக் கொண்டு அவ்வளவு ஆடம்பரமாகச் செல்வார்கள். இவர்களா இந்தப் பிள்ளைகளின் பெற்றோர்கள் என மூக்கில் விரலை வைத்து ஆச்சரியப்பட்ட ஆசிரியர்களும் உள்ளனர்.

“சுதா! உன்ர அம்மா என்ன மாதிரி வெளியில் போகிறா. உன்னைக் கவனிப்பதில்லையா? கசங்கிப் போன ‘யூனிபோம்’, காலில ‘பாத்துறூம்’ செருப்பு. தலைக்கு எண்ணெய் வைத்து எத்தனை நாளோ தெரியாது. விடிய எழும்பிப் பல்லுத் தேச்சு முகம் கழுவுவியா? அதுவும் இல்லை. வாயைத்திறந்தால் சகிக்க முடியாமல் இருக்கு. வீட்டு வேலைகள் ஒன்றும் செய்வதில்லை. முதல்நாள் வீசிய புத்தகப் பையை மறுநாள் கவனமாகத் தேடி எடுத்துக் கொண்டு வரமட்டும் தெரியும். சாம்பார்க் கலவை மாதிரி இரண்டு கொப்பிகளில் எல்லாப் பாடங்களும் கலந்து எழுதிக் கிடக்கும். வீட்டில் இதையெல்லாம் கவனிக்க யார் இருக்கிறார்கள்? எங்கட பிராணனை எடுப்பதற்கென்றே பிறந்து வளந்து வந்திருக்கிறியள். கறுமம்... கறுமம்.... இது நாங்கள் முற்பிறப்பில் செய்த பாவம்.”

வசந்தி ரீச்சர் சற்றுக்கடுமையாக ஏசிய வார்த்தைகள் அந்தப் பக்கத்தால் போய்க்கொண்டிருந்த தாயின் காதில் விழுந்திருக்க வேண்டும்.

“நாங்கள் எப்பிடிப் போனால் இவங்களுக்கென்ன? தாய் தேப்பனை வேவு பாக்கவா இல்லாட்டி பிள்ளைகளைப் படிப்பிக்கவா இவை வருகினம். தாங்கள் மினுக்கிக் குலுக்கி வரலாம், எங்களுக்கோ காவல்? ஒழுங்காய்ப் படிப்பிக்கத் தெரியாது. கூடிக் கூடிக் கதையும், சிரிப்பும், கும்மாளமும் தானே நடக்குது. இதைக் கேட்க ஆட்களில்லை எங்களைத் திருத்தப் போகினமோ? எனக்கு சும்மா பத்திக்கொண்டு வருகுது. கேட்பன் கேள்வி. வாயைப் பொத்திக் கொண்டு போவினம்.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலிக்கு மேலால் தலையை நிமிர்த்தி சுதாவின் தாய் சத்தமிட்டு ஏசிய வார்த்தைகள் ஆசிரியர்களின் காதில் விழுந்தாலும், 'இதுகளோட கதைத்து மரியாதை கெடாமல் பேசாமல் காது கேட்கவில்லையென இருப்பது நல்லது' என மௌனமானார்கள்.

அன்று சாருமதி புத்தகமும் கொப்பியும் கொண்டுவரவில்லை. கலா ரீச்சருக்குப் பொல்லாத கோபம் வந்துவிட்டது.

"வீட்டு வேலைகள் செய்யிறதும் இல்லை. கொப்பிகள் காட்டுறதும் இல்லை. ஏன் பள்ளிக்கு வருகிறாய்? எங்கேயாவது கூலிக்குப் போனாலும் நாலு காசு உழைக்கலாம். போடி ஓடிப் போய் புத்தகத்தை எடுத்துக் கொண்டு வா."

முதுகில் பிரம்பு பதம் பார்த்த நோவுடன் வீட்டிற்கு ஓடினாள்.

அறைக்கதவு பூட்டியிருந்தது.

"அம்மா....! அம்மா....!!"

குரல் கொடுத்துப் பார்த்தாள். எதுவித பதிலும் இல்லை. அறைக்குள்ளேயிருந்து மெல்லிய பேச்சுக் குரல் மட்டும் கேட்டது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் அவளது தகப்பன் நல்ல வெறியோடு ஒருவனைக் கூட்டிக்கொண்டு வந்தான். அன்று முழுவதும் அவனது 'பொக்கட்'டிலிருந்து தாள்கள் வெளிவந்தமையினால், தடல்புடலான சமையலில் இவர்களின் வயிறுகள் நிறைந்தன.

எங்கோ துரப் பயணம் போவதாகப் புறப்பட்டுப் போன சாருமதியின் அப்பா இன்னமும் வீட்டுக்குத் திரும்பி வந்திருக்கவில்லை. அந்தப் புதியவரை 'மாமா' என்று முறை சொல்லித் தாய் அறிமுகப்படுத்தி வைத்திருந்தாள்.





கதவருகில் சென்று காதுகொடுத்துக் கேட்டாள். அந்த 'மாமா'வின் குரல்தான். உள்ளே அம்மாவும் இருக்கிறாள். கதவுத் துவாரத்தில் கண்ணை வைத்துப் பார்த்தபடி,

"அம்மா! அம்மா!! கதவைத் திறவுங்கோ! ரீச்சர் புத்தகம் எடுத்து வரட்டாம்"

சாருமதியின் குரலைக்கேட்ட தாய் சிறிது நேரம் எதுவித சத்தமுமின்றி மௌனமாக இருந்துவிட்டு, கோபத்துடன் கதவைத் திறந்து வெளியே வந்தாள். வந்த வேகத்தில் அவளது தலைமயிரைக் கொத்தாகப் பிடித்தாள்.

"உன்னைப் படிக்க அனுப்பினா படிச்சுவிட்டு வருவதுதானே. இப்ப ஏனடி வந்து உயிரை வாங்கிறாய்? பள்ளிக்கூடம் போனால் இடையில வீட்டுக்கு வரக்கூடாது எண்டு எத்தினை முறை சொன்னனான்."

சாருமதியின் முதுகில் ஓங்கி ஓங்கி அடித்தாள். பிரம்பால் அடி வாங்கிய இடத்தில் மேலும் அடி விழுந்து வலியை அதிகரித்திருக்க வேண்டும்.

"அம்மா நான் இல்ல. ரீச்சர் தான் போகச் சொன்னவ".

"ஆரடி அந்த ரீச்சர்?"

"எங்கட வகுப்புச் ரீச்சர். கலா ரீச்சர்."

"கலா ரீச்சரோ என்ன பலா ரீச்சரோ. வா அவளிட்ட நாலு கேள்வி கேக்க வேணும்."

தாய் முன்னாலே போவதற்கிடையில் அறைக்குள்ளே புகுந்து புத்தகத்தினை எடுத்துக்கொண்டு பாடசாலைக்கு ஓடினாள் சாருமதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரீச்சர்! என்ன பள்ளிக்கூடமே நடத்திறியள்? ஒரு கட்டுப்பாடும் இங்க இல்லயே? விரும்பின நேரம் பிள்ளயள் வீட்ட போய் வரலாமே?"

சேலைத் தலைப்பினை முன்னால் இழுத்துச் செருகியபடியே சாருமதியின் தாய் ஆவேசமாகக் கத்தினாள்.

"என்ன பிரச்சினை?"

கேட்டுக்கொண்டே அதிபர் அங்கு வந்து சேர்ந்தார். கலா ரீச்சருக்கு தலை தப்பியது மாதிரியான நிம்மதி.

"இவள் வீட்டு வேலைகள் சொன்னால் செய்துகொண்டு வாறதில்லை. புத்தகம் கொப்பி கொண்டு வாறதில்லை. இப்பவும் கொண்டுவரவில்லை. அதுதான் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வா எண்டு வீட்டுக்கு அனுப்பினனான் புத்தகப் பையை வாங்கிப் பாருங்கோ. ஒரு கொப்பியோட வந்திருக்கிறாள். பென்சிலும் இல்ல. பேனையுமில்ல. இலவசமாகக் கொடுக்கிற புத்தகங்களும் இல்ல. இப்படியெண்டால் நாங்கள் எப்படிப் படிப்பிக்கிறது?"

"சரி நீங்கள் வகுப்புக்குப் போங்கோ கலா ரீச்சர். நான் இவையை விசாரிக்கிறன்."

சாருமதியின் தாயின் பக்கம் திரும்பி,

"அம்மா கட்டுப்பாடு பற்றி பேசிக்கொண்டு வந்திட்டியள் இப்ப ரீச்சர் சொன்னது கேட்டது தானே? உங்கட பிள்ளையளை பள்ளிக் கூடத்துக்கு அனுப்பும்போது ஒழுங்காக அனுப்புங்கோ. வீட்டிலிருந்து வெளிக்கிடும்போது அவர்கள் படிப்பதற்குத் தேவையானவற்றைக் கொண்டுவருகினமோ என்று பார்த்து அனுப்புங்கோ. பெற்றோர் ஆசிரியர்களைச் சந்திக்க நேரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பெற்றோர் தேவையில்லாமல் நினைத்த நினைத்த நேரங்களில் பாடசாலைக்கு வந்து கலகம் விளைவிக்க வேண்டாம். அப்படிச் செய்தால் பிள்ளையின் 'சேட்டிபிக்கற்'ரை தந்து அனுப்பிப் போடுவோம். வேறு





எங்காவது கொண்டுபோய்ச் சேருங்கோ. தொல்லைகள் வேண்டாம். அவர்களுக்கு படிப்பினையும் நல்ல பழக்கவழக்கங்களையும் நாங்கள் கற்றுத் தர எவ்வளவோ பாடுபடுகிறோம். நீங்கள் கொழுப்புக் கதை கதைக்கிறியள்."

நறுக்குத் தெறித்தாற்போல அதிபர் கூறிய வார்த்தைகளில் பெட்டிப் பாம்பாக அடங்கிய சாருமதியின் தாய் எதுவும் பேசாமல் திரும்பிச் சென்றாள்.

"அடே! எங்கட சாருமதியின்ர 'பகல் அப்பா' வந்திருக்கிறார். அதுதான் அவவுக்கு ஆத்திரம் பொத்துக்கிட்டு வந்திட்டுது."

யாரோ ஒரு மாணவன் வகுப்பறைக்குள்ளிருந்து சத்தமாகச் சொன்னது அவளுக்குக் கேட்டிருக்க வேண்டும்.

"ஆரோ குறுக்கால போகினம். பிஞ்சில பழுத்ததுகள். வெம்பி விழப் போகுதுகள்"

சாருமதியின் தாய் வாய்க்குள் முணுமுணுத்தபடி சென்றாள்.

சாருமதி பசி பொறுக்கமாட்டாள். கடவுள் கனவில் தோன்றி 'இந்த உலகத்தில் என்ன வேண்டும்?' என்று கேட்டால், 'சாப்பாடு' என்று சொல்லும் அளவுக்கு அவளுக்குச் சாப்பாட்டில் அலாதி பிரியம்.

அதனால், கால் கிலோ மா, கால் கிலோ சீனி, கால் இறாத்தல் பாண் என்று யார் வாங்கிவரச் சொன்னாலும் தட்டாமல் 'பெட்டிக்' கடைக்குப் போய் வாங்கிவந்து கொடுப்பாள். ஆனால் வரும்போது இடையில் அவற்றிலும் சிறிது கிள்ளி வாய்க்குள் போட்டுவிடுவாள்.

அவளது வீட்டில் கிழமைக்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் தான் அடுப்பு எரியும். அதுவும் யாராவது ஒரு புண்ணியவாளனின் கருணை கிடைத்தால் முக்கு முட்டச் சாப்பிடலாம். மிகுதி நாட்களில் கழுவிக் காயவைத்த பாத்திரங்களில் தூசி படிந்துபோய்க் கிடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்புக்கூட நெருப்புப் பற்றிய அடையாளமே இல்லாமல் சாம்பல் பூத்துக் கிடக்கும். அப்படியான நாட்களில் சாருமதி பசி பொறுக்க முடியாமல் சமையலறைக்குள் அடிக்கடி போய்வருவாள். அங்கு சாப்பிடுவதற்கு ஒன்றும் இல்லாவிட்டாலும் கூட, அப்படிப் போய்வருவதன் மூலமாக பசியை மறக்கப் பாடுபடுவாள்.

இரண்டு நாட்களாக அப்பா எங்குமே போகவில்லை. ஒரு மூலையில் சுருண்டு படுத்துக் கிடந்தார். மாமா என்று யாருமே வரவில்லை. பாடசாலையிலிருந்து வந்த சாருமதிக்கு பசி வயிற்றைக் கிள்ளியது. பசி பொறுக்க முடியாமல் வாளிக்குள் இருந்த தண்ணீரை அள்ளி வயிறு நிரம்பும் மட்டும் குடித்தாள். அப்போதும் பாழாய்ப்போன பசி அடங்குவதாயில்லை.

அவளுக்குத் திடீரென மூலைவீட்டுக் கந்தையாக் கிழவனின் ஞாபகம் வந்தது. பெரிய வளவு, தனி வீடு. கிழவனின் மகள் இரண்டு மாதத்துக்கு முன்புதான் கலியாணம் கட்டிக்கொண்டு மாப்பிளை வீட்டோடு போய்விட்டாள். கிழவன் மட்டும்தான் அந்த வீட்டில் தனியாக வசிக்கிறான். மாங்காய் தேங்காய் என்று வளவால் நல்ல வருமானம். ஒரு நாள் சாருமதி அங்கு மாங்காய் பிடுங்கப் போனாள்.

“பிள்ளை மாஞ்சருகு எல்லாம் கொட்டுது. இடைக்கிடை வந்து கூட்டித்தாவன். காசும் சாப்பாடும் தாறன்.”

சொன்னது மட்டுமல்லாது, ஐந்து ரூபாக் குத்தியொன்றினையும் அவளது கையில் வைத்தான்.

“எத்தனையாம் வகுப்பில் படிக்கிறாய்?”

அசடு வழியச் சிரித்தபடி அவளை அருகே அணைத்து வருடிய செயல் அவளுக்குப் பிடிக்காமல், அதன் பின்னர் அங்கு போவதையும் தவிர்த்துக் கொண்டதும் நினைவுக்கு வந்தது.





இன்று பசி அவளைப் பிடித்துத் தள்ளியது. கால்கள் அவளையும் அறியாமலே கிழவனின் வீட்டை நோக்கி நடந்தன.

கிழவன் வீட்டு முற்றத்து மாமர நிழலில், சாக்குக் கட்டிலில் நல்ல குறட்டை விட்டு நித்திரையாகக் கிடந்தான்.

பக்கத்திலிருந்த சிறிய கதிரையில் தண்ணீரப் போத்தலொன்றும், பக்கத்து ‘ரீ’க்கடைக்கார மருதன் கொண்டுவந்து வைத்த சாப்பாடும் வைக்கப்பட்டிருந்தது. சாருமதியின் கண்களுக்கு அந்தச் சாப்பாட்டைத் தவிர வேறு ஒன்றுமே தெரியவில்லை. நல்ல நேரத்தில் தான் வந்திருக்கிறேன் என நினைத்தபடி, முற்றத்தில் கிடந்த விளக்குமாற்றினை எடுத்துச் சருகுகளைக் கூட்டினாள்.

சத்தம் கேட்டு விழித்தான் கிழவன்.

“யாரது?”

தலையை நிமிர்த்திப் பார்த்தான்.

“நீயா! ஏன் பிள்ள இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேல்லையே?”

கிழவன் கொட்டாவி விட்டுக்கொண்டே சோம்பல் முறித்தபடி எழுந்தான்.

சாருமதி சாப்பாட்டினை இடையிடையே கவனித்தபடி மகிழ்ச்சியோடு ஓடியோடி வேலைகளைச் செய்தாள். குப்பைகளைக் கூட்டி எரித்தாள். வாளிக்குள் தண்ணீர அள்ளி நிரப்பி வைத்தாள்.

“நீ நல்லா வேலை செய்வாய் போலகிடக்கு. இனிக் ‘காணும். வா வந்து சாப்பிடு”

அழைத்தான் கந்தையாக் கிழவன். தனது சாப்பாடு முழுவதையும் அவளுக்கே கொடுத்துவிட்டு, அவசரம் அவசரமாக அவள் சாப்பிடுவதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லாய் சாப்பிடுவியோ! சாப்பிடு சாப்பிடு."

கிழவன் அதே அசட்டுச் சிரிப்புடன் அறைக்குள்ளே போனான். வயிற்றில் இடமேயில்லாமல் திருப்தியாகச் சாப்பிட்டு முடித்த சாருமதியை கிழவன் அறைக்குள்ளேயிருந்து அழைத்தான்.

இப்பொழுது அவளுக்கு எதுவித கவலையும் இருக்கவில்லை. தான் விரும்பியதை அடைந்துவிட்ட திருப்தியில் சந்தோசத்துடன் சினிமாப்பாடல் ஒன்றினை முணுமுணுத்துக்கொண்டு உள்ளே போனாள்.

கிழவன் சொன்னபடியெல்லாம் செய்தாள். அவளது செயல்களில் பற்றற்ற ஞானியினது செயல்களைப்போல எதுவித விருப்பு வெறுப்புகளையும் வெளிப்படுத்தாத கடமை உணர்வு மட்டுமே மேலோங்கியிருந்தது.

இனிமேல் தான் பசிக்காக எங்கும் அலையவேண்டிய தேவை இல்லை என்ற நிம்மதியோடு அவள் வெளியே வந்தபோது கையில் கந்தையாக்கிழவன் கொடுத்த பத்து ரூபா நோட்டு கசங்கிய நிலையில் அவளைப் பார்த்து இனி உனக்கென்ன குறை என்று நம்பிக்கையூட்டு வதைப்போல இருந்தது.

மறுகணம் அந்த நிம்மதியும் திருப்தியும் போன இடம் தெரியவில்லை. பயமும் பதற்றமும் சேர்ந்துகொள்ள அவளின் கையிலிருந்த காசு பயங்கரமான எண்ணங்களை கண்முன் கொண்டுவர, திரும்பிக் கிழவனின் வீட்டுவாசலுக்குள் அந்தக்காசை வீசிவிட்டு தன் வீட்டை நோக்கியோடினாள்.

✍



# நிலவும் சுடும்

இப்படியும் ஒரு கொடுமை நடக்கிறது என்பதனை அவளால் ஏற்க முடியாமல் இருந்தது. பவித்திரா, 'நான் பிறந்த மண்' என்ற பெருமிதத்தில் மகிழ்ந்த வன்னிப் பிரதேசம் இன்று யுத்த அரக்கனின் கோரத் தாண்டவத்தினால் இரத்த வெள்ளத்தில் மிதக்கிறது.

விமானத் தாக்குதல்களினாலும் 'ஷெல்' வீச்சுக்களினாலும் மக்கள் படும் அவலங்கள் சொல்லில் அடங்காது. இப்படியும் நடக்குமா? என எண்ணி ஏங்கும் வகையில் கை இழந்து, கால் அறுந்து, குடல் சிதறி ஊனமுற்றுப் போன உடலங்களும் செத்துக் கிடப்பதே சுகம் எனத் தெருக்களில் தேடுவாரற்றுக் கிடக்கும் பிணங்களும், நோய் பட்டினியோடு போராடி உயிர் பிடித்து வாழ ஆசைப்பட்டுத் தலையிலும் கைகளிலும் பத்திரப்படுத்த வேண்டியவற்றைப் பத்திரப்படுத்திக்கொண்டு போவோரும் தள்ளாடிக்கொண்டு வருவோருமான கோரக் காட்சிகளை தொலைக்காட்சியிலும், இணையத் தளங்களிலும் பார்த்துச் சகிக்காதவளாய் அதையும் பார்ப்பதைக் கைவிட்டு உண்ணவோ உறங்கவோ முடியாது பைத்தியம் பிடித்தவள்போல புலம்பிக் கொண்டிருந்தாள்.

நினைவுச் சுமைகள் மனதை அழுத்தும்போது கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்கும். விக்கி விக்கி அழுவாள். தொடர்ந்து சிலமணி நேரம் அழுத பின்னர் மனம் அமைதியடையச் சிந்தனையில் மூழ்குவாள். காட்சிகள் கொடூரமாகக் கண்முன்னே விரியும்.

அவ்வப்போது வரும் நண்பர்களினதும், உறவினர்களினதும் தொலைபேசி அழைப்புக்கள் சற்று ஆறுதலைத் தந்தாலும் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளைகளில் அடக்க முடியாத கவலையையும் அழுகையினையும் தந்து சிரமப்படுத்திவிடுவதுமுண்டு.

பாழாய்ப்போன யுத்தம் காலங் காலமாய் இழப்புக்களையும், உயிரழிவுகளையும், இடப்பெயர்வுகளையும் ஏற்படுத்திக் கொண்டேயிருக்கின்றது. இம் முடிவில்லாத சாபக்கேடு சந்ததி சந்ததியாகத் தொடரப்போகின்றதா? என்ற கேள்வி எழும்.

திரைப்படக் கதைகளை விபரித்து, விமர்சிப்பது போல இப் பேரவலத்தினை அசைபோட்டு விமர்சிப்பதோடு மட்டும் சிலர் நின்று விடுகிறார்கள். மனிதாபிமானம் என்பது மறைந்துபோய்விட்டது.

தமிழர் என்னும் இன உணர்வோடு அயல் நாட்டவர்களே எமக்காகத் தீக்குளிக்கும்போது நாம் களியாட்டங்களிலும், கேளிக்கைகளிலும் காலத்தைக் கழிக்கிறோம். மனித உயிர்கள் அற்பமாக மதிக்கப்படுகிறதே என ஏங்குவாள். தலையிடியும் காய்ச்சலும் தனக்கு வரும்போதுதான் அந்த வருத்தமும் வலியும் புரியும். பவித்திரா அதனைத் தினமும் அனுபவித்துக்கொண்டிருப்பவள்.

புதுக்குடியிருப்பு அவள் பிறந்த இடம். அக்காவும் அவளும் அக்குடும்பத்தில பிறந்த பிள்ளைகள். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவள் படிப்பில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்த மையினால் ஒரே தடவையிலேயே சித்தி பெற்றுப் பல்கலைக்கழகத்திற் கும் தெரிவுசெய்யப்பட்டிருந்தாள். தமது மகள் கொழும்பிலுள்ள பல்கலைக்கழகத்திற்குப் படிக்கப் போகிறாள் என்பதில் ஏதோ ஒரு உயர்ந்த அந்தஸ்துக் கிடைத்துவிட்டதைப்போன்ற பெருமையில் பூரித்துப்போன பெற்றோர் அவளை ஈன்ற பொழுதிலும் பெரிதுவந்தனர்.

“பிள்ளை பவித்திரா!, இனி நீ எங்களை விட்டுப்பிரிந்து போய்விடுவாய். புதுசான இடம். தெரியாத ஆக்கள். கவனமாகப் பழக வேணும்.”





அப்படித்தான் செய்யவேண்டும். இப்படிச் செய்யக் கூடாது. கட்டளைகளும் அறிவுறுத்தல்களும் நடக்கும். அக்கா நிவேதா, நான் மட்டும் என்ன பாசத்தில் குறைவா? என்பதுபோல, அவளது உடுப்புக்களை எல்லாம் ‘அயன்’ பண்ணிக் கொடுத்து, பவித்திரா வுக்குப் பிடிக்காத உடுப்புக்களைத் தான் எடுத்துக்கொண்டு தனது நல்ல உடுப்புக்களை அவளுக்கென அடுக்கிவைத்துவிட்டாள். விதம்விதமான சாப்பாடுகளையும் செய்து கொடுத்தாள்.

“ஏன் அக்கா? நான் உடுப்புக்களை வாங்குவேன் தானே. நீ ஏன் உன்னுடையதெல்லாம் தாறாய். சும்மா சாப்பாடெல்லாம் செய்து நேரத்தை வீணாக்காமல் வா இன்று கோயிலுக்குப் போவோம், நாளைக்கு மாமி வீட்டுக்குப் போவோம், பின்னேரம் வயலுக்குப் போவோம்.”

அட்டவணைபோட்டு அழைத்தபடி இருப்பாள்.

பவித்திரா கொழும்புக்கு வந்த பின்னர், அங்குள்ள சூழல் மக்களின் வாழ்க்கைமுறை நாகரீக மோகம் என்பவற்றைத் தனது கிராமத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, பெரியதொரு விரிசல் தென்பட்டதை உணர்ந்தாள்.

வீட்டுக்குப் பின்புறத்தில் பரந்து விரிந்து கிடக்கும் நிலப்பரப்பில் மிளகாய், கத்தரி, வெண்டி காய்த்துச் செழிப்புடன் இருக்கும். சுற்றிவர அடிபெருத்த பெரிய மா மரங்கள், தென்னை மரங்கள், வேப்ப மரங்கள், வாழை மரங்கள் என மரங்கள் வரிசைவரிசையாய் நிற்க, அம்மரங்களை வருடிச் செல்லும் காற்றின் குளிர்மை உடலை இதமாக்கும்.

ஆழமான அகன்ற கிணற்றிலிருந்து ஒரு ‘வாளி’ தண்ணீரை அள்ளி எடுக்கவே கைகள் இரண்டும் சோர்ந்துபோய்விடும். நிவேதாதான் அவளுக்குத் தண்ணீர் அள்ளிக் கொடுப்பாள். தோட்டத்திற்கு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கும்போது அக்காவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுமாக தண்ணீரைப் பாத்திரங்களில் ஏந்திக்கொண்டு போய் கத்தரி, மிளகாய்க் கன்றுகளுக்கு ஊற்றுவார்கள். அவற்றுக்கிடையில் வளர்ந்திருக்கும் களைகளைப் பிடுங்குவார்கள். மிளகாய் ஆய்வார்கள். அருவி வெட்டுவார்கள். உழுந்து, எள்ளு, பயறு போன்றவற்றை படங்குகளில் போட்டுக் காயவைப்பார்கள். பழ மிளகாய்களைக் காயவைத்துச் சாக்குகளில் கட்டுவார்கள். தினமும் இவற்றைச் செய்த பின்னர் நீரோடும் வாய்க்காலில் குளித்து மகிழ்வார்கள்.

அந்தக் காலங்கள் இனிமையானவை. என்னதான் புதிய யுகத்திலே வாழ்ந்தாலும், தனது பிறந்த இடத்து வாழ்க்கையில் இருக்கும் மனநிறைவை எங்குமே பெறமுடியாது என்பதை அவள் மனப் பூர்வமாக நம்பியதால் இந்தப் பிரிவும் தனிமையும் அவளை வருத்தியது.

"பவித்திரா! கொழும்பில இருந்து அடிக்கடி இங்க வர நினைக்காதே அது வேற பிரச்சினைகளைக் கொண்டுவரும். மூன்று வருசங்கள் கண்மூடித்திறக்கப் பறந்து விடும். அங்கேயே இருந்து படிப்பை முடிச்சுப்போட்டு ஒரேயடியாக இஞ்ச வா."

அப்பா உபதேசம் செய்தபோது வெறுப்பாக தென்பட்ட அந்த வார்த்தைகளின் அர்த்தத்தைக் கொழும்பில் வசிக்கும் காலங்களில் அனுபவ பூர்வமாக உணர்ந்துகொண்டாள்.

கிராமங்களிலே வானத்தைப் போல பரந்து விரிந்து கிடந்த பூமித்தாயின் செழிப்பைப் போல அங்குள்ள மக்களின் மனங்கள் கூட விசாலிப்பும் வீரியமும் நிறைந்து இருந்தது. ஆனால் போலித் தனமும், வஞ்சகமும், சுயநலமும் கொண்டவர்களாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும் என்பதனைக் கொழும்பு வாழ்க்கை அவளுக்குப் போதித்தது.

கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் இருந்து வந்த மாணவிகளோடு சேர்ந்து அவளும் கொழும்பில் இருப்பிடம் தேடி அலைந்தாள்.





பல்கலைக் கழகத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் அறை வாடகைக்கு எடுத்து மூவரும் தங்கியிருந்தபோது, அடிக்கடி காவல்துறையினர் அங்கு வந்து விசாரணை என்னும் பெயரில் தொல்லை தரத் தொடங்கினர். அதனால் வீட்டுக்காரரும், முழுதாக ஒரு மாதம் முடிவடைவதற்கு முன்னரேயே வெளியேறும்படி கட்டளையிட்டனர்.

விதியே என்று மறுபடியும் வீடு தேடிக் களைத்தபோது, இரத்மலானையிலுள்ள தொடர் மாடியொன்றில் வசித்த தமிழ்க் குடும்பம் வெளிநாட்டுக்குச் சென்றதால், தளபாடங்களோடு முழு வீட்டினையும் ஒரு வருட காலத்திற்கு இவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டுச் சென்றனர்.

பவித்திரா, சுமதி, வினித்தா மூவருக்கும் அதிஷ்ட தேவதை கருணை மழை பொழிந்துள்ளாள் என மற்றைய மாணவர்கள் பொறாமைப்படும் அளவுக்கு அவ்வீடு மகிழ்ச்சி நிறைந்த வாழ்வினைத் தந்தது. மூவரும் சேர்ந்து சமைப்பது, சாப்பிடுவது, விரிவுரைகளுக்குப் போவது, அவற்றைப்பற்றிக் கலந்துரையாடுவது, வெளியே சென்று தேவையான பொருட்களை வாங்கி வருவது இவ்வாறு சுறுசுறுப்பாக இயங்கினார்கள்.

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் "ஐடென்ரி காட்" அவர்களைப் படுத்தும்பாடு பெரும்பாடு. கையை நீட்டும் இராணுவத்தி னரிடம் அதைக் கொடுக்கும்போது கொலைக் குற்றம் புரிந்த குற்றவாளிகள் போல கைகளும் மனமும் படபடக்கும்.

அதில் அப்படி என்னதான் இருக்கிறதோ தெரியாது. அப்படியும் இப்படியும் திருப்பித் திருப்பிப் பார்த்தபடி அவர்களின் முகங்களில் தெரியும் நெளிவு சுழிவுகள் ஆயிரம் கேள்விகளை எழுப்பும், பாதாதி கேசமோ அல்லது கேசாதி பாதமோ என்று சொல்ல முடியாதபடி பார்க்கும் அந்தப் பார்வை. ஒரு அற்ப ஜந்துவைப் பார்ப்பது போலவும், அதையும் விட தப்பிவந்த சிறைக்கைதியைக் கையும் களவுமாகப் பிடித்துவிட்டதைப் போன்றதொரு பெருமிதத்தில் மிதந்தபடி அவளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கமாக நிற்க வைக்கும்போது, மற்றையவர்களின் பரிதாபப் பார்வை, வேடிக்கைப் பார்வை, விரோதப் பார்வை என எல்லா விதமான பார்வைகளும் சேர்ந்து அவளைக் கூனிக் குறுகித் தலைகுனிய வைத்துவிடும்.

பிறந்த இடத்தின் பெயர் இவ்வளவு பேராபத்தை ஏற்படுத்தும் என்பதை அவளால் ஏற்க முடியவில்லை. அப்பாவின் வார்த்தைகளின் அர்த்தப்பாடு மந்திர உச்சாடனம் போல காதுகளில் ஒலிக்கும்.

அன்று இரவு பத்து மணி இருக்கும். படுக்கப் போகுமுன்பு மறுநாள் செய்யவேண்டியவற்றைப் பற்றி ஒருவருக்கொருவர் நினைவுபடுத்திவிட்டு உடுப்புகளை 'அயன்' பண்ணிக் கொண்டிருந்த வேளை வெளியே கதவில் தட்டும் சத்தம் கேட்டு மூவரும் ஒருவரை ஒருவர் கேள்விக்குறியோடு பார்த்துக்கொண்டனர்.

அடுத்த வீட்டில் வாழ்பவன் யார் என்று அக்கறை கொள்ளாத கொழும்பு வாழ்க்கையில் தம்மைப் பற்றிக் கவனிக்க யார் வரப்போகிறார்கள். பக்கத்து வீட்டு "அங்கிளை"க் கூப்பிடலாமா? இரவுநேரம் படுக்கைக்குப் போய்விட்டால் அழைப்பதும் சரியில்லை. தனக்குள் நினைத்துக் கொண்ட பவித்திரா மற்றவர்களைப் பார்த்தாள்.

ஒருவருக்கும் பேச்சு வரவில்லை. மூச்சுத் திணறுவது போன்ற நிலையில் சுவாசத்தைச் சீராக்கிக்கொள்ள முயல்வது தெரிந்தது.

எங்கோ அண்மையில் நாய்கள் குரைக்கும் சத்தமும், கூடவே தொலைக்காட்சியில் படக்கதையில் பெண் குரல் 'காப்பாற்றுங்கள்' என்று அழும் சத்தமும் காதில் தெளிவாக விழுந்தது.

இரவு உடையில் இருந்ததால் மேலாடைகளை எடுத்து அணிந்து கொண்டு வந்தார்கள். தாமதித்தால் கதவு உடைபட்டு விழுமோ? என்ற நிலையில் தட்டும் சத்தம் அதிகமாகி விடவே, பவித்திரா தான் கதவைத் திறப்பதாக சைகை செய்துவிட்டு மெதுவாகத் திறந்தாள்.





"செக் பண்ண வேணும்."

அவர்களின் பதிலுக்குக் காத்திருக்காமல் சீருடையில் வந்த பொலிஸார் மூவர் வீட்டுக்குள் புகுந்தனர். உடுப்புகள், சமையல் சாமான்கள், கொப்பி புத்தகங்கள் ஒன்றும் தவறவிடாமல் உதறி உதறிச் சோதனை செய்தார்கள். முடிவில்,

"நீங்க ஸ்ரேசன் வரவேணும்"

இந்த இரவு வேளையில் இவர்களுடன் தனியாக செல்ல வேண்டுமா? எங்கே கொண்டு செல்வார்களோ தெரியாது. நாங்களும் 'கிரிசாந்தி'களாகுவதோ என்னவோ...? தெய்வமே...! மனம் தெய்வ உச்சாடனங்களில் நம்பிக்கை இழந்து ஓலமிட்டது. உடுத்த உடுப்பை மாற்றக் கூட அனுமதிக்காத நிலையில் வாகனத்தில் ஏறினார்கள். 'எல்லாம் அவன் செயல்' என்பது போல, இரவின் நிசப்தமும், மரக்கிளைகளின் அசைவும், நாய்களின் இடைவிடாத குரைப்பும் உள்ளத்தில் தீப்பற்றிவிட்டது போன்ற எரிச்சலை ஏற்படுத்த 'ஸ்ரேச'னிற்குக் கொண்டு செல்லப்பட்ட அவர்கள் இரவு முழுவதும் கண் விழித்தபடி விடிவிற்காகக் காத்திருந்ததை நினைத்தால் வாழ்க்கை அர்த்தமற்றது போலத் தோன்றும்.

என்னதான் வசதிகள் படைத்து வானத்தில் பறந்தாலும் கூட மனிதன் தன் சுற்றமும் சூழலும் சேர வாழ்வதில் தான் சுகத்தைக் காண முடியும். அந்த நிறைவு எதிலுமே பெறமுடியாதது.

பவித்திரா கொழும்புக்கு வந்த பின்பு மூன்று வருடங்களில் அவரகளது வீட்டுச்சூழலில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும். அக்கா நிவேதாவிற்குத் திருமணம் அவளில்லாமலே நடந்து முடிந்து விட்டது.

அக்கா அவளின் வாழ்க்கையைப் பற்றிக் கட்டியிருந்த கற்பனைக் கோட்டைகள் அழகானவை. முழுநிலாக்காலங்களில் நிவேதா இன்பப் பரவச நிலையில் மிதப்பாள். பழைய பாடல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானொலியில் கேட்டபடி முற்றத்தில் எல்லோரும் கூடியிருக்கும் போது அவளின் உற்சாகம் வெளிப்படும். 'வானும் நிலவும் மாறாமலிருந்தால்.....' தன்னை மறந்து அந்த வரிகளை திரும்பத்திரும்ப பாடி உள்ளம் குதுாகலிப்பாள்.

"எப்படி?..... எப்படி?......... எங்கே திருப்பிப் படி......."

பவித்திரா அவளைப் பாடாய்ப் படுத்துவாள். அக்காவும் அத்தானும் சந்தோசமாய் இருப்பார்கள் என நம்பினாள்.

"ஒரு வருடமாச்சுது. ஒரு புழு பூச்சியும் இல்லையோ? எண்டு மாமி மட்டுமில்ல, காணுறவையளும் கேட்கத் தொடங்கி விட்டினம். இதுவே வாழ்க்கையில் பெரிய கேள்விக்குறியாகிவிட்டது."

நிவேதா ஒருமுறை கவலைப்பட்டுச் சொன்னாள்.

"நிவேதா எங்கட கிணற்றடியில நிறைய மண்புழுக்கள் இருக்கும். பிடிச்சுக் கொடுத்தால் போச்சு".

அவள் வேடிக்கையாய்க் கேலிசெய்தாள்.

"உனக்கும் மூளை இருக்குப் பாத்தியா? நீ சொன்ன மாதிரித் தான் செய்யப் போகிறன்"

உற்சாகத்தோடு சொல்லிவிட்டுப் போனவள், மறுதரம் 'கொமினிகேசன்' கடைக்கு வந்து தொலைபேசியில் பேசியபோது தனக்குக் குழந்தை கிடைக்க இருப்பதாகச் சொன்னாள்.

"நீ இனிமேல் என்னோடு கதைக்கிறதுக்காக வரவேண்டாம். வடிவான தங்கச்சிப் பாப்பா ஒன்றைப் பெத்துப்போட்டுச் சொல்லு. பேர் வைக்கிறது தொடக்கம், வளர்க்கிறது எல்லாம் நான்தான். உனக்கு வேலையே இருக்காது பாரன்."





அவளுக்கும் அக்காவைப் பார்க்க வேண்டும், அத்தான் எப்படி இருப்பார்? அவரைக் கிண்டல் பண்ணவேண்டும் என்றெல்லாம் ஆசை இருந்தாலும், பல்லைக் கடித்துக்கொண்டு இந்த வருடத்தைப் போக்கிவிடுவோம், பிறகு அவர்களோடு தானே இருப்பேன் என மனதைத் திடப்படுத்திக்கொண்டாள்.

வீட்டிற்குப் போகும் ஆசையும், அம்மா, அப்பா, அக்கா, அத்தான், குழந்தை எல்லோரோடும் இணையப்போகும் எதிர்பார்ப்பிலும் அடிமனதில் ஆசைவேர்கள் ஆழப்பதிந்து உற்சாகத்தையும் பிடிப்பையும் ஏற்படுத்தியது.

வன்னியில் போர் தொடங்கிய நாளிலிருந்து எதுவிதத் தகவலுமே இல்லாமல் பவித்திரா தவித்தாள். எங்கு போனார்கள்? எப்படி இருக்கிறார்கள்? என்ன சாப்பிட்டார்களோ? எதுவுமே அறியமுடியாது மனம் பல கேள்விக் கணைகளைத் தொடுக்கும். விடையில்லாத வினாக்களாய் மீண்டும் மீண்டும் தொடர்ந்து வந்து துரத்தும். அந்த எண்ண அலைகளிலிருந்து அவள் மீள முடியாமல் அழுவதும், அரற்றுவதும் நித்திய தொழிலாகிப் போனது.

"ஹலோ! பவித்திரா இன்டைக்கு பேப்பரில உன்ர அக்காவின்ர பெயர் இருந்தது. திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட காயப்பட்ட நோயாளிகளின் பெயர்ப்பட்டியலில் பார்த்தனான். சிலவேளை பிரசவ காலம் நெருங்கிவிட்டதால் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வந்திருக்கலாம்."

நிவேதா காயப்பட்டு வந்ததென்று சொன்னால் தாங்கமாட்டாள் என்பதால் இப்படி ஒரு கதையைப் புனைந்து சொன்னாள் கார்த்திகா. அந்தச் செய்தி பவித்திராவுக்கு ஆறுதலைத் தந்திருக்க வேண்டும்.

"கார்த்தி! எனக்கு ஒரு உதவி செய்வாயா?"

ஆவலோடு கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன? திருகோணமலைக்குப் போக வேணும். அப்படித்தானே....?"

கார்த்திகா முடிக்கவில்லை.

"இன்று இரவே 'றெயி'னில் போவோம். வாறியா?"

கார்த்திகா அவளின் ஆதங்கத்தைப் புரிந்தவளாய்,

"சரி, ஆயத்தப்படுத்து. வெளிக்கிட்டு என்ர அறைக்கு வா போவம்."

பவித்திராவுக்கு எத்தனையோ நாட்களுக்குப் பின்னர் இன்று, அதுவும் இப்பொழுது தான் மனம் அமைதியாக இருந்தது. 'அப்பிள்', 'ஒறேஞ்ச்', 'கிறேப்ஸ்', 'பிஸ்கட்' ஒவ்வொன்றையும் ஆசை ஆசையாக வாங்கிக் கொண்டாள். இரவு முழுவதும் கண்கூட மூடாமல் விழித்தபடி ஏக்கம், ஆசை, துன்பம் போன்ற உணர்வுகளோடு போட்டி போட்டுக் கொண்டு பயணித்தாள்.

திருகோணமலையில் கால் வைத்ததும் ஆட்டோ ஒன்றை அழைத்து 'ஆஸ்பத்திரி'க்கு போகும்படி சொன்னார்கள். 'ஆட்டோ'ச் சாரதி சொன்ன தகவல்கள் இதயத்தைச் சுக்கு நூறாக நொறுக்கியது.

"நோயாளியைப் பார்ப்பதற்குக் கூட பதிவுகளும், விசாரணைகளும் வைத்து இவ்வளவு பாடுபட வேண்டியிருக்கிறதே, இதென்ன வாழ்க்கையடி.?"

பவித்திரா முணுமுணுக்க, கார்த்திகா

"பேசாமல் வா. தேவையில்லாமல் கதைக்காதை."

கையைப்பிடித்து அழுத்தினாள். நோயாளிகளுக்கோ, அகதிகளுக்கோ உரித்தான உபசரணைகளுக்கு எதிர்மாறான





நிலமைகளைக் கண்ணால் கண்ட பவித்திராவுக்கு, அவற்றைவிட எப்படியாவது அக்காவைச் சந்தித்து விடவேண்டும் என்ற அவாவுதலே மேலோங்கி நின்றது. இரத்த வெடுக்கும், பிணவாடையின் நெடியுமாக ஆஸ்பத்திரிப் பிரதேசத்தில் தனித்துவமான துர்நாற்றம் பரவிக் கிடந்தது.

யுத்த வெறியோடு ஆக்கிரமித்து அழிவுபடுத்திய போர்க்களத்தின் மனிதச் சிதைவுகளைப் பார்ப்பது போல ஆஸ்பத்திரிக் கட்டில்களில் எல்லாம் மனித தசைப் பிண்டங்கள் குவிந்து கிடந்தன. கண்கொண்டு பார்க்கமுடியாத கோரப் படுகொலைகளால் குழந்தைகள், பெண்கள், முதியோர் என்ற பேதமின்றி அப்பாவிச் சனங்கள் தண்டிக்கப்பட்டதைப் பார்க்கும்போது, பழியோ, பாவமோ என்று சொல்லத் தெரியாத தவிப்பு ஏற்பட்டது.

மகப்பேற்று 'வாட்' எது என விசாரித்து அங்கே போனார்கள். கர்ப்பிணிப் பெண்கள் கூட விதிவிலக்கில்லாமல் காலிழந்து, கையிழந்து, கண் இல்லாமல், பிறந்த பிள்ளையும் இறந்து .... ஐயோ! ஐயோ!! என கதறி அழவேண்டும் போல இருந்தது.

அவளது அக்கா நிவேதா 'எங்கே...? எங்கே ....??' என மனமும், கண்ணும் தேடித் தேடிச் சலித்துப்போக மருத்துவத்தாதியிடம் விசாரிப்பதற்காக விரைந்தாள்.

"பவித்திரா ...! பவித்திரா ...!!"

பழக்கப்பட்ட அழைப்புக் குரல் கிணற்றுக்குள்ளிருந்து வருவது போன்ற ஈனஸ்வரத்தில் கேட்டுத்திரும்பியவள் அக் குரல் வந்த திசையில் நடந்து போய் ஒரு கட்டில் அருகே நின்றாள். அவளது கண்கள் இமைக்க மறந்து இதயம் ஒருகணம் துடிக்க மறந்தது போல ஸ்தம்பித்து விட,

"நீ... அக்கா...! நிவேதா..!!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் திக்கித் திணறிக் கேட்டபோது அந்த உருவம் தலையசைத்து ஆம் என்பதை அங்கீகரித்தது.

"ஐயோ அக்கா...!"

அலறியவள் கட்டிலோடு தலையை மோதி மயங்கிக் விழுந்தாள். அவளது கையிலிருந்த பழங்கள் திசைக்கொன்றாய் விழுந்து சிதறின. கார்த்திகாவின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று விழுந்து கன்னத்தில் வழிந்தோட தண்ணீர்ப் போத்தலை எடுத்து பவித்திராவின் முகத்தில் நீரைத் தெளித்தாள்.

கொஞ்சம் கொஞ்சமாக மயக்கம் தெளிந்தது. ஆனாலும் வார்த்தைகள் வெளிவரவில்லை. துக்கம் தொண்டையை அடைத்துவிட்டது.

கன்னங்கள் இரண்டும் ஒட்டி, கண்கள் குழி விழுந்து, இரண்டு கைகளும் இல்லாமல், ஒரு காலையும் இழந்து, தாய்மை அடைந்திருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக வயிறு மட்டும் உப்பிப்போய் அவள் படுக்கையில் கிடந்த கோலம் எந்த மனிதனாலும் பார்த்துச் சகிக்க முடியாதது.

நிவேதாவின் கண்களிலிருந்து நிரம்பி வழிந்த கண்ணீர் கடைக்கண் வழியாக தலையணையில் விழுந்து புள்ளிக் கோலங்களாய்ப் பளபளத்தன. வாய் வார்த்தைகள் எதுவுமின்றி மௌன பாஷையில் இருவரும் எதை எதையோ பரிமாறிக் கொள்வது போன்ற அமைதி நிலவியது.

"அக்கா! அம்மா, அப்பா, அத்தான் எங்கே?"

'தெரியாது' என்பது போல் தலையசைத்தாள் அவள்.

"பவித்திரா ... எனக்கு ஒரு உதவி செய்வாயா?"

அக்கா பரிதாபமாகக் கேட்டாள்.





"இதென்ன கேள்வி, எதுவெண்டாலும் சொல்லக்கா."

"எனக்கு சாவதற்கு விஷம் வாங்கித்தரமாட்டியா? உன்னைக் கும்பிடக் கைகள் இல்லை. எல்லோரையும் கேட்டிட்டேன். கருணைக்காகவேனும் இதை நீ செய்யமாட்டியா? கருணைக் கொலைக்குப் பாவம் கிடைக்காதாம். உனக்குப் புண்ணியம் தான் கிடைக்கும்."

இதயத்தில் ஆயிரம் ஊசிகளை நறுக் நறுக்கென்று ஏற்றிவிட்டதைப்போன்ற வலியை உணர்ந்தாள் பவித்திரா. அவளால் எதுவித பதிலும் சொல்லமுடியாமல் கண்ணீருடன் அக்காவின் தலைமுடியைக் கோதி, முகத்தைத் தடவிக்கொண்டிருந்தாள்.

பார்வையாளருக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிவடைந்ததால் தாதிமார் எல்லோரையும் வெளியில் போகும்படி கட்டளையிட்டனர். இந்த நிலையில் இருப்பவளோடு துணைக்காக என்னை விடமாட்டார்களா? என மனம் ஆதங்கப்பட்டாலும், சாத்தியமற்றவற்றிற்காக முயற்சித்துப் பயன் இல்லை என்பதை எண்ணி மனத்தைத் தேற்றிக்கொண்டு 'பிறகு வருகிறேன்' என விடை பெற்றுச்சென்றாள்.

அங்குள்ள சூழலைப் பார்க்கும் போது, வெளியாட்களின் தலையீட்டை விரும்பாத நிலை காணப்பட்டதாலோ என்னவோ தெரியாது வரும்போது தாதி ஒருத்தி அவளது பின்னாலே வந்தாள்.

"நீங்கள் அடிக்கடி வந்து வீண்வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ளாமல் இருப்பது நல்லது. நாங்களே எல்லாம் பார்த்துக் கொள்வோம். நீங்க கவலைப்படாமல் போங்க."

அப்படிச் சொன்னது மேலும் கவலையை ஒருபடி அதிகமாக்கியது.

மறுநாள் நேரம் மெதுவாக நகர்வது போன்ற பிரமையில் இருந்த பவித்திரா சிரமப்பட்டு நேரத்தைப் போக்கி ஒருமாதிரி நண்பகல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 மணியாவதற்கு பதினைந்து நிமிடம் இருக்கும் போது, ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டாள்.

மீண்டும் அதே விசாரணைகளும்... பதிவுகளும் முடிந்தபின் ஆவலோடு ஓடினாள்.

அங்கே முதல்நாள் நிவேதா கிடந்த கட்டிலில் புதிய நோயாளி இருப்பதைக் கண்டு அங்கும் இங்கும் ஓடினாள். தாதி அவளருகே வந்து உமது அக்காவிற்கு ஆண்குழந்தை பிறந்து விட்டது என்றாள். அக்கா எங்கே என்று கேட்பதற்கு முன் மற்றொரு தாதி குழந்தையை தூக்கி வந்து அவளுக்குக் காட்டினாள். அவள் குழந்தையின் முகத்தையே பார்க்கவில்லை.

"நான் அக்காவைப் பாக்க வேணும்"

தாதி மௌனமாக அவளைத் தன்னோடு வரும்படி அழைத்துச் சென்றாள். பவித்திராவின் மனதில் பலவித சிந்தனைகள் தோன்றின. அதனால் மனம் பதறியது. வரிசையாக ஒருபுறத்தில் வெறும் தரையில் வெள்ளைத் துணியால் போர்த்தியிருந்த உடல்களின் அருகில் அவளை அழைத்துப்போய் ஒரு உடல் மீது போர்த்தியிருந்த போர்வையை விலக்கி முகத்தைக் காட்டினாள்.

"அக்கா போயிட்டா..."

முகத்தில் நேற்றுக் காணாத மலர்ச்சியோடும் புதுப் பொலிவோடும் நிவேதா உயிரற்றுக் கிடந்தாள்.

பவித்திரா வாயிலே கையை வைத்துக்கொண்டு அவளை வெறித்துப் பார்த்தபடி நின்றாள். மனதில் ஆயிரம் கேள்விகள் விடை தெரியாத வினாக்களாய்த் தொடர்ந்து வந்தன.

ஆசை ஆசையாய் காத்திருந்து விட்டுக் கைகூடி வரும்போது அனுபவிக்கமுடியாமல் போனது சுவேதாவுக்குக் கவலையாக





இல்லை. அவள் உயிரோடு இருந்து குழந்தை அழும்போது தூக்க முடியாமல், அணைத்துப் பாலூட்டத்தெரியாமல், பிள்ளை பராமரிக்க முடியாமல் அவளே இன்னொருவருக்குச் சுமையாக வாழ வேண்டிய நிலையினை ஒருகணம் கற்பனை செய்து பார்த்தாள்.

இந்த நிலையில் ஆசைகளெல்லாம் பெரிதா? என்று ஒரேயடியாகச் செத்துவிடத் துணிந்த நிவேதாவின் மனவைராக்கியத்தை வியந்தபடி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

ஏதோ சூனியத்துக்குள் நிற்பது போன்ற பிரமையில் தாதி கொடுத்த குழந்தையைக் கையிலே வாங்கினாள். மனதில் வெறுமை சூழ்ந்துகொள்ள உணர்ச்சிகளற்ற ஜடமாக... அந்தப் பிஞ்சுக் குழந்தையின் முகத்தைப் பார்த்தாள்.

தாய்மையின் அரவணைப்பை அறியாத குழந்தை குரலெடுத்து அழுவதற்கே திராணியற்று மெதுவாக அழத் தொடங்கியது. எல்லாவற்றையும் இழந்த பினபு ஏன் நீ அழுகிறாய் என்று குழந்தையைப் பார்த்து அவள் மனம் கேட்டது.

கண்களில் நிரம்பி வழிந்த கண்ணீர் குழந்தையின் முகத்தில் விழுந்து அதனது அழுகையை அர்த்தப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருகிடும் நினைவுகள்

சாலினி எதையோ வெறித்துப்பார்த்தபடி அமைதியாக இருந்தாள். இதன் பின்னணியில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்று இருப்பதை உணர்ந்த அவளது சினேகிதிகள் பக்கத்திலே ஆறுதல் சொல்வதற்குத் தயாராக முன்னெச்சரிக்கையோடிருந்தனர். எல்லோர் முகங்களிலும் துன்பரேகைகள் கோடிட்டுக் கிடந்தன.

எவ்வளவு ஆசைக்கனவுகளைச் சுமந்துவந்த சாலினி இப்படி இடை நடுவில் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு பாடுபட்டதற்கும் பயனை அடையாமல் போகப்போகிறாளே! இவளைத்தடுத்து நிறுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் அனைத்தும் பயன்தராமல் போய்விட்டதே என்ற வருத்தம் அவர்களின் முகத்தில் தெரிந்தது.

வினித்தா, அபி, யசோ முவரும் சாலினியைப்பிரியாமல் பக்கத் திலேயே இருப்பதால் தான் அவள் இந்தளவாவது சமாதானமாக இருக்கிறாள். திரும்பத்திரும்ப அவள் கேட்கும் கேள்விகளில் எந்த விதமாற்றமும் இல்லை. பதில் சொல்லிச் சலித்துப்போனவள் பொறுமைக்கு இலக்கணமான யசோ தான்.

“ஏன் அப்படிச் செய்தவை? நாங்கள் என்ன பிழை செய்தோம்? அத்தனை கண்களும் பார்க்க, பலிக்கடாக்கள் போல மௌனமாகப் பின்னால் போனோமே? எங்களுக்காகத் தட்டிக்கேட்க யாரும் இல்லாத இடத்தில ஏன் இன்னமும் இருந்து அவமானப்படவேண்டும்?”

கேட்டுவிட்டு விம்மி விம்மி அழத்தொடங்கினாள் சாலினி.





“சாலி! நீ மட்டுமா நாங்களும் தானே? இஞ்ச பார்! அதை ஒரு கெட்ட கனவாக நினைச்சு மறந்துவிடு. திரும்பத்திரும்ப இதையே கேட்டுக்கொண்டிருந்தால் நாங்களும் போய்விடுவம்.”

சற்று அழுத்தமாகப்பதில் சொன்னாள் அபி.

“எப்படி அபி? அது தான் என்னால் முடியாமல் இருக்குதே? திரும்பத்திரும்ப அந்த நிகழ்வு எனக்கு கண்முன்னே வந்து துன்புறுத்துகிறதே? குனிந்த தலை நிமிராமல் வாகனத்தில் ஏறிப்போன நிகழ்வை நினைத்தால் தலைக்குள் பூகம்பமாய் வெடிக்கிறதே! முடியாது முடியாது. மறக்கமுடியாது?

அவள் பெரிதாகச் சிரிக்கத் தொடங்கினாள்.

‘இவளுக்கு மனம் குழம்பிப் பைத்தியம் பிடித்துவிட்டது.’

தனக்குள் நினைத்த யசோ மற்றவர்களின் முகத்தைக் கேள்விக்குறியோடு பார்த்தாள்.

“சாலினி தேவையில்லாமல் கதைக்காதை. படிக்கத் தானே வந்தோம்? படிப்பு முடியப் போய்விடுவோம். அது வரையும் பொறுமையாக இருப்போம். பேசாமல் இரு!”

கண்டிக்கும் பாவனையில் சொன்னாள்.

“நீங்கள் படியுங்கோ. என்னாலெண்டால் படிக்க முடியாது. நான் இப்பவே போகவேணும். என்னைப் போகவிடுங்கோ!”

திரும்பத் திரும்ப அதனையே சொல்லிக்கொண்டிருந்த அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டு தலையைத் தடவி அணைத்துக்கொண்டாள் யசோ.

சாலினிக்குப் பல்கலைக்கழகத்திற்கு போகவேண்டும் என்னும் ஆசை வேர்விட்டு வளர்ந்ததற்குக் காரணம் அவளது சித்தியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'போட்டோ' தான். பட்டமளிப்பின்போது எடுக்கப்பட்ட 'போட்டோ'வை அவர்களது 'அல்ப'த்திலிருந்து பார்த்த, விபரம் புரியாத காலத்திலிருந்தே மனத்தில் விதைகொண்ட அக்கனவு அவளை உற்சாகப்படுத்தியது.

"சித்தி இந்தப் 'போட்டோ'வில நீங்கள் நல்ல வடிவாய் இருக்கிறியள். எங்களையும் இப்பிடிப் போட்டோ எடுப்பினமே?"

அவளது ஆவலான கேள்விக்கு சித்தி கூறிய பதில் அவளுக்கு அவ்வளவு சிரமமானதாகத் தெரியவில்லை.

"நாலு வருஷம் கம்பசில படிச்சு முடிச்சாத்தான் இப்படிப் படம் எடுப்பினம். நீயும் நல்லாய்ப் படிச்சால் நிச்சயமா இப்படியொரு 'போட்டோ'வை எடுக்கலாம்."

சித்தி சொன்னதை அவள் மனப்பூர்வமாக நம்பினாள். 'முயன்றால் முன்னேறலாம்' சித்தி தனது 'போட்டோ'வின் பின்னால் எழுதி, அன்பளிப்பாகச் அதை கொடுத்திருந்தமையினால், அடிக்கடி எடுத்துப் பார்த்து இரசிப்பாள். வாழ்க்கையின் இலட்சியமாக நினைக்கப்பட்ட அந்த ஆசைக்காக விடாமுயற்சியோடு படித்தாள். அதன் பயனாகவே சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து மொறட்டுவைப் பல்கலைக் கழகத்திற்கு பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு அவள் தெரிவாகியபோது ஏற்பட்ட சந்தோஷத்தினை வார்த்தைகளால் விபரிக்க முடியாது.

இலட்சியவாதிகள் தமது இலட்சியத்தினை எட்டும்போது எப்படிப் பரவசமடைவார்கள் என்பதனை எண்ணிப் பார்த்தாள். வாழ்க்கையில் பெரியதொரு சாதனையைச் செய்துவிட்ட பெருமிதத்தில் மனம் குதூகலம் கொண்டது.

பிறந்து வளர்ந்த இவ்வளவு காலத்திலும் 'கொழும்பு' இலங்கையின் பெரிய நகரம் என்று கேள்விப்பட்டது மட்டும்தான். அங்கு வாழ்பவர்கள் எல்லாவற்றிலுமே சற்று வித்தியாசமானவர்களாகத் தான் இருப்பதாக ஊரில் பேசிக்கொண்டபோது, அதனை மனதில் பதித்துக் கொண்டாள்.





சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவளுக்கு அங்குள்ள நாகரீகம், பொருளாதார வசதி, ஆங்கில அறிவு அனைத்துக்கும் ஈடுகொடுக்க முடியுமா? முடியாதா என்பதில் தடுமாற்றமும் ஏற்பட்டு மனதில் எங்கோ ஒரு மூலையில் ஒளித்துக் கிடந்து உறுத்தாமல் இல்லை.

அமைதியான சுபாவமும் அடக்கமான குணமும் கொண்ட சாலினி மென்மையாகவும் அளவோடும் பழகவே விரும்புவாள். கம்பசிற்கு வந்த ஆரம்பநாட்களில் "ராகிங்" கும்பல் சூழ்ந்துகொண்டு செய்த செயற்பாடுகளை அடாவடித்தனம் நிறைந்த அநாகரீகச் செயல்களாக மதிப்பிட்டாள். ஒரு சிலரோடு காலம் முழுவதும் கதைக்கக்கூடாது என மனம் கறுவிக்கொண்டது.

யாரோ முன்பின் தெரியாத ஒரு புதிய மாணவனின் கையைப் பிடித்துக்கொண்டு மைதானம் முழுக்கச் சுற்றிவருமாறு சொன்னபோது மிகவும் சங்கடப்பட்டவளை,

"அடியே புதுசாக்கலியாணம் செய்து ரெண்டு பேரும் சோடியாக றோட்டில போகிறீங்கள். அப்ப நீ எப்படிப் போவாயோ?.... அப்படி.......அப்படி..... போ."

கட்டளையிட்ட 'சீனியர்' சுமன் மீது ஆத்திரம் தான் ஏற்பட்டது. அவளின் 21வது வயது நிரம்பிய பிறந்தநாளை ஒரு குழு எப்படியோ அறிந்து மண்ணிலே "கேக்" செய்யச்சொல்லி அதனை வெட்டவைத்து உண்ண வைத்ததையும், நாள் முழுவதும் அந்த இடத்தில் நிற்க வைத்ததையும் துக்க சம்பவமாக எண்ணி சுமன் மீது மாற்றமுடியாத பகை உணர்வை வளர்த்திருந்தாள். அவன்தான் "ராகிங்"க்கு வழிகாட்டி அவன் தலைமையில் வருபவர்களின் அட்டகாசங்கள் தான் அநாகரிகமானவை சகிக்கமுடியாதவை.

பிற்பட்ட காலங்களில் அவள் கொண்ட கருத்தையே மாற்றும் படியாக 'சீனியர்'மார் நட்புறவோடு நெருங்கிவந்து பலவழிகளில் உதவினார்கள். "புறொஜெக்ட்" வேலைகளுக்கு வழிகாட்டுவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சை நேரங்களில் "குப்பி" (வகுப்பு) எடுப்பது, தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு நட்புறவோடு உதவுவது போன்றவற்றில் அந்நியோன்னியமாகப் பழகி மனதில் தனியானதொரு இடத்தையும் பிடித்துக்கொண்டனர்.

முதல்வருடமும் இறுதிவருடமும் தூர இடங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு விடுதி வசதி கிடைக்கும். இரண்டாம் மூன்றாம் வருடங்களில் வெளியே வீடுகளில் அறை எடுத்துக்கொண்டு சேர்ந்து படித்தார்கள். "லெக்சர்ஸ்"ஸிற்குப் போவது, "புறொஜெக்ட்" தயார் செய்து அளிக்கை செய்வது, பரீட்சைக்குப்படிப்பது என கற்கைநெறி அவர்களை சுறுசுறுப்பாக்கியது.

காலநகர்வு இவ்வளவு வேகமானதா என்பதை இறுதி வருடத்தை எட்டிப்பிடித்தபோது எண்ணி வியந்தனர். கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற வேறு வேறு இடங்களிலிருந்து வந்த சாலினி, அபிராமி, யசோதா, சஜித்தா நால்வருக்கும் விடுதி வசதி கிடைத்துவிட்டதால் தமக்குள்ளே ஒருவித நெருக்கமான பிணைப்பினை ஏற்படுத்திக்கொண்டாலும் "அப்பர் கிளாஸ்" "லோவர் கிளாஸ்" எடுப்பதில் இருந்த "கிளாஸ்" அடிக்கும் போட்டி மனப்பான்மை அடிமனதில் உறைந்திருப்பதை வெளியில் தெரியாதபடி சிரித்து மறைத்துக்கொண்டனர்.

சாலினி சற்று வித்தியாசமான நோக்குடன் இருந்தாள்.

"எனக்கென்று கிடைக்க இருப்பதை யாரும் தடுக்கவோ, தட்டிப் பறிக்கவோ முடியாது. எல்லாருமே 'அப்பர் கிளாஸ்' வர நினைத்தால் 'லோவருக்கும்' யாராவது இருக்கத்தானே வேண்டும். அது நானாக இருக்கிறேன்."

பதட்டமில்லாமல் பக்குவப்பட்ட பதில் சொல்லும் சாலினியைப் பார்க்க மற்றவர்களுக்கு வினோதமாகத் தெரியும். சிலவேளைகளில் தமக்குச் சாதகமாக ஏதாவது கிடைக்குமென்றால் நட்பென்றுகூடப்





பார்க்காமல் வாசியான இடத்தில் ஒட்டிக்கொள்ளும் சிலரைப் பார்க்கையில் சாலினி பொறுக்க முடியாமல் ஆத்திரப்படுவாள்.

"எமக்கென்று சில தனித்துவப் பண்புகளும் கொள்கைகளும் கட்டாயம் தேவை. அப்படியிருந்திருந்தால் இன்று நாம் ஏன் இப்படியிருக்க வேண்டும்? சிங்களப் பிள்ளைகளைப் பார்த்தாவது நாங்கள் பழக வேண்டாமா? தம் இனத்தவரோடு எவ்வளவு ஒட்டுறவாக இருக்கிறார் கள்? இக்கட்டான நிலையில் கை கொடுத்து உதவுகிறார்கள். மன நிலையறிந்து அன்பாகப் பழகுகிறார்கள். எங்கடையளிடம் இது எந்தளவிற்கு இருக்கிறது? சுயநலம் தான் மேலோங்கியுள்ளது. பொருத்தமானவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்"

எனப்பொதுவாக அவள் சத்தமிட்டுச் சொன்னாலும், யாரும் அதைக் கருத்தில் கொண்டதாகத் தெரியவில்லை.

சாலினிக்கு சிங்கள மாணவர்களின் பழக்கவழக்கத்தில் ஒருவித பிடிப்பு ஏற்பட்டாலும் பழகுவதற்குத் தடையாக ஆரம்பத்தில் மொழி தெரியாத குறைபாடு இருந்தமையினால் சிரிப்போடு நட்புறவை நிறுத்திக்கொண்டாள். காலப்போக்கில் சமாளிக்கக்கூடிய சாமர்த்தியத்தைக் கற்றுக்கொண்ட பின்னர் தான் மனம் நிம்மதி அடைந்தது. இன்பமோ துன்பமோ எதையுமே மனதிற்குள் போட்டுவிட்டு, அந்நியமான உறவுகளோடு அந்தரங்கமற்றதும் இயந்திரத் தனமானதுமான வாழ்க்கையை வாழப்பழகிக்கொண்ட சாலினிக்கு அம்மா, அப்பா, தங்கை எனத் தனது உறவுகளின் ஞாபகம் வரும் போது அவர்களைப்பார்க்க வேண்டும் என மனம் அவாவும்.

அம்மாவின் மடியில் தலை வைத்து தனது அனுபவங்களைக் கூற வேண்டும் சுய விருப்பு வெறுப்புக்களைச் சொல்ல வேண்டும் என்ற ஆதங்கம் மேலெழும்போது, இயலாமையும் வெறுமையும் மனதைச்சூழ்ந்து ஏமாற்றத்தை ஏற்படுத்தும்.

"நாட்டுச்சூழல் காரணமாகப் படிக்கின்ற காலங்களில் பிறந்த இடத்திற்கு வராமல் இருப்பதுதான் புத்திசாலித்தனம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா கூறியபோது,

"இது என்னால் எப்படி முடியும்?"

என வியந்து நின்றவள் அந்த வார்த்தைகளின் தாற்பரியத்தை அனுபவரீதியாக உணர்ந்து மனதைத் தேற்றிக்கொண்டாள். அப்படியே மூன்று வருடங்களை முழுமையாகக் கழித்து விட்டாள்.

"அக்கா நீ கொழும்பில் இருந்துவரும்போது எனக்கு அப்பிள் கொண்டு வா."

தங்கை காதிற்குள் இரகசியமாகச் சொன்ன வார்த்தைகள் அப்பிளைக் காணும் போது அவளின் முகத்தைக் கண்முன்னே கொண்டுவரும்.

கொழும்பு என்பது ஒரு சொர்க்கபுரி, அப்பிள் தோட்டங்கள் நிறைந்த இடம், சந்தோஷத்தின் மையம் இப்படியெல்லாம் தனக்குள் கற்பனை வளர்த்திருக்கிறாள் என்பது தங்கையின் பேச்சில் வெளிப்பட்டது.

"கொழும்பு வடிவான இடம் தானே. அங்கிருந்து வருபவர்களும் வடிவாகத்தான் இருக்கிறார்கள். அக்காவும் அழகாய் வருவாள்."

"அக்கா நீ ரெயினில் தானே கொழும்புக்குப் போவாய்? ரெயின் எப்படியிருக்கும்? அதற்குள் எல்லா வசதிகளும் இருக்குமா? நான் பாடப்புத்தகத்தில் தான் பார்த்தனான். பள்ளிக்கூட விடுதலைக்கு என்னை ரெயினில் கூட்டிக்கொண்டு போய் கொழும்பில் எல்லா இடமும் காட்டுவாயா?"

தலையைச்சரித்துக் கைகளால் அபிநயம் பிடித்து அவள் கேட்கும்போது அவளுக்குள் தனியொரு உலகம் தென்படும்.

"மாது! நீயும் என்னைப்போல நல்லாய் படிப்பியாம். கொழும்புக்குப் படிக்கப் போவாயாம். பிறகென்ன நீ அம்மா, அப்பா எல்லாருக்கும் கொழும்பைக் காட்டுவாயாம்."





அக்காவின் பேச்சு அவளின் ஆர்வத்தைப் பொசுக்கி விடுவதைப்போல காணப்பட, முகம் வேறுபடினும் சாதுரியமாகச் சமாளித்துக்கொள்வாள் தங்கை.

சாலினி குதுாகலமாய் இருந்த அந்த நாட்களை எண்ணி ஏங்குவாள். அவர்களின் குரலைக் கேட்பதே ஒரு தவம் மாதிரி இருந்தது. வேறு வேறு கண்டங்களில் வாழ்கின்றவர்களோடு நினைத்த மாத்திரத்தில் தொடர்புகளை இலகுவாக ஏற்படுத்திக்கொள்ளக்கூடிய தொடர்பாடல் வசதிகளைக்கொண்ட நவீன யுகத்தில் வாழ்ந்துகொண்டு, ஒரு நாட்டிற்குள்ளேயே உறவுகளுடன் பேசமுடியாத தொடர்பாடல் இடர்பாடுகளை எண்ணும்போது வேதனையாக இருக்கும்.

தமக்குரியதான இருப்புக்கள் எவையென்ற விசாரணைகளில் ஈடுபடமுடியாத சூனியத்துள் புதைந்துபோன சந்தோஷங்களை எண்ணிப்பார்க்க முடியாதபடி பயமும் பதற்றமுமாய் காலம் கரைந்தது. இன்னமும் ஒரு வருடம் தானே எனத் தனக்குத்தானே சமாதானம் சொல்லி பொறுமையைக் கடைப்பிடித்தவளுக்கு அன்று நடந்த சம்பவம் பேரதிர்ச்சியையும் மனஅழுத்தத்தையும் ஏற்படுத்தி விட்டது.

அன்று பத்து மணிக்குத்தான் விரிவுரை. எல்லோரும் ஆறுதலாகப் போவோம் எனத் தீர்மானித்திருந்தனர். உறக்கம் கலைந்து வெகுநேரமாகியும் படுக்கையிலிருந்து எழும்ப விரும்பாது உடல் அசதி காட்டியது. கைகளை மேலும் கீழுமாய் அசைத்து சோம்பலைப் போக்கிக்கொண்டு கட்டிலில் எழும்பி இருந்த சாலினி, ஏதோ சொல்ல வாயெடுத்தபோது தான் காது செவிடு படும்படியான அந்தப் பாரிய குண்டு வெடிப்புச்சத்தம் எல்லோரையும் ஒரு கணம் திடுக்கிட வைத்தது.

மோனப்பெருவெளியில் சஞ்சரிப்பது போன்ற நிர்ச்சலனமான சூழலில் ஏகாந்த மயமான உணர்வுப்போராட்டங்களில் ஒவ்வொருவரும் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை இறுகி இருண்டுவிட்ட முகங்கள் பறைசாற்றின. சம்பவம் மிகவும் அண்மையில் நிகழ்ந்திருக்கிறது. அது எங்கே என்பதை அறியும் ஆவலில் ஒருவரையொருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துக்கொண்டார்களே தவிர வார்த்தைகள் எதுவும் வெளிவர வில்லை.

அவர்கள் நால்வரின் பக்கமாக வந்த சிங்கள மாணவிகளின் முகங்களில் மரணபீதி அப்பிக்கிடந்தது. குற்றவாளிகள் நீங்கள் தான் எனச்சுட்டுவது போல குத்திக்குதறும் மட்டமான பார்வையால் சுட்டெரித்துக்கொண்டு, அவர்களைக் கடந்து சென்ற மாணவிகளையே வெறித்துப் பார்த்தபடி நின்ற சாலினிக்கு ஏனோ உடம்பு பதறத் தெடங்கியது.

'இன்று ஏதோ நடக்கப்போகிறது' என உள்மனம் அச்சுறுத்தியது. 'ஐடென்ரி'யை எடுத்துக் கையிலே வைத்துக்கொண்டாள். பிறந்த இடத்தின் பெருமை இப்படித் தேசத்துரோகியைப் போலக் கூனிக்குறுக வைத்து விடுகிறதே. அதுமட்டுமன்றி எத்தனை சிக்கலுக்குள் மாட்டி விட்டு வேடிக்கை பார்க்கிறது. எமக்கு மட்டும் ஏன் இப்படி நிலை? இந்த 'ஐடென்ரி'யை கிழித்து எறிந்து விடலாமா? என்று கூட எண்ணத்தோன்றும்.

'நீ மட்டுமா? நாங்களும் துணைக்கு இருக்கிறோம் பயப்படாதே' என்பது போல மற்றைய மூவரும் சாலினியைப் பார்த்தார்கள். இனம், மதம், மொழி பேதங்களற்ற பயணித்தலில் காலையில் பூத்த புது மலர்களாய் மாணவிகள், இளைஞர்கள், விரிவுரையாளர்கள், வேலையாட்கள் .போன்ற பலதரப்பட்டோரும் வந்திருப்பார்கள், யாருக்குத்தான் உயிர் மீது ஆசையில்லை? யார் யாரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்குமோ? ஐயோ! கடவுளே என மனம் பேதலித்தபடி இருந்தவர்களுக்கு 'கம்பஸ்'ஸைத் தாண்டிப்போன பஸ் தான் விபத்துக்குள்ளானது என்பதை அறிந்தபோது சற்று நிம்மதியாக இருந்தது.

பல்கலைக்கழகம் முழுவதும் காவல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது மட்டுமன்றி யாரும் உள்ளே வரவோ வெளியே போகவோ முடியாதபடி தடைவிதிக்கப்பட்டது. குற்றவாளி உள்ளே இருப்பதாக அவர்களின் முடிவு இருந்திருக்க வேண்டும். தமிழ்





மாணவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்கள். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் போட்ட முடிச்சாய் அர்த்தமற்ற கேள்விக்கணைகள் ஊசி முனைகளாய்க் குத்திக் காயப்படுத்தின.

கையும் களவுமாய்ப் பிடிக்கப்பட்ட குற்றவாளிகளைப் போல நால்வரும் விடுதியிலிருந்து அழைத்துவரப்பட்டபோது, வேடிக்கை பார்த்து நின்ற பொதுமக்களின் அசிங்கப்பார்வைகள், வசவுமொழிகள், கூச்சல்கள் இத்தனையும் சகித்துக் கொண்டு வாகனத்தில் ஏற்றப்பட்ட போது, உடலிலிருந்து ஒரு துணிகூட இல்லாமல் கழன்று விட்டது போன்ற கூச்ச உணர்வில் கூனிக்குறுகிப்போன சாலினிக்கு தலைக்குள் ஏதோ சுழல, கண்கள் இருண்டு கொண்டு வந்து மயங்கி விழுந்தாள்.

அநாதரவான நிலையில், அந்நிய இடத்தில் வயது வந்த பெண் பிள்ளைகளைக் குற்றவாளிகளாய் இராணுவத்தினர் கொண்டு போவதை எமது சமூகம் ஏற்றுக் கொள்ளுமா? என எண்ணியபோது யசோவுக்குத் தொண்டைக்குள் ஏதோ அடைத்துக்கொண்டது. ஊர்ப் பெடியள் பார்த்தான், சிரித்தான் என்றாலே வரிந்துகட்டி மல்லுக்குப் போகும் பெற்றோர் இதைத் தாங்கிக்கொள்ளமாட்டார்கள் என்பது தெரியும்.

விசாரணைகள் முடிந்து எல்லாம் வழமைக்குத் திரும்பி விட்டன. விரிவுரைகள் தொடங்கி விட்டதால் சாலினியை விரிவுரைகளுக்கு வரும்படி மாணவிகள், நண்பர்கள் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

"இறுதி வருடம் ஏன் வீணாக்குகிறாய்? விரிவுரைகளுக்குப் போ சாலி."

சித்தியின் வற்புறுத்தலை மீறமுடியாமல் அவள் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தாள். அன்றைய நிகழ்வுகள் கண்முன்னே விரிய.... திட்டுக்களும், கூச்சல்களும் காதுகளில் இரும்பை உருக்கி வார்த்தது போல வலிக்க..... தன்னைத்தானே தேற்றிக்கொண்டு முன்னேறினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு 'பார்சலை'ப் பிரித்து ஒன்றாக இருந்து சாப்பிட்ட தோழிகள், இரவிரவாகப் பகிடிகள் சொல்லிச் சிரித்து ஒன்றாகவே உறங்கிய இவர்கள், "சாலி மேக்க அப்பே கெதர பொலஸ்" (சாலி இது எங்கள் வீட்டுப் பலாக்காய்) "மேக்க அப்பே கொண்ட கவும்" (இது எங்களுடைய கொண்டைப் பலகாரம்) என ஆசையாகப் பகிர்ந்துண்டு மகிழ்ந்த சத்துரங்கனி, இமேசி, நதீஸானி எல்லோருமே பார்த்தும் பார்க்காதவர்களாய் விரோதத்தனமான பார்வையை வீசிவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டு போகிறார்களே. ஏன்?.....ஏன்? விசவிதை மனதிற்குள் புதைந்து கிடந்ததா? இனிமேல் பழைய மாதிரிப் பழகமாட்டார்களா?

அவர்கள் தன்னைக் கடந்து போய் நீண்ட நேரமாகியும் விடை காணமுடியாத வினாக்களுடன் போராடியபடி, அவர்கள் போன திசையில் இருந்து பார்வையை மீட்டெடுக்காது ஏக்கத்தோடு நின்றவளுக்கு உடல் எல்லாம் குளிர்ந்து முகம் வியர்த்து மயங்கி விழப்போக, யசோ அணைத்துக்கொண்டாள்.

"நடந்த நிகழ்வுகள் மனதைப் பாதித்துவிட்டன. அவவிற்கு தேவையானது ஒரு மாற்றம், அது இங்கே கிடைக்காது. வீட்டுக்கு அனுப்பிவிடுங்கள். அம்மா, அப்பா, உறவுகள் என அந்தச் சூழல் மனதை மாற்றும்."

வைத்தியரின் ஆலோசனையைக் கேட்ட தோழிகளுக்கு அவளின் படிப்பைப் பற்றிய கவலை மேலிட்டது. அவளைப் பழைய நிலைக்குக் கொண்டுவர எடுத்த முயற்சிகள் எதுவும் பயன் தராத நிலையில் அவள் ஊருக்குப் போய் வருவதே சரி என முடிவெடுத்தார்கள்.

"சாலி நீ ஊருக்குப் போய்விட்டு வா. படிப்புத் தொடர்பான உதவிகளை நாங்கள் செய்து வைக்கின்றோம். நீ பிறகு வந்து தொடரலாம்." யசோ சொன்னதை எதிர்த்தாள் சாலினி.





"யார் இனி இங்கே வருவது? நான் திரும்பி வரமாட்டேன்." சாலினியின் பதிலில் உறுதி தெரிந்தது.

வீட்டுக்குப் போவது மட்டும் தான் அவளது குறிக்கோளாக இருந்தது.

தனது உடுப்புக்களை எடுத்து அடுக்கிக் கொண்டிருந்தவளின் கண்களில் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைத்திருந்த டயறி கண்ணில் தட்டுப்பட்டது. அதற்குள் இருந்த சித்தியின் 'போட்டோ'வை வெளியே எடுத்தாள். அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். இப்படி ஒரு 'போட்டோ'வை எடுக்க வேண்டும் என்பதற்காகவே கனவுகளையும், கற்பனைகளையும் வளர்த்து, அதற்காகவே வாழ்ந்து, ஒரு நொடியில் நடந்த நிகழ்வுகளால் எல்லாமே வெறுத்துப் போக வேண்டிய நிலை ஏற்பட்டதற்கு வருந்தினாள். எனக்கு மட்டுமல்ல, என்னைப் போன்ற பலருக்கும் இப்படி ஏதாவது நடந்திருக்கலாம். இதனால் திடீர் திருப்பங்கள் தான் மிஞ்சும்.

"சித்தி! இந்த 'போட்டோ'வை உங்கள் அல்பத்தில் போட்டு வையுங்கோ".

சித்தியிடம் கொடுத்துவிட்டு 'மொபைல்'ஐ எடுத்து யசோவுடன் தொடர்பை ஏற்படுத்தினாள். சாலி மீண்டும் படிப்பைத் தொடர வருவதற்காக மனம் மாறிவிட்டாளோ என்ற நப்பாசையில் மறுபக்கத்தில்,

"ஹலோ என்ன சாலி"

உற்சாகத்தோடு யசோவின் குரல் கேட்டது.

"யசோ. நான் இனி வரமாட்டன். நீ இங்கை வரேக்க பத்து அப்பிளும் பத்து 'ஒறேஞ்'சும் வாங்கிக்கொண்டு வா"

யசோ அவளின் வேண்டுதலைக் கேட்டு சுருதி குறைந்தவளாய் தொடர்பைத் துண்டித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள்

அதை எப்படி மறக்க முடியும்? ஒவ்வொரு வருடமும் மாதக் கலண்டரில் அன்றைய திகதி கண்களை உறுத்தும். நெஞ்சம் சுமையாகக் கனக்கும்.

அதே நாளில் பழம், பூக்கள், பட்டுச்சேலைத் தட்டோடு அவர்கள் முன்னே நிற்க, வந்தவர்களில் மிடுக்கான தோற்றத்தோடு நின்றவர் அவளை விழுங்கி விடுவதைப் போல பார்த்துக்கொண்டிருக்க, அவளால் எதுவித மெய்ப்பாட்டையும் காட்ட முடியாது செயலற்றுப் போயிருந்தாள். மௌனமாக, குனிந்த தலை நிமிராமல் நின்ற பாரதியின் அருகே வந்த தங்கை நர்மதா எதனையோ அவளுக்குக் கொடுப்பதனைப் போல சுரீர் என அவளைக் கிள்ளிவிட்டுக் குசினிப் பக்கமாகப் போனாள்.

'மாடு மாடு.... இந்த நேரத்தில் போய் இப்படி நிக்குதே! எத்தனை தரம் எச்சரிக்கையாக இருக்கும்படி சொல்லிக்கொடுத்தும் அதை அவள் பின்பற்றவில்லையே!!', எங்கே பாரதி அழுது தொலைத்து விடுவாளோ என்ற பயம் தாயையும் வாட்டியது.

இந்தக் காலத்தில் எவரும் இவளைப் பார்த்து அடக்கமாக வளர்ந்த பிள்ளை என முத்திரை குத்த மாட்டார்கள். பிள்ளை ஒரு மாதிரி என்று யாராவது சொல்லிவிட்டால் என்ன செய்வது? அதுவே ஒரு பெருங் கேள்விக்குறியாக முன்வந்தது.

இந்த நாளில் பெண்பார்க்க வரவேண்டாம் என்று ஒரேயடியாகச் சொல்லியிருக்கலாம். அவர்களும் அதனை ஏற்றுக்கொள்ளவும்





வேண்டுமே. நவம்பர் 7 ஆம் திகதி. பாரதியின் உயிரக்கு உயிரான சித்தி இந்த உலகத்தை விட்டுப் போன நாள். சரியாக இரண்டு வருடம் இருக்கும்.

எத்தனையோ பெண்பார்க்கும் படலங்கள் நடந்து முடிந்துவிட்டன. 'அவர்கள் வாறார்கள் .......' என ஆரவாரப்பட்டுத் தடல்புடலாக வரவேற்பில் தொடங்கி ஏதாவதொரு விடயத்தில் முரண்பாடு தோன்றும்போது அந்த அளவில் அன்றைய அச் செயற்பாடுகள் நின்றுவிடுவதும் தான் வழமையாக நடந்துவருகின்றது.

"பெடியனுக்கு நாள் நட்சத்திரத்தில் கனக்க நம்பிக்கையாக்கும். நவம்பர் 7ஆம் திகதியை பெண்பார்க்க வரத் தெரிவு செய்திருக்கிறான்........"

"அது சித்தி செத்த நாள். அன்றைக்கு அவைய வரவேண்டாம் எண்டு சொல்லுங்கோ"

பாரதி கண்கலங்கக் கூறியதைக் குடும்பத்தில் எவருமே கவனிக்கவில்லை. 'இரண்டு வருசமாச்சு. இதைப் போய் ஒரு காரணமாகச் சொல்லி வீண் புரளிகளைக் கிளப்பிவிட வேண்டாம்' என்பதே அவர்களது பொதுவான அபிப்பிராயமாக இருந்தது.

அம்மாவின் கடைசித் தங்கை தான் ரமணிச் சித்தி. அவர்களது குடும்பத்திலேயே சித்திதான் மிகவும் அழகானவள். பாரதிக்குத் தலைவாரி அழகு செய்வது, விதம் விதமாகஉடை உடுத்துவது, குளிக்க வார்த்து உணவூட்டுவது இப்படி ஒவ்வொரு வேலைகளையும் சித்தி செய்யும்போது அதில் ஒரு அழகும் ஒழுங்கும் காணப்படும். ஆனால் அம்மாவுக்கோ இவற்றையெல்லாம் செய்வதற்கான பொறுமை இருப்பதில்லை.

"சித்தி கலியாணங் கட்டி வெளிநாட்டுக்குப் போகப் போறா. நீ என்ன செய்யப் போகிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் விடமாட்டன். சித்தி நீங்கள் போமாட்டியள் தானே?"

இரன்டு கைகளாலும் சித்தியைக் கட்டிப்பிடித்தபடி பாரதி கண்கலங்குவாள்.

"இல்லைப் பாரதி. அம்மா சும்மா சொல்லுறா. நான் பிள்ளையை விட்டிட்டுப் போவேனோ?"

பாரதியின் குழந்தை உள்ளம் அதனை நம்பிவிட்டது. ஒரு மாதம் கழிந்திருக்கும். இதேபோல்தான் யார் யாரோ வந்தார்கள். மேலும் கீழுமாய் சித்தியை அளவெடுப்பது போலப் பார்த்தார்கள். சம்மதமென்று போய்விட்டார்கள். சித்தி திருமணம் செய்து வெளிநாட்டுக்குப் போகப் போகிறாவாம் என்ற உண்மையை அம்மாவிடம் கேட்டுத் தெரிந்துகொண்டாள்.

"நீ வெளிநாட்டுக்குப் போகப் போகிறாய் எண்டு பாரதிக்கு தெரிஞ்சிட்டுது. சாப்பிடாமல் போய்ப் படுத்துவிட்டாள்."

"பாரதி! பாரதி!! என்ர குஞ்செல்லே!!! இஞ்சை வா குஞ்சு. எழும்பம்மா. எழும்பிச் சாப்பிட்டு விட்டுப் படு."

"நான் வரமாட்டன் நீ போ! நீ என்ன விட்டிட்டுப் போப்போறாய் தானே? நான் எப்படிப் போனால் உனக்கென்ன?"

ஆத்திரமும் கோபமும் கலந்து வெளிப்பட்ட சொற்களில் மரியாதையும் மட்டமாகிவிட, இல்லை என மறுக்க முடியாமல், தணிந்த குரலில்,

"நான் போவிட்டு உடன வந்திடுவன்தானே. கொஞ்சக்காலம் பொறுக்கமாட்டடியே பிள்ள?"

"இல்லை நீ போவேண்டாம். போவேண்டாம்."

முதுகில் பளார் என்று அம்மா ஓங்கி அடித்தாள்.





"ஏன் அக்கா அவளை அடிக்கிறாய்?"

சித்தியின் கண்களில் கண்ணீர். அன்று முழுவதும் சித்தியும் சாப்பிடவில்லை. பாரதிக்கு அடித்தது பிழை என்று விவாதித்து உண்ணாவிரதம் இருந்துகொண்டாள்.

சித்தியின் பிரிவு ஆரம்பத்தில் வேதனையைத் தந்தாலும், போகப்போகத் தனது வேலைகளைத் தானே செய்துகொள்ளவேண்டும் என்ற தைரியம் ஏற்பட்டது. பத்து வருடங்கள் நேற்று மாதிரியாகக் கழிந்த வேகமே தெரியாமல் நிறைய விடயங்கள் நடந்தேறி விட்டன.

"பாரதி! உனக்கு ஒரு மாப்பிளை பார்த்திருக்கிறேன். நீ இங்கே வாறியா?"

"சீ .. வெளிநாட்டுக்கா? நான் வரமாட்டன். ஆயிரம் வசதிகள் உங்க இருந்தாலும் எங்கட நாட்டைப்போல வருமா?"

"நீ யாரையாவது பார்த்து வைச்சிருக்கிறியோ? அல்லது நான் உனக்கு மாப்பிளை பாக்கட்டுமோ?"

"நான் ஒண்டும் பாக்கேல்ல. நீங்கள் உருப்படியாய்த் தெரிவு செய்தால் எனக்கு ஓகே."

திடீரென ஒருநாள் சித்தி வெளிநாட்டிலிருந்து வருவதாகக் கேள்விப்பட்ட பாரதிக்குத் தலைகால் புரியாத சந்தோஷம் ஏற்பட்டது. விமான நிலையத்தில் சித்தியின் வரவை எதிர்பார்த்து எல்லோருக்கும் முன்னே நின்றவள் பாரதிதான்.

'என்ன மெலிந்துவிட்டாய்? வெளிநாட்டுக்குப் போவதற்குமுன் ஏதாவது யோசனையோ?' என ஒருநாள் யாரோ கேட்டுவிட்டார்கள் என்பதற்காக வீட்டுக்கு வந்து நாள்முழுக்க அழுத சித்தி, நல்ல தசைப்பிடிப்பாய், இன்னமும் அதிக வெள்ளையாய், அப்பிள்கள் போல கன்னங்கள் சிவந்து பளபளப்பாய் ....... நாகரீக உடையில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தப்பாவுடனும், மூன்று பிள்ளைகளுடனும் நடந்து வருவதனை ஆர்வத்துடன் பார்த்துக்கொண்டிருந்த பாரதி, அவர்களை நோக்கி ஓடிப்போய்ச் சித்தியைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

பிரிந்தவர்கள் மீண்டும் கூடிய நிலையில் நிலவிய மௌனத்தினை சித்தப்பா கலைத்தார்.

“சரி சரி. வீட்டுக்குப் போய் மீதியை நடத்துங்கோ.......”

சித்தப்பாவின் கட்டளைக்குப் பணிந்தவள் போல பாரதியை அணைத்தபடி நடந்த சித்தி கண்களைத் துடைத்துக்கொண்டாள்.

“ஏன் அம்மா அழுகிறீங்க? ... ஏன் அக்கா நீங்களும் அழுகிறீங்கள்? ஏன் சொல்லுங்களேன் ..”

சித்தியின் மூத்த மகளது கேள்விக்கு வீட்டுக்கு வந்து சேரும் வரை எவருமே பதில் சொல்லவில்லை.

சித்தியோடு அந்த ஒரு மாதமும் கழித்த பொழுதுகள் நிறைவானவையாய் மனதில் நிலைத்துக் கொள்ள, மறுபடியும் அடுத்த வருடம் வருவதாக உறுதியளித்துவிட்டுப் போய்விட்டாள்.

பாரதியின் நெருங்கிய தோழி பவித்திராவுக்கு அடுத்த மாதம் நவம்பர் 6ம் திகதி திருமணம் நடக்கவிருந்தது. அதற்காக இப்போதிருந்தே என்ன உடுப்புப் போடுவது? எப்படிப் போவது? எனத் திட்டமிடத் தொடங்கி விட்டாள்.

அன்றைய தினம் உறவினர் ஒருவர் வீட்டுத் திருமணத்திற்கு இரண்டு பேரும் போகவேண்டுமே என அம்மா அவதிப்பட்டுக் கொண்டாள். பாரதி, புதிதாகத் தைத்து வைத்திருந்த ‘பிளவுஸ்’ சரியாக இருக்கிறதா எனப் போட்டு அழகு பார்த்துக்கொண்டிருந்த போதுதான் தொலைபேசியில் அந்தச் செய்தி வந்திருக்க வேண்டும். ஐயோ! .... என்ற அம்மாவின் அலறலைக் கேட்டு,





“என்னம்மா? என்ன நடந்தது? என்னப்பா? என்னண்டு சொல்லுங்களேன்....?”

“சித்தி ..... சித்தி செத்துப்போனாவாம்... ஐயோ! .....”

“என்ன? சித்தியோ? ஏன் நல்லாய்த் தானே இருந்தவ. என்ன நடந்தது?”

பாரதி கை கால் பதறி உடல் வியர்த்து மயங்கி விழுந்தாள்.

“இதாலதான் பாரதிக்கு சொல்லவேண்டாம் எண்டு சொன்னனான். அவள் தாங்கமாட்டாள்.”

துக்கம் விசாரிக்க வந்தவர்களுக்கு அப்பா விளக்கம் சொன்னார்.

“கொஞ்ச நாளாய் நித்திரையில்லையாம். சாப்பாட்டிலும் விருப்பமில்லையாம். உடம்பெல்லாம் நெருப்பாய் எரியுது எண்டு அழுதிருக்கிறாள்.”

“ஏன் இங்க கூப்பிடுவிச்சு வைத்தியம் செய்திருக்கலாமே. எவ்வளவு நவீன வைத்திய முறைகள் வந்திருக்கு. அநியாயமாகச் சாக விட்டுவிட்டீங்களே.”

வந்தவர்கள் ஆதங்கப்பட்டபோது, அம்மா அப்படிச் செய்ய எடுத்த முயற்சிகளுக்குச் சித்தப்பா சம்மதிக்க மறுத்துவிட்டார் என்பதனைக் கேள்விப்பட்டபோது அவர் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவளுக்கு. சித்தப்பா தொலைபேசியில், ‘பாரதி சித்தி போயிட்டாள். எங்களை விட்டிட்டுப் போய்விட்டாள்’ என அழுதபோது,

“நீங்கள் சித்தியை அம்மா கூப்பிடேக்கை இஞ்சை அனுப்பியிருந்தால் இப்படி நடந்திருக்குமே? சித்தி வருத்தக்காரி மாதிரியே இருந்தவ. நான் இப்படி நடக்கும் எண்டு நினைக்கேல்ல. அம்மா இங்க நவலோகா ‘டொக்ட’ரிடம் போய்க் கேட்டவ. அவர் நோயாளி வந்தால்தானே ஆளைப் பார்த்து வைத்தியம் செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளியைக் காணாமல் வைத்தியம் செய்ய முடியாது. இந்த மாதிரி நோய்க்கு ஒரு கிழமை வைத்தியம் செய்தாலே பூரண சுகம் வரும் எண்டு சொன்னவராம். அம்மா சித்தியை இங்க அனுப்பச் சொல்லிக் கெஞ்சிக் கேட்டும் நீங்கள் தானே விடேல்ல.”

“ஆர் இப்பிடி நடக்குமெண்டு கண்டது. என்ர வேலை, பிள்ளையளின்ர படிப்பு எல்லாத்தையும் யோசிச்சுத்தான் இங்கையுள்ள ‘டொக்டர்’ரிட்ட காட்டி மருந்து எடுத்தனாங்கள். அவை தந்த மருந்துக்கு சுகம் வரேல்ல எண்டுதான். சொன்னவ.........”

“மருந்துக்கு சுகம் வரேல்ல எண்டு பேசாமல இருந்தனீங்களே? வருத்தக்காரியை தனிய விட்டிட்டு நீங்கள் வேலைக்குப் போயிருக்கிறீங்க. அவவிட்டயே எல்லா மருந்துகளையுமே கொடுத்திருக்கிறீங்க. அவ எல்லா மருந்துகளையும் ஒரேயடியா போட்டிருக்கிறா. இப்படி அநியாயமாய் சித்திய .......”

“அநியாயமாய் சித்திய நான்தான் சாகவைச்சு விட்டேன். சொல்லம்மா. சொல்ல வந்ததைச் சொல்லு. நான் கொலைகாரன் தான்........”

மறுபுறத்தில் சித்தப்பாவின் அழுகை ஓயவில்லை.

மற்றவர்களுக்கு அறிவுரைகள் சொல்லி, அவர்களது துன்பங்களின்போது முன்நின்று உதவிகள் செய்யும் சித்தி முட்டாள் தனமாகத் தெரிந்து கொண்டோ அல்லது தெரியாமலோ அளவுக்கு அதிகமான மாத்திரைகளை உட்கொண்டதால் மரணமானது அக் குடும்பத்தவர்கள் அனைவரையும் பாதித்து விட்டிருந்தது.

ஒரு வருடம் வரைக்கும் எல்லோருமே கோயில்களுக்கோ கொண்டாட்டங்களுக்கோ போகவில்லை. நவம்பர் 7 ஆம் திகதி தான் சித்தி இறந்த நாள். அன்று ஆளுக்காள் அழுதுகொண்டு, சாப்பிடாமல், மூலைக்கொருவராக நாள் முழுக்க இருந்தது நேற்று மாதிரி இருக்க, மறுபடியும் அதே தினம் இயந்திர கதியில் வந்துவிட்டது.





“உன்னை என் நெஞ்சில் போட்டுத்தான் தூங்க வைப்பேன். உனக்குக் கோபம் வந்தால் என்ர மூக்கைத்தான் விழுந்து கடிப்பாய். நான் எண்டபடியால பொறுத்துக்கொண்டிருப்பேன். ஒருநாள் அப்படி உனது அம்மாவையும் மூக்கில் கடிச்சுவிட்டாய். அம்மா விரலால் உன்ர வாயில சுண்டி விட்டா. அன்று வீரிட்டு அழுத நீ அதன்பிறகு மூக்கைக் கடிக்கிற பழக்கத்தையே விட்டுவிட்டாய். ஆனால் எனக்கு மட்டும் எத்தனை தரம் கடித்திருப்பாய்?”

“அப்பிடியே? அப்ப நீ தான் எனக்கு அம்மா”

“அப்படிச் சொல்லக்கூடாது. நான் உன்ர சித்தியெல்லோ! அம்மா பாக்கிற மாப்பிள்ளையைத்தான் நீ கட்டவேணும். அம்மா நல்லதைத் தானே தன்ர பிள்ளைக்குச் செய்வா.”

அப்படிச் சொன்ன சித்திக்குச் செய்யும் நன்றிக்கடன் இதுதான் என்பது போல இன்றைய நிகழ்வு கைகூடி இருக்கிறது.

“அம்மா என்னால் முடியாது. இந்த நாளில் நான் அலங்கரித்து, சந்தோஷமாகப் பேசிச் சிரிக்க முடியாதெண்டு தெரியாதே?”

அவளது இந்தப் பிடிவாதம் அர்த்தமற்றது என்பதற்கு வீட்டிலுள்ளோர் பல காரணங்களை முன்வைத்தனர்.

“நல்ல மாப்பிளை. நல்ல குடும்பம். எல்லாம் பொருந்தி வந்திருக்கிறது. உனக்கோ செவ்வாய் தோஷம். இப்படி அதையும் இதையும் பார்த்து வாழ்க்கையைக் கோட்டை விடாதே. எங்களுக்கும் கவலைதான். அதை ஒருபக்கம் வைத்துவிட்டு நடக்க வேண்டியதைப் பார். அம்மா கூட தனது தங்கையின் இழப்பினையே மறந்து தன் பிள்ளைக்கு நல் வாழ்க்கையினை அமைத்துத் தர முயற்சி செய்கிறா. நீ ஏலாதெண்டு சொல்லாதை.”

‘சித்தி என்னை மன்னித்துவிடு. என்னால் துக்கத்தை எப்படி மறைக்க முடியுமோ தெரியாது. இந்த நாளைத் தவிர்த்திருக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே? என்னவோ உயிர் போகிற காரியம் மாதிரி எல்லாரும் அவசரப் படுகிறார்கள்.' அவள் சித்தியிடம் மானசீகமாக வேண்டிக்கொள்வதன் மூலம் மனதில் எழுந்த கவலையைச் சற்றே தணித்துக் கொண்டாள்.

"அக்கா ஏன் இப்படி முகத்தைத் தொங்கப்போட்டுக்கொண்டு இருக்கிறாய்? வழக்கம்போல இரு. சித்தியை இப்போதைக்கு மறந்துவிடு. நீ முகத்தை உம் என்று வைத்திருந்தால் வீட்டுக்கு வருபவர்கள் எந்த முகத்தைப் பார்ப்பது? வருபவர்களை வரவேற்றுச் சிரிச்சுப் பேசு. அழுது தொலைத்துவிடாதே. பைத்தியமோ எண்டுதான் நினைப்பினம். இல்லாட்டி காதல் கீதல் தோல்வி எண்டும் நினைப்பினம்."

கடைக்குட்டி நர்மதா அவளைப் பயங்காட்டி வைத்திருந்தாள். அக்கா சமாளித்து இயல்பாக நடந்துகொள்வாள் என்று நம்பியிருந்த வளின் நம்பிக்கையில் ஆட்டங்காண்பதைப் போல காணப்பட்டதால் தான் அவளைக் கிள்ளிவிட்டு வந்தாள்.

"இவர் தான் எங்கள் மூத்த மகன். பீ.எஸ்.ஸி படிச்சிருக்கிறார். ஒரு கம்பனியில வேலைசெய்யிறார். ...."

மாப்பிள்ளையின் தாயாக இருக்கவேண்டும். அறிமுகப் படலத்தில் இறங்கியிருந்தார். அம்மாவும் பதிலுக்கு,

"பாரதி! இங்க வாம்மா. இவளும் பீ.எஸ்.ஸி படிச்சுவிட்டு இருக்கிறாள். இன்னும் வேலை ஒன்றும் சரிப்பட்டு வரரேல்லை."

தாயின் அழைப்புக்குச் சற்று முன்னால் வந்த பாரதி, திடீரென முகத்தை நிமிர்த்திப் பார்த்தாள். பின் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு அழத் தொடங்கினாள்.

"ஏன் பிள்ளைக்கு இந்தக் கலியாணத்தில விருப்பமில்லையா? என்ன பிரச்சினை? எதுவானாலும் சொல்லுங்கோ."





"பிரச்சினை ஒண்டும் இல்லை ...."

"நீங்கள் சமாளிக்கப் பாக்கிறீங்கள். இந்தக் காலத்துப் பிள்ளையள் எங்களை மாதிரி இல்லை. நாங்கள் அவையின்ர விருப்பங்களைக் கேட்டுத்தான் எதையும் செய்யவேணும். நாங்கள் அப்பா, அம்மாவின் பேச்சைக் கேட்டு தலையாட்டிப் பொம்மையள் மாதிரி வாழ்ந்தது போல இவையும் இருப்பினம் எண்டு நீங்கள் நினைக்கிறது மிகவும் தவறு. அதால நாங்களும் சிரமப்பட்டு நீங்களும் சிரமப்பட்டதுதான் கண்ட மிச்சம்........"

அவர்களுடன் வந்த பெரியவர் ஒருவரது பிரசங்கம் இது. விருப்பமில்லா வீட்டில் இருப்பதும் வீண் என்ற பாவனையில் மாப்பிள்ளை இருக்கையை விட்டு எழுந்துவிட,

"சரி நாங்கள் போகிறம்..."

அவர்கள் திரும்பிச் சென்றனர்.

"நீ எவ்வளவு சொல்லியும் கேக்கவில்லை. உன்னாலே நீ கெட்டாய். உப்பிடியே இரு."

நர்மதா ஆத்திரத்தோடு கூறிவிட்டு உள்ளே சென்றாள்.

'சித்தி யார் என்ன சொன்னாலும் என்னால் இந்த நாளில் எப்படி சந்தோசமாக இருக்கமுடியும்? சித்தி இதைவிட என்னால் உனக்கு என்ன செய்ய முடியும்? உன் இழப்பைக் கேள்விப்பட்ட அந்தக் கணத்தில் ஏற்பட்ட வலியும் வேதனையும் நிரந்தரமாக என் நெஞ்சில் தங்கிவிட்டபோது, உன் நினைவு நாளான இன்று அதனைச் சந்தோசமானதாக மாற்றிக்கொள்ள முடியவில்லையே'.

நினைத்த அவளது கண்கள் நவம்பர் 7 ஆம் திகதி எனக் காட்டிய நாட்காட்டியில் நிலைத்து நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை

கட்டுடைந்துபோன அந்தக் கிணற்றில் மெதுமெதுவாகக் காலை முன்னே வைத்து வாளியை நிதானமாகக் கிணற்றுள் இறக்கினாள் தங்கம்மா. தவறி விழுந்தாலும் அப்படியே செத்துக் கிடக்க வேண்டியதுதான். தேடிப்பார்க்கக் கூட ஆளில்லாத அனாதையாய் இவ்வளவு காலத்தையும் போக்கிவிட்டதை அவள் எண்ணிப் பார்த்தாள்.

எண்பது வயது வரைக்கும் எவரது உதவியும் இல்லாது தனிமரமாக வாழ்ந்துவிட்ட தங்கம்மா, இப்போது கொஞ்சக் காலமாக தனியாக வாழும் தைரியத்தினை இழந்திருந்தாள். புலன்களின் செயற்பாடுகள் கூட அவள் எண்ணத்தோடு ஒத்துப் போவதாகக் காணப்படவில்லை.

“துரைசிங்கம் ! அவர்தான் எனக்குப் புருஷனாக நிச்சயிக்கப்பட்டவர்........!!”

“ஒரு திங்கட்கிழமை கலியாணம் நடந்தது ...........”

“ஒரு சனிக்கிழமை கடைசியாய் வீட்டுக்கு வந்தவர். நாற்பத்தைந்து நாடகள் தான் அவரோட வாழ்ந்தனான்.”

கிழவி கணக்குப் பிசகாமல் இன்றுவரையும் அதே பல்லவியைப் பாடிக்கொண்டேயிருக்கிறது. அயலிலுள்ள இளவட்டங்கள் தங்கம்மா ஆச்சியைச் சூழ்ந்து கொள்வர். ஆச்சியும் சுவாரஸ்யமாகத் தனது அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கு அத்தகைய சந்தர்ப்பங்கள் தான் வசதியாக வாய்ப்பதுண்டு. ‘ஆச்சியின்ர பசுமை நிறைந்த





நினைவுகள் நாற்பத்தைந்து நாட்கள் மட்டும். அதைக்கூட இவ்வளவு பத்திரமாக நினைச்சுக் கொண்டிருக்கிறியளே?’ என்று கிண்டல் செய்பவருக்கும் ஆச்சி விட்டுக்கொடுப்பதில்லை.

“நான் வேற எதை மோனை பத்திரப்படுத்தி வைச்சிருக்க?”

ஆச்சி தொலை தூரத்தை வெறித்துப் பார்த்தபடி பெருமூச்சு விடுவாள்.

“எனக்குக் குடும்பமா? பிள்ளை குட்டியா? வீடு வாசலா? எதுவுமே எனக்கென்றில்லை. அந்த நாற்பத்தைந்து நாள் வாழ்க்கையையும் விட்டால் வேறு எதைத்தான் சொல்ல முடியும்.”

“ஆச்சி உங்கட அவர் உங்களோட அன்பாய் இருந்தவரே?”

கிழவி நாட்களையும் கிழமைகளையும் ஞாபகத்தில் வைத்திருப்பதால் இப்படி ஒரு எண்ணம் அவர்களுக்குத் தோன்றியிருக்கலாம்.

“பிள்ளையள்! எனக்கு அறிவு தெரிந்த காலத்தில் இருந்து அப்பாவைத் தெரியாது. சின்ன வயதிலேயே செத்துப் போனாராம். அம்மா சொன்னாள். அண்ணாவோ தம்பியோ எனக்குச் சகோதரங்களாகப் பிறக்கவில்லை. ஒரே ஒரு அக்கா. அக்காவின்ர அவர்கூட ஏதோ விபத்தில இறந்துவிட்டார். ஆம்பிளை எண்டு முதன்முதலாக எனக்குக் கிடைத்த உறவு அவர் மூலம் தான். அதைத்தான் நான் மறக்காமல் நினைச்சு வைச்சிருக்கிறன்.”

“ஆச்சி அவரின்ர பேரையும் சொல்ல மாட்டியளே?”

“சும்மா போங்கோடி சிறுக்கியள் ...”

“இஞ்சை பாருங்கடி ஆச்சியின்ர வெக்கத்த ..”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்கமோ என்னவோ. ஆச்சி கையில் கிடைக்கும் தடியை எடுத்து விரட்டுவாள். ஒருகணம்தான். மறுகணம் எல்லோரும் ஆச்சியைச் சூழ்ந்து கொள்வார்கள்.

"ஆச்சி! உங்கட அவர் அதன் பிறகு உங்களைத் தேடி ஏன் வரேல்ல?"

"நான்தான் வரவேண்டாம் எண்டு சொன்னனான். துரோகம் செய்யும் மனிசனோட வாழ முடியுமே?"

ஆச்சியின் கேள்வி நியாயமானதுதான்.

"ஆச்சி அந்தக் காலத்திலேயே முற்போக்காகச் சிந்திச்சிருக் கிறியள். இப்ப பெண்ணியம் பேசுறவை எல்லாருக்கும் ஆச்சிதான் வழிகாட்டியாய் இருந்திருக்கிறியள்."

ஆச்சியின் பரிவாரங்கள் அவளைத் தட்டிக்கொடுக்கும்போது இனம்புரியாத பெருமை அடைவாள் தங்கம்மா.

துரைசிங்கம் திருமணம் செய்வதற்கு முதலே வேறொரு பெண்ணுடன் தொடர்பு கொண்ருப்பது. ஊருக்குள் இரகசியமாகப் பேசப்பட்டபோதும் தங்கம்மா அதனை நம்பவேயில்லை.

'ஆம்பிளையள் எப்படியும் கதைக்கலாம், பேசலாம், நடக்கலாம். பெண்ணாய்ப் பிறந்தவர்கள் தான் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்' என்பதை அவள் கட்டுப்பெட்டித்தனமாக ஏற்றுக்கொண்டவள்.

தங்கம்மாவோடு இயல்பாகவே கூடப்பிறந்த கூச்ச சுபாவம், 'கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன்' என்னும் கண்முடித்தனமான பதிபக்தி இவையும் அவளைத் துரைசிங்கத்தைப் பற்றிய தேடுதல்களில் ஈடுபட விடவில்லை. அவனும் அவள் மனமறிந்து நடக்கவில்லை.

"இண்டைக்குக் கோயிலுக்குப் போவமே?"





வளைந்து நெளிந்து நிலத்தைப் பார்த்தபடி கேட்பாள்.

"எனக்கு இப்ப நேரமில்ல. அவசர வேலையிருக்கு."

"சரி பறவாயில்ல. அடுத்த வெள்ளிக் கிழமை போகலாம்."

அவனைச் சமாதானப்படுத்துவதைப் போலச் சொல்வாள்.

"இண்டைக்கு விரதம். நீங்கள் கொஞ்சம் வேளைக்கு வந்தால் சேர்ந்து சாப்பிடலாம். வர முடியுமேங்க?"

சேலைத் தலைப்பில் முடிச்சுப் போடுவதும், அதனை அவிழ்ப்பதுமாகக் கைவிரல்கள் அவசர கதியில் இயங்க அவனது பதிலை எதிர்பார்ப்பாள்.

"நீ சாப்பிடு. என்னைப் பார்த்துக்கொண்டிருக்க வேண்டாம்."

அவனது இயல்பான குணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் மாற்ற வேண்டும். உடனடியாகவே மாற்றிவிட முடியுமா? எனத் தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொள்வாள்.

காலப்போக்கில் துரைசிங்கத்தின் போக்கில் மாற்றங்கள் தெரிந்தன. அவன் ஒழுங்காகச் சாப்பிட வருவதில்லை. சிலவேளைகளில் வீட்டுக்கு இரண்டு முன்று நாட்களுக்கு ஒரு தடவையாகவும் வரத் தொடங்கினான்.

"என்ன தங்கம் உன்ர புருஷன் உவள் கண்மணி வீட்டிலதான் எந்தநேரமும் இருக்கிறார் ஏன் வீட்டுக்கு வாறதில்லையா?"

அயலவர்கள் மாறி மாறிக் கேட்கத் தொடங்கினர்.

"அதில என்ன? அவர் என்னைக் கட்ட முதலே அந்தக் குடும்பத்தோட நல்ல நெருக்கமாக பழகிவிட்டார். இப்ப திடீரெண்டு போகாமல் விட முடியுமே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் மனம் உள்ளே வெதும்பினாலும், வெளியிலே போலிக் காரணத்தினைப் பொருத்தமாகச் சொல்லுவாள்.

"தங்கம் உவள் கண்மணியும் வாழ்விழந்தவள். இப்படி ஒரு கலியாணம் கட்டின ஆம்பிளய மயக்கி வைச்சிருந்தால் நாளைக்கு உன்ர கதி என்ன? கொஞ்சம் யோசிச்சு இப்பவே வாய்விட்டுக் கேட்டு முடிவெடு."

அனைவரும் அறிவுரை சொன்னார்கள். தங்கம்மாவுக்கு எல்லோரது பேச்சுக்களையும் கேட்கும் போது தலையைச் சுற்றியது.

'எதுக்கும் அவரை நேருக்கு நேர் கேட்டுவிட வேணும். இண்டைக்கு வரட்டும். கேட்டு ஒரு முடிவுக்கு வாறன். நான் ஏன் பயப்பட வேணும்?'

மூன்று நாட்களின் பின்னர் துரைசிங்கம் வீட்டுக்கு வந்தான்.

தேநீர் கொண்டுவந்து கொடுத்தபின் ஏற்கனவே நினைத்து வைத்திருந்தபடி கேள்விகளைக் கேட்கத் தொடங்கினாள்.

"ஏன் மூண்டு நாளாய் வீட்டை வரேல்ல? எங்க போனனீங்க?"

"வேலை இருந்தது அதுதான் வர முடியேல்ல."

"அப்படி என்ன பெரிய வேலை. வீட்டுக்கு வரமுடியாத வேலை. ஊரில சனம் பலமாதிரிக் கதைக்குதுகள். அதென்ன உண்மையே?"

இந்தச் சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்தவன் போல,

"ஓம். அது உண்மைதான். நீ என்ன செய்யப் போறாய்?"

"அப்ப நான்?"

"உன்னை வேண்டாமெண்டே நான் சொன்னனான்?"

"அப்படியெண்டால் ...."





"எனக்கு ரெண்டு பேரும் வேணும்."

"என்னால அது முடியாது. வள்ளி தெய்வானை மாதிரி வழ்க்கையை பங்குபோட நான் சம்மதிக்க மாட்டன்."

"அப்ப நான் போறன்."

"தாராளமாகப் போகலாமே. ஆர் வேண்டாமெண்டது?"

அன்று போன துரைசிங்கம், போனவன் போனவன்தான். இன்றுவரை திரும்பி அவளிடம் வரவில்லை.

தங்கம்மா அன்றிலிருந்து வீட்டுக்குப் பக்கத்திலுள்ள முருகன் கோவிலைத் தஞ்சமடைந்தாள். கந்தசஷ்டி கவசம், சிவபுராணம், திருப்புகழ் ஒவ்வொன்றும் ஒழுங்கு குலையாமல் அருவி போன்று அவள் வாயிலிருந்து கொட்டும்.

கோவிற் பூசைகளின்போது பஞ்ச புராணம் பாடுவதற்கு ஐயர் தங்கம்மாவைத்தான் தேடுவார். கணீர் என்ற குரல் வளம். கேட்போர் மனம் உருகும் வண்ணம் தங்கம்மா தேவாரங்களைப் பாடுவாள்.

நெற்றியிலே வீபூதிக் குறி இழுத்து, அதன் நடுவிலே சந்தனப் பொட்டுடன் தூய்மையான வெள்ளைச் சேலையை உடுத்திப் பார்ப்பவர்களுக்கு ஒருவிதமான பக்தியை ஏற்படுத்தும் வகையில் தங்கம்மா தனது தோற்றத்தினையும் மாற்றிக்கொண்டாள்.

சிவலிங்கம். அவன்தான் அவளது அக்காவின் ஏக புத்திரன். அடிக்கடி அவளது வீட்டுக்கு வேலைக்குப் போகும் போதும் வரும் போதும் வந்து போவான்.

"குஞ்சியாச்சி! என்ன செய்யிறாயணை? சாப்பிட்டியா? செலவுக்குக் காசு வைச்சிருக்கிறியா? ஏன் இங்க தனிய இருக்கிறாய்? அங்க எங்களோட வந்திருக்கலாம் தானே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது கரிசனையைப் பார்த்து, தங்கம்மாவும் அவனிடம் நம்பிக்கையும் பாசமும் வைத்தாள்.

"நீ தானே என்னைக் கடைசி காலம் வரைக்கும் பாக்கிறனி. உன்ன விட்டா வேறு ஆர் என்னப் பாப்பினம்? நீ நல்லா இருக்க வேணும். அப்பா முருகா ...."

தங்கம்மா கடவுளை மன்றாடுவாள்.

"அப்பிடியே குஞ்சியாச்சி? இந்த வீட்ட எனக்கு எழுதித் தாவனெணை. பிறகு ஆர் ஆர் பங்கு கேட்டு வருவினமோ தெரியாது."

"அதுக்கென்ன. என்ர பிள்ளைக்கு நான் தருவன் தானே."

கிழவியிடம் சந்தர்ப்பம் பார்த்துக் கையெழுத்தும் வாங்கிக் கொண்டான்.

சிவலிங்கம் தனது வீட்டோடு தங்கம்மாவை வைத்திருப்பதாக அழைத்துப் போனான். ஒரு கிழமைக்கு மேல் அங்கு தங்கம்மாவால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

"தம்பி நான் என்ர இடத்தில போய் இருக்கப் போறன். என்னை அங்க கூட்டிக்கொண்டு போய் விட்டுவிடு."

சிவலிங்கத்தின் மனைவியினது கட்டுப்பாடுகளும் சட்டதிட்டங் களும் கிழவிக்கு ஒத்து வரவில்லை என்பதைக் காட்டிக் கொள்ளவில்லை.

சிவலிங்கம் மாதம் மாதம் தன்னால் முடிந்ததை அவளது செலவுக்காகக் கொடுப்பான். அது போதுமோ போதாதோ என்பது பற்றிய விசாரணை அங்கு இருப்பதில்லை.

அவள் தனக்குத் தேவையானவற்றை அவன் கொடுக்கும் பணத்திலிருந்து வாங்கிக் கொள்வாள். தனக்குத் தானே சமைத்துக் கொள்வாள். சில வேளைகளில் தான் ஆக்கிய கறிகளில் கொஞ்சம் பக்கத்து வீட்டுக்கு எடுத்துச் செல்வாள்.





"நான் ஆக்கிய கறியைச் சாப்பிட்டுப் பார் பிள்ளை."

அன்போடு கொண்டு வந்து தரும்போது, 'இப்படியும் ஒரு கொடையா? கிழவியால் எப்படித்தான் இப்படிச் செய்ய முடிகிறதோ? எங்களால் கூட இப்படிச் செய்ய முடியாது' எனப் பக்கத்து வீட்டுப் பெண்களே ஆச்சரியப் படுவார்கள்.

சிவலிங்கம் பணத்திலிருந்து பாசம் வரைக்கும் படிப்படியாகக் குறைத்துக் கொண்டான்.

இப்போது தங்கம்மா ஆச்சியின் நடமாட்டங்கள் வெகுவாகக் குறைவடைந்து விட்டன. சில வேளைகளில் உறவினரது வீடுகளுக்குச் சென்று கொடுப்பதை வாங்கிச் சாப்பிடுவாள். என்னதான் வயது போனாலும், இயலாமை வந்தாலும் கிழவியின் ரோசத்துக்குக் கொஞ்சமேனும் குறைவில்லை.

"ஆச்சிக்கு ஒண்டும் விளங்காது. நீ சும்மா இரணை."

யாராவது அப்படிச் சொல்லிவிட்டால் கிழவிக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்துவிடும்.

"எனக்கு எல்லாமே விளங்கும். நீங்கள் தான் நவ நாகரீக மோகத்தால தலைகீழாக நடக்கிறியள்."

கிழவியின் வாயும் சும்மா இராது. அதனால் ஆத்திரத்தோடு அங்கிருந்து எழும்பிப் போய்விட்டால், குறைந்தது ஒரு கிழமையாவது அந்த வாசலை மிதிக்காத பகிஷ்கரிப்புத் தொடரும்.

அதன் பின்னர் சிவலிங்கம் முதியோர் விடுதியில் கிழவியைச் சேர்த்துவிட்டான். இரண்டாவது நாளே கிழவி அழுது ஆர்ப்பாட்டம் செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னை என்ர வீட்டில இருந்து சாகவிடு மோனை. உன்னைக் கையெடுத்துக் கும்பிடுறன்."

கெஞ்சிக் கூத்தாடித் தனது வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டாள்.

"ஆச்சி நீ ஏனெணை வீட்ட எழுதிக் குடுத்தனி? உன்ர மகனைப் பாத்தியே? கையை விட்டிட்டான். அவனுக்கும் அவன்ர பிள்ளையள் அப்படித் தான் செய்யுங்கள்."

கிழவிக்கு அவனை யாரும் குறைசொன்னால் பிடிக்காது.

"ஏன் அவனை அப்படிச் சொல்லுறியள்? ஏதோ நேரமில்லை யாக்கும். வருவான் தானே."

சொல்பவர்களின் வாயை அடக்கிவிடுவாள்.

'கிழவிக்குப் பரிதாபம் பார்த்து நாங்கள் ஏதாவது கொடுக்கிறோம். பொருளை வாங்கினவன் கிழவியைப் பார்க்கலாம் தானே? அவனுக்குத்தான் அந்தப் பாவம் வந்து சேரும்.

பலர் கிழவிக்காகப் பரிதாபப்பட்டனர்.

கிழவிக்கு இரண்டு நாட்களாகக் காய்ச்சல் நெருப்பாக எரிந்தது. சாப்பாடும் சாப்பிடாததால் எழுந்து நடக்கவும் தென்பில்லை. முகத்தைக் கழுவிக்கொண்டு தேநீர் வைத்துக் குடிக்கும் ஆவலில் கிணற்றடிக்குச் சென்றாள்.

ஒரு வாளி தண்ணீரை அள்ளியபடி திரும்பி வந்துகொண்டிருந்த போது திடீரென தலைசுற்றி மயக்கமாக வர, வேலியோரமாக விழுந்து கிடந்தாள்.

நீண்ட நேரத்தின் பின்னர் தங்கம்மா ஆச்சியைத் தேடி வந்த பக்கத்து வீட்டு மல்லிகா, அவளைக் காணாமல் தேடியபோது, கிணற்றடி வேலியோரம் விழுந்து கிடப்பதனைக் கண்டு கத்தினாள்.





"ஐயோ! ஐயோ!! ஆச்சி விழுந்துபோனா. ஆராவது ஓடியாங்கோ! ஓடியாங்கோ."

குரல் கேட்டு பலர் வந்து கூடிவிட்டார்கள். சேர்ந்து தூக்கிக் கொண்டு போய் கட்டிலில் கிடத்தினார்கள். தண்ணீர் தெளித்தும் கிழவியின் மயக்கம் தெளியவில்லை.

"ஆச்சி பாவம். இரண்டு நாளாய்க் காணேல்லை. ஏதோ சுகமில்லாததால்தான் ஆளைக் காணேல்லை எண்டு நினைச்சனான். எங்க நினைக்கிறதுதான் வெளிக்கிடுறதுக்கு நேரமிருந்தால் தானே?"

பக்கத்து வீட்டார் தமக்குள் பேசிச் சமாதானப்பட்டுக்கொண்டனர்.

"சிவலிங்கத்துக்கு சொல்லி அனுப்புங்கோ!"

"அவனுக்கு எங்க சொல்லி அனுப்பிறது? புளியடிச் சந்தியில வாகனத்தோட அடிபட்டு ஆஸ்ப்பத்திரியில எல்லோ கிடக்கிறான். அவன் எப்பிடி வரமுடியும்?"

"பழிபாவங்கள் சும்மா விடாது பாத்தியளே."

கருத்துப் பரிமாறல்கள் தொடர்ந்தன.

பொழுது சாயத் தொடங்கியது. நாடி பிடித்துப் பார்த்த குலசேகரப் பரியாரியார் ஆக்களுக்குச் சொல்லி அனுப்பச் சொல்லி விட்டுப் போய்விட்டார்.

தங்கம்மா ஆச்சியின் நிலைமை கவலைக்கிடமானது. பெரிதாக மூச்சிழுக்கத் தொடங்கியது.

"தங்கம்மா ஆச்சி அங்கால போப்போறா. ஒண்டையும் அனுபவிக்காததால உயிர் பிரிய மாட்டுதாம். குத்துவிளக்கை ஏத்தி, சிவபுராணத்தைப் பாடுங்கோ!"

அனுபவசாலி ஒருவர் அங்கிருந்தவர்களை அவசரப்படுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமாட்டில் இருந்துகொண்டு வயதுபோன பெண்ணொருத்தி தங்கம்மா ஆச்சியின் நெற்றியில் வீபூதியைப் பூசிவிட்டு, சிவபுராணத்தைப் பாடத் தொடங்கினாள்.

"அங்க பாருங்க. ஆர் வாறதெண்டு....."

தலை, கை, கால் எங்கும் கட்டுக்களோடு சிவலிங்கம் முச்சக்கர வண்டியில் வந்து இறங்கி வீட்டுக்குள் வந்தான்.

"ஐயோ! குஞ்சியாச்சி ...."

கிழவியின் கையைப் பிடித்துக்கொண்டு சிவலிங்கம் அழுதான்.

தங்கம்மா திடீரெனக் கண்ணைத் திறந்து பார்த்தாள்.

சிவலிங்கத்தின் கையை இறுக்கிப் பிடித்தாள். நடுங்கிய வாயால் எதையோ சொல்ல முற்பட்டாள். அவ்வளவோடு கைப்பிடி தளர்ந்து கை சோர்ந்து விழுந்தது.

"குஞ்சியாச்சி எனக்காகக் காத்திருந்து, ஏதோ சொல்லத் துடிச்சு சொல்லாமலே போயிட்டா."

சிவலிங்கத்தின் இதயத்தில் பாறாங்கல்லாய் சுமை அழுத்தியது.



# மின்னல்

"ஹலோ! ... ஹலோ!! ... சொல்லுங்க ...."

மறுபுறத்தில் பேசுவது தெளிவாகக் கேட்கவில்லை. எனது 'மெபை'லில் ஏதோ பிழை வந்துவிட்டது. வருவதும் சாத்தியம் தான். நீண்ட காலப் பாவனையாலும், பல தடவைகள் தவறிக் கீழே விழுந்துவிட்டபடியாலும் அது தனது ஆயுட்காலத்தைக் குறைத்துக்கொண்ட நோயாளியைப்போல விக்கித் தக்கிக் கொண்டிருக்கிறது. அதில் தெரிந்த இலக்கம் மாமியின் 'மொபைல்' இலக்கம். அதனால் தொடர்பினைத் துண்டிக்காது மீண்டும் அழைத்தேன்.

"ஹலோ! ... ஹலோ!! ..."

"எனக்குச் சரியான வருத்தம் பிள்ள. நான் ........"

அவள் வார்த்தைகளை முடிக்க முதலே தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது. மீண்டும் தொடர்பினைப் பெறுவதற்கு பல தடவை முயன்று தோற்றுப்போனேன். சமையலறையிலிருந்து தீய்ந்த வாசைன வர, அடுப்பிலிருந்த குழம்பு நினைவுக்கு வந்து அங்கு விரைந்தேன்.

இந்தத் தொ(ல்)லைபேசி அழைப்புக்களினால் எரிந்துபோன பாத்திரங்களும், உண்ண முடியாமல் கொட்டப்பட்ட உணவுகளும் பட்டியல் போட்டுப் பார்க்கும் அளவுக்கு நீண்டுகொண்டு போவதால், இப்பொழுதெல்லாம் சற்று நிதானமாகச் செயற்படுவதற்குப் பழகிக்கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிதா சனிக்கிழமை சிங்களதமிழ் எழுத்தாளர் ஒன்றுகூடல் நிகழ்வு ஞாபகம் இருக்கிறதா? கட்டாயம் வருவீர் தானே? குறிப்பிட்ட ஒருசிலருக்குத்தான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வராமல் விட்டுவிடுவீரோ என்று அறியத்தான் எடுத்தனான்."

'கட்டாயம் வரவேண்டும்' என்ற கட்டளை மறைபொருளாய் தொனிக்க, நேற்றைய தினம் பாரதி சிவராமன் சொன்னது அதிகாலையில் உள்நின்று இயக்கும் ஊக்குசக்தியாக இயக்கிவிட சுறுசுறுப்பாய் சமையல் வேலைகளை முடித்துக்கொண்டு புறப்படுவதற்குத் தயாரான போது தான் அந்த அழைப்பு வந்தது.

அதனால் ஏற்பட்ட குழப்பத்தில் தடுமாறிய வேளையில்,

"அம்மா இன்றைக்குமா வெளியில போறீங்க? நீங்க எங்களோட வீட்டில ஆறுதலாய் இருக்கவே மாட்டீங்களா? கிழமை நாட்களில வேலை. சனி ஞாயிறு என்றால் இப்படி ஏதாவது வரும்."

கண்ணைக் கசக்கியபடி நித்திரை மயக்கத்திலும் கடைசி மகன் மேனன் தனது கவலையை வெளிப்படுத்திக்கொண்டு முன்னால் வந்து நின்றான். என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் மௌனமாய் அவனை அணைத்தபடி நேரத்தைப் பார்க்கிறேன்.

"என்னப்பா!....."

எனது அவசரத்தை வெளிக்காட்டாமல் மெதுவாக அவரை அழைக்கிறேன். எனது அழைப்பின் அர்த்தத்தைப் புரிந்துகொண்டார் எனது கணவர்.

"ஐந்து நிமிடங்கள் இன்னும் இருக்கு வாரும் போயிடலாம். மேனன்! முகத்தைக் கழுவிப்போட்டு 'ரீ' யைக் குடித்துச் சாப்பிட்டு விட்டு கணக்குகளை செய்யும். 'ரீவி' போடுறேல்ல. 'கொம்பியூட்டர்' தொடக்கூடாது அப்பா இப்ப வருவன்."





கதவைச் சாத்திக்கொண்டு இருவரும் புறப்பட்டோம். சனி ஞாயிற்றுக் கிழமைகளிலாவது வாய்க்கு ருசியாகச் சமைத்து பிள்ளைகளோடு சேர்ந்து சாப்பிட்டு மனம் விட்டுக் கதைச்சுச் சிரித்து மகிழ்வதற்காக ஒதுக்கிக்கொள்ள நினைப்பதுண்டு இப்படி ஏதாவது எதிர்பாராமல் வந்து இறுகிக் கொள்ளும்போது மீண்டும் தொடங்கும் மிடுக்காய் திங்கள் வந்து அச்சுறுத்த வெள்ளி வரை இயந்திரத் தனமான வேகத்தோடு வாழ்கைச் சக்கரம் சுழலும்.

'நிகழ்ச்சி 9 மணிக்கு. இப்போதே பத்து நிமிடம் பிந்திவிட்டது குறிப்பிட்ட இடத்தில் கொண்டு வந்து இறக்கிவிட்ட போது நிகழ்ச்சி தொடங்கி விட்டதோ? தாமதித்துப் போகிறேனோ? எல்லோரும் என்னை ஒருமாதிரியாக பார்ப்பார்களே?' என பல கேள்விகளும் தடுமாற்றமும் எனக்குள் எழுந்தது.

"இன்னமும் தொடங்கேல்லை. ஏன் அவசரப்படுகிறீர்? எத்தனை மணிக்கு கூட்ட வரவேணும்?"

நிதானமாகக் கேட்டுக்கொண்டு என் முகத்தைப் பார்த்த கணவரிடம்,

"நீங்கள் வரவேண்டாம். நான் 'பஸ்'சில வாறன்."

"சரி வரேக்கை கவனமாக வரவேணும்."

சொல்லிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். இன்றாவது ஒரு குடும்பப் பெண்ணாக ஆறுதலாக அமைதியாக குடும்பத்தோடு சேர்ந்து இருந்து பிள்ளைகளைப் பார்க்கமுடியாமல் போகிறாயே என இரண்டு வார்த்தையாவது சொல்லியிருந்தால் மனது திருப்தியடைந்திருக்கும் போல ஏக்கம் மனதை நெருடியது.

உள்ளே இன்னமும் நிகழ்வுகள் தொடங்கவில்லை. அதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கு போவதென்றாலும் குறிப்பிட்ட நேரத்திற்கு அங்கே நிற்கவேண்டும் என்ற கணவரது கொள்கையைக் கடைப்பிடிப்பதற்கு நான் படும் அவஸ்த்தைகள் கொஞ்சநஞ்சமல்ல. சிலர் எங்கும் சர்வ சாதாரணமாகத் தாம் விரும்பிய நேரத்திற்கு வந்துபோய்க் கொள்வார்கள். ஆனால் அது எனக்குமட்டும் ஏதோ ஒரு குற்ற உணர்வினை ஏற்படுத்துவதால் சிலவேளைகளில் என்னை மாற்றிக்கொள்ள வேண்டும் எனப் பிரயத்தனப்படுவதுண்டு. ஒரு மனிதனுக்கு எத்தனை அலுவல்கள் தொல்லைகள் இருக்கும். தாமதித்துப் போவதற்கும் ஏதோ ஒரு தடை தானே காரணம். அதனைச் சாதாரணமாக ஏற்றுக்கொண்டு வருகையை உறுதிப்படுத்தினால் சரிதானே எனப் பல தடவைகளில் மனதினைச் சமாதானப்படுத்தி யிருக்கிறேன்.

பெண் எழுத்தாளர் பாரதி சிவராமன் பத்திரிகையாளர் ஒருவரோடு சுவாரஸ்யமாக எதையோ விவாதித்துக் கொண்டு நின்றார்.

வணக்கம் சொன்னபடி அவரைப் பார்த்துச் சிரிக்கிறேன். மங்களகரமான அவரது முகம் தாமரைப் பூவாய் மலர்ந்து சிரிக்கும் போது கண்களும் சிரிக்கிறது.

“வாங்கோ கவிதா! இவர் கவிதா. ஒரு எழுத்தாளர். தெரியுமோ?”

பேசிக்கொண்டிருந்தவரிடம் அறிமுகப்படுத்த முயன்றார்.

“இவர் தான் கவிதாவா? பெயரைக் கேள்விப்பட்டிருக்கிறன். இப்போ தான் ஆளைப் பார்க்கிறன். வாங்கோ.”

நட்புக் கலந்த சிரிப்புடன் நான் கேசவன் என தன்னை அறிமுகப்படுத்தினார் பத்திரிகையாளர்.

பாரதி சிவராமன் மீண்டும் தனது விவாதத்திற்குள் புகுந்து கொண்டு தனது கருத்துக்களை நியாயப்படுத்த முயல்வது தெரிந்தது.





பெண்கள் பற்றிய முற்போக்கான சிந்தனையும், இனம் மொழி இலக்கியம் பற்றிய உசாவலும், திறமைகள் நசுக்கப்படக் கூடாது அவற்றுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற கவனமும் கொண்டவராததால், அநீதிகளுக்காகக் குரல் கொடுக்கும் சுபாவமும் இயல்பாக அமைந்திருந்தாலும், அதனை நளினமாகவும் மென் மையாகவும் தென்றலின் உரசலாய் முன்வைக்கும் சாமர்த்தியமும் சேர்ந்திருந்தது. அதுவே எனக்கு பாரதி சிவராமனிடம் ஒரு பிடிப்பினை ஏற்படுத்தக் காரணமாயும் அமைந்தது. அவரைக் காணும்போதும் கருத்துக்களைக் கேட்கும்போதும் ஏற்படும் பரவசம் தனியான ஒன்றுதான்.

இப்போது இதுபற்றிய அலசலிலோ, அவர்களின் கலந்துரையாட லிலோ ஈடுபட முடியாதபடி மனக் குரங்கு திசைகெட்டுத் தாவித் திரிந்து தவித்தது.

மாமியுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு ‘மொபை’லில் இலக்கங்களை அழுத்துகிறேன். தொடர்பினைப் பெற முடியவில்லை. இரண்டு கிழமைக்கு முன்னர் திருகோணமலைக்குப் போயிருந்தபோது மாமியைப் போய்ப் பார்த்துவிட்டு வந்தேன். ஓடியோடிப் பொருள்தேடி, ஒவ்வொரு பிள்ளையையும் கரைசேர்க்கப் பட்டபாடு அவளுக்குத்தான் தெரியும்.

வெளிநாட்டில் ஒரு மகள். உள்நாட்டில் ஒரு மகள். இருவரையுமே நன்றாக வாழவைப்பதற்காக, அல்லும் பகலும் உழைத்துச் சேர்த்துக் கொடுக்கவேண்டியதெல்லாம் கொடுத்துவிட்டாள். ‘பிரசர்’, ‘கொலஸ்ரோல்’, ‘டயபிட்டிக்’ என்று எல்லா வருத்தங்களின் இருப்பிடமாக ஆகிவிட்ட பிறகு மாமியைப் பொறுப்பெடுக்க யாருமே இல்லாத நிலை.

குணாளன், அவள் தவமிருந்து பெற்ற ஒரே மகன். பலசரக்குக் கடையோடு அவனது காலம் கழிகிறது. நேரத்தோடு கலியாணம் காட்சி பார்க்கலாமென்றல் அதற்கும் கொடுப்பனவு இல்லாத கவலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அதிகமாக வாட்டுகிறது. பணம் தேடுவது, வீடு வாசல் வாகனம் வாங்குவது, வசதியான வாழ்க்கை வாழ்வது இவ்வாறு இலட்சியக் கனவோடு இரவு பகல் பாராது தனது கடையிலேயே பாடுபட்டவன், வயதினைப் பற்றி எண்ணிப் பார்க்க நேரமற்றுத் தவித்தான்.

ஒவ்வொரு வருத்தங்களுக்கும் தேவையான மாத்திரைகளை நேரம் தவறாமல் எடுத்துக்கொண்டு உயிரைத் தக்கவைத்துக்கொள்ளப் போராடும் மாமிக்கு ஓரே ஒரு கவலை, மகனைத் திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான்.

"டேய் தம்பி! நான் கனகாலம் இருக்கமாட்டன். உனக்கு ஒரு கால்க் கட்டைப் போட்டுவிட்டன் என்டால், நிம்மதியாய் போய்ச் சேர்ந்துவிடுவன். என்ன சொல்லுறாய்?"

"அம்மா இதைத்தானே நெடுகவும் உச்சாடனம் பண்ணுறியள். கொஞ்ச நாளைக்குப் பேசாமல் இருங்கோவன். நல்ல வீடு வாங்க வேணும், 'வான்' 'லொறி' எடுக்க வேணும். கலியாணம் கட்டினால் இதெல்லாம் செய்ய ஏலாது. சும்மா பேசாமல் இருங்கோவன்."

அவனுக்குக் காலையில் வீட்டை விட்டுக் கடைக்குப் போனால், நடுநிசி வரைக்கும் வீடோ, தாயோ, சாப்பாடோ எதுவும் நினைவுக்கு வருவதில்லை. கொடுக்கல் வாங்கல், தேவையான சாமான்கள், வரவேண்டிய பாக்கித் தொகைகள், அவற்றை எப்படிப் பெறுவது? கொடுக்குமதிகள், அவற்றை எப்படிக் கொடுப்பது, வேலையாட்களின் கணக்குவழக்குகள் இப்படி ஒரு தனியான உலகத்தில் வாழும் அவனிடம் எதனையுமே எதிர்பார்க்க முடியாது.

முதுமை, தனிமை, நோய் அதனைவிடப் பெற்ற பிள்ளைகளுக் கிடையேயுள்ள பகைமை, எல்லாம் சேர்ந்து மாமியை ஏகாந்தப் பெருவெளியில் கிடந்து ஏங்கித் தவிக்கவிட்டிருக்கவேண்டும். உணவு, தான் இருக்கும் இடம், தூய்மை எதுபற்றிய சிந்தனையும் இல்லாத





ஒரு விரக்தி நிலையில் காணப்பட்டாள். வீட்டில் ஆங்காங்கே தூசி படிந்து திட்டுத் திட்டாய்க் கிடந்தது. முகம் பார்க்கும் கண்ணாடி கூட இயல்பான தோற்றத்தை வெளிப்படுத்த முடியாத மங்கலான நிலையில் இருந்ததோடு, அங்கும் இங்கும் ஒழுங்கற்றுச் சிதறிக்கிடந்த பொருட்களும் மாமியின் மனநிலைக்குக் கட்டியங்கூறிக்கொண்டிருந்தன.

"மாமி இந்த வீட்டில இருந்தா உங்களுக்கு வருத்தம் கூடிவிடும். ஆரையாவது பிடிச்சுக் கூலி குடுத்துக் கூட்டித் துப்பரவாக்குங்கோ."

வீடு கிடந்த நிலையைப் பார்த்து மனம் பொறுக்காமல் சொன்னேன்.

"கை கால் நடுங்குது. தும்புத்தடி பிடிச்சுக் கூட்ட முடியேல்ல. பிறத்தியாரைக் கூப்பிட்டு வேலை செய்யவிட்டு அவையைப் பாக்க மேய்க்க என்னால ஏலாது. நான் இன்னும் கொஞ்ச நாள்தான் இருப்பன். கடவுள் என்னைக் கொண்டுபோய்த் துலைக்கக் காணோம். அடிப்பெட்டியில என்ர ஓலைய மறைச்சு வைச்சுப் போட்டான் போல."

மாமியின் ஆற்றாமை வெளிப்பட்டது.

தூசுகளைத் தட்டி, அங்கும் இங்குமாகக் கிடந்த பொருட்களை அவற்றுக்கான இடங்களில் வைத்து ஒழுங்கு படுத்தி அறைகளையும் வீட்டையும் சுத்தப்படுத்தினேன்.

"கவிதா! சாப்பாடு செமிக்குதில்ல. கூழ் குடிக்க வேணும்போல இருக்கு. நல்ல காரசாரமாய் கய்ச்சித் தருவியே?"

"ஓம் மாமி. அப்ப நான் சந்தைக்குப் போய் றால், நண்டு, மரவள்ளிக் கிழங்கு, பிலாக்கொட்டை, பயித்தங்காய் எல்லாம் வாங்கியாறன்."

மாமியின் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது.

"இந்தா காசு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் ரூபாவைக் கைக்குள் பொத்தினாள்.

"உங்களுக்கென்ன விசரே? சும்மா இருங்கோ."

காசைத் திருப்பிக் கொடுத்தபோது மாமி அதனை வாங்க மறுத்தாள்.

"நீ யெண்டபடியால இப்பிடிச் செய்து தாறாய். இஞ்ச எனக்கு உதவ ஆர் இருக்கினம்?"

"காசை வைச்சிருங்கோ. நான் உதவ இருக்கிறன் தானே. காசை வாங்காட்டி நான் கூழ் காச்சித் தரமாட்டன்"

மாமி அரை மனதோடு காசை வாங்கினாள். கூழுக்குத் தேவையானவற்றை வாங்கி வந்து, சமையலறையின் ஒரு பக்கத்தில் இருந்துகொண்டு அவற்றைச் சுத்தப்படுத்திக் கூழ் காய்ச்சுவதில் ஈடுபட்டேன். பயணக் களைப்பும், அலைச்சலும், வேலை செய்த களைப்பும் சேர்ந்து ஒரே தலைவலியாக இருந்தது.

"மாமி வாழைக்காய் வாங்க மறந்துபோனன். பொரிச்சுப் போட்டா நல்லா இருக்குமெல்லே!"

"அதில்லாட்டி என்ன மேனை, வேகிற குடலுக்கு வெள்ளியென்ன செவ்வாயென்ன எண்டு சொல்லுற மாதிரி. அதுவும் நீ வந்ததில என்ர தவனத்தைத் தீர்க்கிறாய். என்னை ஆர் பாக்கப்போகினம்? அந்த மனிசனும் வேளைக்கே போய்ச் சேர்ந்திட்டுது. நான் இப்பிடியே கிடந்து அழுந்தித்தான் சாகப் போறன்."

மாமியின் குரலில் வேதனை வெளிப்பட்டது. கண்களில் இருந்து கண்ணீர் நிரம்பி வழிந்தோடியது.

சுடச்சுடக் கூழை ஊதி ஊதி மாமி குடிக்கும்போது, கண்ணாலும் மூக்காலும் நீர் கொட்டியது. அதனைச் சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள்.





"நல்ல கூழ். கன நாளாய் ஆசைப்பட்டனான். நல்ல காரசாரமாய் இருக்குது. கனகாலத்துக்குப் பிறகு இப்பிடிக் கூழ் குடிக்கிறன். என்ர குஞ்சு நீ நல்லாய் இருப்பாய்."

மாமி மனப்பூர்வமாக நன்றியைச் சொன்னாள். அது எனக்குத் திருப்தியைத் தந்தது.

"என்னைக் கடைசி காலத்தில பாக்க ஒருத்தரும் இல்லை. பிறந்த இடத்தில உறவுகளோட இருந்து சாகவும் முடியாமல் இப்பிடித் தனிச்சுக் கிடக்கிறன். என்ர தலைவிதி."

"ஏன் மாமி நீங்க யாழ்ப்பாணத்தில போய் இருக்கலாம் தானே. அங்க உங்களை மகள் பாப்பாள் தானே?"

"அவள் நல்லாத்தான் பாத்துவிடுவாள். என்னோட கதைக்கிறதே யில்ல. கடசியாய் இருந்த வீடு வளவுக்கு சீவிய உரித்துக் காட்டி எழுதிப்போட்டன் எண்டு, அதையும் இனிமேல் எனக்குப் பங்கில்லை எண்டு புரக்கிராசி மூலமாய் பிடிச்ச பிடியில நிண்டு எழுதி வாங்கிப் போட்டாள்.

நான் அங்க போனா எங்க போய் இருக்கிறது? யாழ்பாணத்தில போய் இருக்க என்னட்ட என்ன இருக்கு? பிள்ளையள் எல்லாரும் சுயநலமாய் வாழுதுகள். பெத்து வளர்த்து, சீராட்டிப் பாராட்டி, தின்னாமல் குடியாமல் சேர்த்து ஒருத்தனிட்ட ஒப்படைக்கும் வரைதான். பிறகு நீ யாரோ நான் யாரோ. சின்னவள் இப்ப என்னோட கதைக்கிறதும் இல்ல."

மாமி அழுதாள். பாசம் பற்றுதல், கடமை என்பன பற்றிய சிந்தனை இன்றைய தலைமுறையினரிடம் குறைந்து தான் வருகிறது. வியாபாரச் சந்தையிலே பேரம் பேசும் மனோபாவத்துடனேயே பெற்றோர்களையும் பார்க்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கை என்ர தங்கச்சி உங்களைப் பாப்பாள். நான் அவளிட்ட சொல்லுறன். அங்க போய் இருக்கிறது நல்லது. என்னோட வந்து கொழும்பில இருந்தால் மாடி ஏறேலாது எண்டு சொல்லுறியள். உலாத்தித் திரியாம அறைக்குள்ளயே அடைஞ்சு கிடக்க ஏலாதெண்டும் சொல்லுறீங்க. இங்க இருந்து கடைசி காலத்தில ஏன் தனிமை, நோய், ஏலாமை எண்டு வருந்திக்கொண்டிருக்க வேணும்? நாளைக்கு ஏதாவது நடந்திட்டால்?"

"நீ நாளையைப் பற்றிக் கதைக்கிறாய். இப்பவே தேடுவாரற்றுக் கிடக்கிறன். இவனை ஒரு கரையில சேத்துப் போட்டன் எண்டால் பிறகு எனக்கு ஒரு கவலையும் இல்ல. தனி மரமாயிருந்து தவிச்சுப் போயிடுவான். அதுதான் இஞ்சை சுத்திக்கொண்டு கிடக்கிறன்."

"அவன் உங்களைப் பற்றிச் சிந்திக்காமல் கடையே கதி எண்டு கிடக்கிறான். நீங்க அவனைப் பற்றிக் கவலைப்படாமல் ஊரோட போயிருந்து வருத்தத்தைச் சுகமாக்கிக் கொள்ளுறது தான் நல்லது. அவனென்ன இன்னும் சின்னப் பிள்ளையே?"

"பெத்த மனம் கேக்குதே பிள்ள? ஏதோ நாய்த் தோல் எண்டாலும் தாய்த்தோல் எல்லே. நடக்கிறதைப் பாப்பம். எல்லாம் கோணேஸ்வரத்தான் விட்ட வழி. சிலவேளை உன்னோட தான் வந்திருந்து சாவன். நீ என்னப் பார்ப்பாய் தானே?"

மாமிக்கு என் மீது அப்படி ஒரு விருப்பமும் நம்பிக்கையும் ஏற்பட்டது ஏன் என்று எனக்கும் தெரியாது. 'சின்ன வயதில உன்ர கொம்மாவை விட உன்னை வளர்த்தது நான்தான். என்னோட தான் நீ நெடுக இருந்தனி. என்ர மடியில படுத்தாத்தான் உனக்கு நித்திரை வரும்' என்று அடிக்கடி மாமி சொல்லுவாள். அம்மாவும் 'மாமிக்கு உன்னோடதான் நெடுக விருப்பம். ஏனோ தெரியாது என்பள்'. மாமிக்கு நான் கடமைப்பட்டவள் என நினைத்ததாலோ என்னமோ, நானும் மாமி மீது அதிக பாசத்துடன்தான் பழகினேன்.





அப்பாவின் சகோதரங்களில் கடைசித் தங்கைதான் மாமி. அப்பாவும் அவரது மற்றச் சகோதரங்களும் இவ்வுலக பந்தத்தினை அறுத்துச் சென்று நீண்ட காலங்களாகிவிட்ட பின்பும், இன்னமும் எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கும் மாமியைச் சந்தோஷமாக வைத்திருந்தால் இன்னும் குறைந்தது பத்து வருடங்களாவது உயிர் வாழும் வல்லமையை இறைவன் மாமிக்குக் கொடுத்திருக்கிறான்.

"சின்னண்ணனின்ர பிள்ளையளுக்கை கவிதா தான் எனக்கு ஒண்டெண்டால் உதவுவாள். மனம் நோக விடமாட்டாள். அவள் என்னைத் தாயைப் போல பாப்பாள். இவனொருத்தன் இல்லாட்டி நான் கவிதாவோட போயிருந்துவிடுவன்."

மாமி சொந்த பந்தங்களுடன் என்னைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொள்வதைக் கதைகதையாக அவர்கள் சொல்வார்கள்.

"உனக்கும் மாமிக்கும் அப்பிடியென்ன ராசிப் பொருத்தம்? பெத்த பிள்ளையளை விட உன்னைத்தான் நல்லலாய் புழுகிக் கொண்டிருக்கிறா."

"ராசிபலன் பாத்து என்ன செய்ய? மனுசரை மனுசராய் மதிச்சு நடந்தால் எல்லாரும் அன்பாய் இருப்பினம் தானே."

கேட்பவர்களுக்குப் பதில் சொல்லுவேன்.

வரவேற்புரை, கருத்துரை பேச்சுக்கள் எனப் பல நிகழ்வுகள் நடைபெற்றுத் தேநீர் இடைவேளைக்காகன நேரம் வந்தபோதுதான், இவ்வளவு நேரமும் நடந்தவை என்ன? பேசப்பட்டவற்றில் ஏதாவது மனதில் பட்டிருக்கிறதா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டேன். இப்படி எத்தனை கூட்டங்கள், ஒன்றுகூடல்கள் நடந்தேறிவிட்டன. கண்ட பலன் பூச்சியம் தான். கூடிக் கலந்து பேசிச் சிரித்து ஆவேசமாக அறிக்கைகள் சமர்ப்பித்து, அத்துடன் எல்லாமே மறக்கப்பட்டு விட்ட சங்கதிகளாய்ப் போனவற்றை நினைத்து மனம் சமாதானப்பட்டுக் கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில வினாக்களை முன்வைத்துக் குழு ரீதியான கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. சிங்கள தமிழ் எழுத்தாளர்கள் இணைந்து தீர்மானங்களை முன்வைத்தனர். இருமொழி இலக்கியங்களையும் மொழிபெயர்ப்புச் செய்யவேண்டும் என்பதில் அதிக ஆர்வம் காட்டினார்கள். பல பயனுள்ள விடயங்கள் முன்வைக்கப்பட்டாலும், அவற்றின் நடைமுறைச் சாத்தியத்தில்தான் வெற்றி தங்கியுள்ளது. இல்லாவிட்டால் அவை வெறுமனே கூடிக் கலைந்த நிகழ்வுகளின் பட்டியலிலே சேர்ந்துவிடும்.

பத்திரிகையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர் என்ற பல்வேறு தரத்தினருடன் பழகும் சந்தர்ப்பம் அன்று கிடைத்தது. ஆத்மார்த்தமாகப் பழகும் இவர்களுக்கிடையில் மொழி தெரியாத குறைபாடு ஒன்று தான் வானத்துக்கும் பூமிக்குமிடையிலான விரிசலை ஏற்படுத்தியிருப்பதை உணர்ந்தேன்.

சிங்கள நண்பர்கள் விசுவாசமானவர்கள், உயிரையும் தரக்கூடியவர்கள் என அடிக்கடி கணவர் கூறுவதுண்டு. அன்ரன் பெரேரா, விக்கிரமர்தன, பிரேமதிஸ்ஸ இவர்களும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களும் கண்முன் வருகின்றனர்.

ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகளாய் எதுவித பாரபட்சமுமின்றி வாழ்ந்த ஆரம்ப கால அனுபவங்கள் குதூகலத்தினை மனதில் ஏற்படுத்த, அரசாங்க விடுதிகளில் கணவரின் தொழில் ரீதியாக இணைந்துகொண்ட நண்பர்களையும் அவர்கள் செய்த உதவிகளையும் எண்ணிப் பெருமைப்பட்டபடி, பக்கத்தில் அமர்ந்திருந்த நிர்மாணி பெரேராவிடம் எமக்குக் கிடைத்த சிங்கள நண்பர்களது உறவுகளின் நெருக்கத்தினை விபரித்துக்கொண்டிருந்தேன்.

நிர்மாணி கவிதையில் மிகுந்த ஆர்வமுள்ள பல்கலைக் கழக மாணவி. கவிதை நூல் ஒன்றினை வெளியிட்டுள்ளதாகக் கூறினாள்.





ஒன்றுகூடல் நிகழ்வின் நிறைவாக, இரு பிரிவினரும் நினைவுச் சின்னங்களைப் பரிமாறிக்கொள்ளும் நேரம் வந்துள்ளதை அமைப்பின் இணைப்பாளரும் கவிஞருமான அன்வர் அறிவித்தார். நிர்மாணி தான் கொண்டுவந்த நினைவுச் சின்னத்தினைத் தந்தபோது நானும் என்னிடமுள்ள நினைவுச் சின்னத்தை எடுத்துக் கொடுத்தேன்.

"மெமறபிள் படு தியனவா வாகே." ( எப்போதும் நினைக்கக் கூடிய பொருள் இருக்கிறது போல)

கண்களை அகலமாக்கிக்கொண்டு வியப்பினை வெளிக் காட்டினாள்.

"தன்மம பலண்ணங் கோ." (இப்போதே பார்க்கிறேனே)

அதனைப் பிரித்துப் பார்த்தாள். நான் கொடுத்தது பித்தளையில் செய்த ஒரு விநாயகர் சிலை.

"கண தெவியோ! அனே மட்ட ஹறி கமதி." (விநாயகக் கடவுள். எனக்கு மிகவும் விருப்பமானவர்)

தனது நெஞ்சோடு அணைத்தபடி மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

"மென்ன மம ஒயாட்ட தீப்பு எக." (இதுதான் நான் உங்களுக்குத் தந்தது)

எனது கையிலிருந்ததை வாங்கித் தானே பிரித்தாள். அதற்குள்ளிருந்த அழகிய 'பிரமிட்' ஒன்றினை எடுத்துக் கையில் தந்தாள். நினைவுச் சின்னங்களின் பரிமாற்றத்தில் ஏதோ ஒரு அர்த்தம் நிறைந்த எதிர்காலம் எம்மைத் தேடி வந்தது போன்ற அதிர்வினை ஏற்படுத்தியவேளை எனது 'மொபைல்' சிணுங்கியது.

"ஹலோ! ஹலோ!!"

மறுபுறத்தில் மாமியின் குரல் கேட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கவிதா! இண்டைக்கு இரவு உன்ர வீட்டுக்கு வாறேன். 'பஸ்'சில் இருந்து இறங்கியவுடன 'கோல்' எடுக்கிறன். வந்து கூட்டிக்கொண்டு போ."

தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட மனதில் இதுவரை இல்லாத மகிழ்ச்சி பொங்கியது.

எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டிருந்தபோது, நிர்மாணி என்னிடம் வந்தாள்.

"மாவ அமத்தக கறண்ட எப்பா. மம கோல் தென்னங் கோ. நம்பர் எக தென்டக் கோ." ( என்னை மறந்துபோக வேண்டாம். நான் 'கோல்' எடுக்கிறேனே. நம்பரைத் தாருங்கோ)

உதட்டில் ஒரு விரலை வைத்துக்கொண்டு தஞ்சாவூர் பொம்மைபோல அபிநயம் காட்டினாள். அவளது மறுகையில் உள்ள 'மொபை'லில் எனது 'மொபை'லின் இலக்கங்கள் பதியப்பட்டன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் தரமான
பெண் சிறுகதையாசிரியர்களில்
ஒருவராக ராணி சீதரனைக்
குறிப்பிடலாம்.
இவர் கல்விப் புலத்துடன்
நீண்டகால அனுபவம்
கொண்டவராக இருப்பதோடு,
முதுகலைமாணி முதுகல்விமாணி
ஆகிய பட்டங்களைப்
பெற்றுள்ளார்.
இவரது சிறுகதைகள்
நம்பிக்கையூட்டும்
பாத்திரங்களைக் கொண்டதாகவும்,
சமூகத்தின் நலன் பேணுவதாகவும்
அமைந்திருக்கின்றன.
பெண் விடுதலை, இனவொடுக்கல்,
சமூக இழிநிலைகளைச்
சுட்டிநிற்கும்
இவரது படைப்புக்கள்
ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்கு
உரம் சேர்ப்பனவாக உள்ளதை
மறுக்க முடியாது.

தாமரைச் செல்வி.

ISBN 978-955-97102-4-0

9 789559 710240

விலை 250.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org